கல்கி



அடுத்த இதழில்: வெற்றித் திருநகர்

KALKI
17·10·1965
35 காசு







கல்கி




தூரத்திலுள்ள எதிர்காலத்தில் ஏற்படக்கூடியதைப் பற்றி யோசிக்காதவன், உடனடியாகவே துன்பம் அநுபவிப்பான்.

— கன்பூஷியஸ்

பொருளடக்கம்

விசுவாவசு ஐப்பசி 1 - அக்டோபர் 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


காமன்வெல்த் பற்றி
யாருக்கு அக்கறை?
அமெரிக்க உதவி
யாருக்கு வேணும்?
பாகிஸ்தான் போரில்
இந்திய ராணுவத்தின்
வெற்றி
சீனா
PK



மலர் 25 ★ இதழ் 12

சீனத்தைத் தடுக்க ஓர் அரண்

ராஜாஜி

பாகிஸ்தானை வலிவுடன் எதிர்த்துக் கடுமையாகத் தண்டிக்கும் காரியத்தை நாம் நல்ல முறையில் சாதித்துள்ளோம். நல்லதோ, கெட்டதோ, இரண்டும் கலந்ததோ எப்படிப்பட்ட நோக்கமாயினும் அதைப் பலாத்காரத்தின் மூலம் நடத்திக் கொள்ளப் பார்ப்பவர்களை உடனுக்குடனே வன்மையுடன் தடுத்து நிறுத்த வேண்டும். பாகிஸ்தான் சர்க்காரும், அந்நாட்டு மக்களும் தங்கள் நோக்கத்தைச் சைனிய பலத்தையும் ஆயுத பலத்தையும் கொண்டு சாதிக்க முயன்றிருக்கக் கூடாது என்று பாடம் புகட்டிவிட்டோம்.

ஆனால் இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புக் கொண்ட அண்டை நாடுகளாகத்தான் எப்படியும் வாழ வேண்டும்; சுதந்திர வாழ்முறையை நாசமாக்கும் சீன ஏகாதிபத்திய விஸ்தரிப்பைத் தடுப்பதில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றுகூடித் தற்காப்பு செய்து கொள்ளத்தான் வேண்டும். சென்ற மாதம் பாகிஸ்தானுக்குத் தேவைப்பட்ட படிப்பினை நமது ராணுவ வீரர்கள் தீரத்தோடு அற்புதமாக அளித்துவிட்டார்கள். மனிதனுக்கு ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு விதி பிரத்தியேகக் கடமைகள் ஏற்படுகின்றன. அவ்வப்போது அவற்றைச் சிறப்பாக ஆற்ற வேண்டும். நமது ராணுவத்தினர் சமயத்துக்குத் தேவைப்பட்ட கடுமையான கடமையைச் சிறப்பாகச் சாதித்து விட்டனர். எனினும், முடிவான நோக்கத்தை நாம் மறக்கலாகாது.

'அமெரிக்காவும் ருஷியாவுமாகச் சேர்ந்து இந்திய — பாகிஸ்தான் சச்சரவைத் தீர்க்க முயன்றாலன்றி அதற்குச் சாதகமாக இருக்கும்' என்று ஒரு பிரபல நிருபர் கூறுகிறார். 'சச்சரவு குறித்து அமெரிக்கா எந்தப்புறமும் சாராமலிருப்பதும், இந்தியாவிடம் ருஷியா அநுதாபம் காட்டுவதுமே அவற்றின் கூட்டு முயற்சியை இந்திய சர்க்கார் வரவேற்பதற்குக் காரணம்' என்று 'அதிகாரபூர்வமான சர்க்கார் வட்டார'த்திலிருந்து தெரிய வருகிறதாம். இத்தகைய ஒரு காரணத்தைப் பட்டவர்த்தனமாகக் காட்டியபின், அமெரிக்க — ருஷியக் கூட்டு முயற்சிக்குப் பாகிஸ்தானின் ஆட்சேபணையையன்றி வேறெதை எதிர்பார்க்க முடியும்? கூட்டு முயற்சியின் விளைவு இந்தியாவுக்குச் சாதகமாக இருக்கும் என்று தொனிக்கும் முறையில் முன்கூட்டியே காரணம் காட்டுவது சமாதானத் தீர்வுக்கு உதவும் வழியல்ல. இதுபோன்ற உட்காரணங்களைச் சமயோசிதமின்றி வெளிப்படுத்துவோர் கையில் நாம் அகப்பட்டுக்கொண்டு அலையும் வரையில் சமாதான நோக்கத்தை அடைவதில் முன்னேற முடியாது.

'வெளியாரின் தலையீடின்றி இந்தியா—பாகிஸ்தான் வேற்றுமைகள் தீர்க்கப்பட வேண்டும்' என்று யுகோஸ்லாவ் ஜனாதிபதி டிட்டோ கூறி, இந்திய முயற்சிகளுக்கு அநுதாபமும் ஆதரவும் தெரிவித்தார் என்று செய்தி வெளியாகியுள்ளது. 'வெளியார் தலையீடின்றி' என்ற இரண்டு வார்த்தைகளுக்குள் மிகுந்த உட்பொருள் அடைக்கப்பட்டிருக்கிறது. ருஷியாவும் ஏறக்குறைய இதே வார்த்தைகளில் தனது தற்காலக் கருத்தை வெளியிட்டுள்ளது. மேல்நாடுகளின் மீது

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா
— பாரதியார்

இந்தியா கொண்டுள்ள கோபத்தின் காரணமாகவும், 'வெளியார் தலையீடின்றி' பரஸ்பரப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்வது என்கிற ஸோவியத் மந்திரத்தின் பயனாகவும் முடிவில் நாம் ருஷியா சொல்வதையே ஏற்றுக் கொள்ள வேண்டியதாகும் என்று அஞ்சுகிறேன். ருஷியாவின் நலன்களும் நோக்கங்களும் இப்பிரச்னையில் எப்படிச் சிக்கியுள்ளன என்பதை நாம் ஊகிக்கலாம். இப்போது இந்தியாவின் 'ராஜதந்திரம்' உருவாகி வரும் முறையைப் பார்க்கும் போது, இந்திய — பாகிஸ்தான் சச்சரவு இறுதியில் எவ்விதமாகவோ சீன — ருஷிய வேறுபாடுகளைக் குறைக்கவே ருஷியாவுக்கு உதவக் கூடும் என்றும் எண்ணுகிறேன்.

காச்மீர விவகாரத்தை அப் பகுதி மக்களின் விஷய ஞானத்துடன் கூடிய சுதந்திரக் கருத்தின்படி உரிய சந்தர்ப்பத்தில் தீர்ப்பது ஒரு தனிப் பிரச்னை. பாகிஸ்தானும் இந்தியாவும் நட்பை வளர்த்துக் கொண்டு ஒத்துழைக்க வேண்டும் என்பது வேறொரு தனிப் பிரச்னை. இரண்டுமே முக்கியமானவை. இரண்டுமே சீரிய நோக்கம் கொண்டவை. எனினும் இவ்விரண்டு தனிப் பிரச்னைகளைக் கலப்பதால் மனக் குழப்பமே ஏற்படுகிறது; இரண்டு காரியங்களிலுமே உபத்திரவங்களை உண்டு பண்ணுகிறது. அடிப்படையிலிருந்தே தொடங்கி நிரம்பப் புனராலோசனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. மேல்நாடுகளின்மேல் துவேஷமும் அருவருப்பும் கொண்ட சிலர் இன்றைய நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இந்திய சர்க்காரைத் தவறான பாதையில் செலுத்தப் பார்க்கிறார்கள். அவர்களுடைய அபாயகரமான யோசனைகளிலிருந்து ராஷ்டிரபதியும் பிரதமரும் தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். அதோடு காங்கிரஸ் கட்சியும் தன் அறிவைக் கலக்கமில்லாமல் தெளிவாக வைத்துக் கொள்ள வேண்டும். மேல்நாடுகளிடம் துவேஷம் கொண்டவர்கள் காட்டும் தவறான திசையிலிருந்து தலைவர்களை விடுவிக்கும் பணிக்கு உதவுவதே காங்கிரஸ் கட்சியின் தற்போதைய கடமையாகும். நன்றி மறவாமை என்ற நமது தேசப் பண்பை நாம் உணர்ந்து வெளிப்படுத்த வேண்டும். நன்றி மறப்பது நல்ல அரசியல் கொள்கையுமல்ல; தருமமும் அல்ல. கடந்த பதினைந்து ஆண்டுகளில் 'தேச அபிவிருத்தி' என்கிற பெயரில் ஏராளமாகக் கடன் வாங்கி நம் நாட்டை மேல் நாட்டினருக்கு மிகவும் நன்றிக் கடன்பட்டவராக்கியுள்ளனர் நம்மை ஆளும் கட்சியினர். கடன் படக் காரணமாகிய கட்சியினரே இதனை மறக்கவோ இலேசாகத் தள்ளிவிடவோ முடியாது. அப்படி மறந்து போனால் பயங்கரமான விளைவுகள் ஏற்படும்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, பெரும் பலம் பொருந்திய விரோதியை முறியடித்து விட்டதாக நினைத்து நாம் அளவுக்கு மீறி வீராப்புப் பேசிக் கொள்வது சரியல்ல. ருஷியாவும் அதன் உபக்கிரகங்களும் நமக்கு உதவி செய்யும் என்று எதிர்பார்த்து, நமக்கு உண்மையில் யாருடைய உதவியும் அநுதாபமும் அவசியமாகத் தேவையோ அவர்களிடம் நெப்போலியன், ஹிட்லர் இவர்களின் பாணியில் சூரம் பேச வேண்டியதில்லை. சௌகரியமான நிலையில் இல்லாத ஒரு தேசத்துக்கு அடக்கமே ஆபரணம் என்று உணர்வோமாக. பெருமிதம் என்பது எப்போதுமே ஒரு நல்ல சம்பத்து என்று சொல்ல முடியாது. ஆனால் அடக்கம் எந்தச் சமயத்திலுமே ஓர் அரிய சம்பத்தாகும்.

நமது வெளிநாட்டுத் தூதர்களின் தர்க்க வாதத் திறமை குறைவாக இருப்பதால்தான் அந்நிய தேசத்தினர் நமது தரப்பைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சி நினைப்பதாகத் தெரிகிறது. இந்தக் குற்றச்சாட்டு சிறிதும் நியாயமானதல்ல. நமது அயல் நாட்டுத் தூதர்களிடம் சில குறைபாடுகள் இருக்கலாம்; ஆயினும் ராஜரீகத்தில் நாம் அடைந்துள்ள தோல்விக்கு அவர்கள் காரணமல்ல. நாம் ராஜரீகத்தில் தோல்வியடைந்து விட்டோமென்பது நிச்சயம். ஏனெனில், ருஷியாவைத் தவிர எல்லா உலக நாடுகளும் நமக்கு எதிராக உள்ளன என்று ஆள்கிற கட்சியினரே சொல்கிறார்கள். ருஷியாவும்கூட இந்தியாவின் போக்கைத் தான் பூரணமாக ஆதரிக்கப் போவதாகத் தெளிவுபடுத்த இப்போது முன்வரவில்லை. தடஸ்தமாகத்தான் பேசி வருகிறது. இந்த ராஜரீகத் தோல்விக்கு வல்லரசுகளின் விரோத பாவமோ, நமது தூதர்களின் தவறுகளோ காரணம் அல்ல. பிரச்னையின் பான்மையும், இத்தனை ஆண்டுகளாகச் சர்க்கார் அதனைக் கையாண்டு வரும் முறையுமே தோல்வியின் காரணம்.

இப்போதேனும் உண்மையைப் புரிந்து கொள்வோம். சமீபத்தில் சீனம் பிறப்பித்த 'இறுதி எச்சரிக்கை' வெற்றுவேட்டான போதிலும் சீனத்தின் விஸ்தரிப்பு மனப்பான்மை அதனால் வெளிப்படையாகிறது. அதுவே நமக்குப் பெரும் அபாயமாகும். சீனம் தனது திட்டங்களில் பாகிஸ்தானையும் சிக்க வைக்க வேண்டுமெனக் கருதி அதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் இரகசியமாகவும் முயற்சி செய்யும். எனவே, சீனத்தை எதிர்த்து நிற்பதில் நமது பாதுகாப்புச் சக்தியைப் பலப்படுத்துவதிலேயே நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

'சீனம் நம்மைப் பெருமளவில் தாக்கினால் உடனே அமெரிக்கா தானாகவே தனது நலன்களை உத்தேசித்துச் சீனத்தை எதிர்த்துப் போரிடும்; நாம் அமெரிக்காவை உதவி கோருவதோ, அதனுடன் உடன்படிக்கை செய்து கொள்வதோ, அவசியம் இல்லை' என்று இன்றைய நிலவரத்தில் நாம் நம்பியிருப்பது பெரும் தவறு. இதே போக்கில் நாம் சென்றால் எதிர்காலத்தில் நம் கொள்கை உருவாகும் விதம் இந்த நம்பிக்கையை மேலும் பொய்யாக்கும். நாம் மேல்நாட்டு வல்லரசுகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டாலும் செய்து கொள்ளாவிட்டாலும் ஒன்றை மட்டும் நாம் உறுதியாக உணர வேண்டும். 'நமக்காக அமெரிக்காவோ ருஷியாவோ நாம் ஒன்றும் செய்யாமல் இருந்தாலும் போரில் இறங்கி உலக

யுத்தத்தை உண்டாக்கும்; அதனால் நாம் நன்மை பெறலாம்' என்ற பிரமையை மனத்திலிருந்து போக்க வேண்டும். நமது சுயமான ராணுவ சக்தியை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பட்ஜெட்டையும் தொடர்ந்து அமெரிக்காவிடம் யாசகம் கேட்கும்போதே அதனிடம் நட்போ, சாமானிய மரியாதையோ கூடக் காட்டாத நாம் எப்படிப் பெரும் ராணுவ உதவியை எதிர்பார்க்க முடியும்? மேலும் ருஷியாவும் அமெரிக்காவும் பனிப் போர் மனப்பான்மையை மாற்றிக் கொண்டு விட்டன என்றே தோன்றுகிறது. இப்போது அவை புது யுத்தங்களைத் தொடங்கவோ, அவற்றில் பங்குகொள்ளவோ முன் போல் விரும்பவில்லை. இரு தரப்பினரும் பெரும் அபாயகரமான படைபலம் பெற்றிருப்பதே யுத்தத்தில் இறங்குவதற்குத் தடையாக உள்ளது. மேல்நாட்டு வல்லரசுகளை அசட்டையாகவும் நம்பாமலும் குற்றங்கள் சொல்லியும் இப்போது பின்பற்றும் கொள்கையையே நாம் தொடர்ந்து பின்பற்றினால் சீனம் தன் இஷ்டப்படி இந்தியா, பாகிஸ்தான் பகுதிகளைச் சிறிது சிறிதாகக் கொறிப்பதை அமெரிக்கா ருஷியா இரண்டுமே தடுக்காது. கம்யூனிஸத்துக்கு எதிர்ச் சக்தியாக விளங்க வேண்டும் என்று அமெரிக்கர்கள் கருதிய போதிலும், 'அந்நிய விவகாரங்களிலிருந்து நாம் ஒதுங்கி யிருப்போமே' என்ற உணர்வு அம் மக்களில் ஒரு பெரும் பகுதியினர் மனத்தில் வலுவாக இருப்பதையும் நாம் உணர வேண்டும்.

அஹிம்சையில் எனக்குள்ள நம்பிக்கையை நான் கைவிட்டு விடவில்லை. எனினும் காலத்தின் தேவையை அநுசரித்துச் சமீபத்தில் பின்வரும் கருத்தை வெளியிட்டேன். ''இருபது லட்சம் மக்கள் கொண்ட ஒரு தேர்ச்சி பெற்ற ரிஸர்வ் படையை நாம் அமைத்தாக வேண்டும். நாற்பது குடும்பத்துக்கு ஓர் இளைஞன் வீதம் முன் வந்து, தாங்கள் முப்பத்தைந்தாவது வயது வரை இந்திய ராணுவத்தில் சேவை செய்வதாகப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு பயிற்சி பெற வேண்டும். முப்பத்தைந்தாவது வயது வரை அவர்கள் பிரம்மச்சரிய சங்கற்பம் பூண வேண்டும். விவாகம் செய்து கொள்ளாமல் இருப்பதால் அவர்கள் பொதுப் பணிக்குத் தீவிர ஈடுபாட்டுடன் உழைக்க முடியும் என்பதோடு, அவர்களுக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டாலும் அதனால் ஏற்படும் குடும்பக் கஷ்டம் குறைவாக இருக்கும்.'' என்னுடைய இக்கருத்துக்கு மேலும் உருவம் தந்து, என்ன செலவு ஏற்பட்டாலும் உடனடியாக இதனைக் காரியத்தில் அமுல் செய்ய வேண்டும். சீனத்துக்கும் நமக்குமிடையே இமாலயத் தொடர் ஒரு பெரும் தடுப்புச் சுவராக உள்ளது என்று நம்பியிருந்தோம். நம் நம்பிக்கை பொய்த்து விட்டது. அதற்குப் பதிலாக இருபது லட்சம் இளைஞர் படை நம் நாட்டுக்குத் தலை சிறந்த அரணாக அமையும். அதோடு நாட்டில் ஒழுங்கீனம் குறையவும், நெறி உயரவும் இத்திட்டம் உதவும். நாற்பது குடும்பத்துக்கு ஒருவர் வீதம் ராணுவத்தில் சேர்ந்தால் இருபது லட்சம் போர் வீரர்கள் கிடைப்பார்கள் என்பது போலவே, இதற்கு இசைவாக நர்ஸுகள் படையும் திரட்ட ஒரு திட்டம் வகுக்க வேண்டும். இது போர் வீரர் திட்டத்தைப் பூர்த்தி செய்யும். டாங்கிகளும் விமானங்களும் முக்கியமானவைதாம்; ஆனால் தீரத்தோடு உயிரைத் தரும் க்ஷத்திரியப் பான்மை கொண்ட மக்கட் படை அவற்றை விட முக்கியமானது. அது இருந்தால் மற்றவர்களின் துணையும் நமக்கு வேண்டிய அளவு தாராளமாகக் கிடைக்கும். அபாயங்கள் நம்மைவிட்டுத் தாமாகவே விலகும்.

சோஷலிஸம் கைவிடப்படுகிறது!

சோஷலிஸம் என்பது ஆள்கிற கட்சியின் கொள்கை என்று கருதப்படுகிறது. இந்த வார்த்தைகளுக்குச் சரியான பொருள் என்ன என்று புரிந்து கொள்வோமாக! ஏற்கனவே உற்பத்தியாகியுள்ள செல்வத்தை—யார் எப்படி இச்செல்வத்தை ஈட்டினர் என்பது எவ்வாறிருப்பினும் சரி—சேகரித்து எல்லா ஏழை மக்களுக்கும் இதனைப் பிரித்துத் தருவதுதான் சோஷலிஸமா? இதன்படி செல்வத்தை எல்லோருக்கும் பகிர்ந்து தந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அதன் பின் புதிதாகச் செல்வம் விருத்தி பெறுவது எப்படி? எவரிடமுமே போதிய மூலதனமில்லாத நிலையில் செல்வம் பெருகும் என்று எதிர்பார்ப்பதற்கே இடம் இல்லை. ஒரே நாளில் சிலருடைய செல்வத்தையெல்லாம் கொள்ளையடித்து அதை எல்லோருக்கும் பகிர்ந்து தரும் இம்முறை சோஷலிஸமாக இருக்க முடியாது. எனவே, அது பழைய செல்வங்களைப் புது முறையில் விநியோகம் செய்வதாக மட்டுமின்றி, புதிதாகச் செல்வம் வளரவும் வகை செய்ய வேண்டும். அதாவது உற்பத்தி தடையுறாமல் பெருகிக் கொண்டே யிருக்கவும், அதனால் வளரும் நாட்டின் செல்வம் சீராக விநியோகமாகவும் சோஷலிஸம் ஒரு திட்டமாக இருத்தல் வேண்டும். திறமையும், விரயமின்மையும் இருந்தாலே உற்பத்தி உயர்ந்து செல்வம் வளரும். இவ்வாறு நாட்டின் உற்பத்தியை நல்ல முறையில் அமைப்பதில் சோஷலிஸம் படுதோல்வியடைந்து விட்டது. சோவியத் ருஷியாவில் நடப்பது இதை அழுத்தந் திருத்தமாக நிலைநாட்டிவிட்டது. தோல்வியை ருஷியா ஒப்புக் கொண்டுள்ளது. சர்க்காரின் தனி முதலாளித்துவத்தை அது இன்னமும் கைவிடவில்லை யெனினும் உற்பத்தி, நிர்வாகம் இவற்றின் முறையை முற்றிலும் மாற்றி அமைத்துள்ளது. சர்க்காரின் தொழில் நிர்வாகத்திலேயே, உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் லாப நோக்கத்தையும் ஒட்டுப் போட்டிருக்கிறது. சர்க்கார் பெப்பந்திகள் சம்பளம் பெறுவதோடு தாங்களே சொந்தச் சொத்தில் தொழில் நடத்துவது போல், லாபத்திலும் பங்கு பெறுகிறார்கள்.

ராஜாஜியின் கருத்துக்கள்

நாமும் நமது அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட வேண்டும் என்ற கருத்து முற்றிலும் தவறானது. அணு ஆயுதத் தயாரிப்பை விஸ்தரிப்பது தரும நீதியில் தவறு என்பது மட்டும் அல்ல; அதுவே ராணுவ நீதியிலும் அவிவேகமான கொள்கையாகும். ஒரு கொள்கையை நிலைநாட்டுவதற்குத் தலைசிறந்த வழி நாமே உதாரணமாக நடந்து காட்டுவதுதான். உலக முழுவதிலும் அணு ஆயுதங்களைப் பரிகரணம் செய்ய வேண்டுமென்ற நமது தேசியக் கொள்கையைத் தீவிரம் குன்றாமல் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

ஸின்பாத் என்பவன் தன் தோளில் ஏறி அமர்ந்த கிழவனைக் கீழே இறக்க முடியாமல் அவதிப்பட்டது போல், அணு ஆயுத வல்லரசுகள் தாங்களாகச் சுமத்திக்கொண்ட இந்த ஆயுதத்தை இப்போது கழித்துக் கட்ட இயலாத நிலையில் உள்ளன. இச்சமயத்தில் நாமும் ஒரு கிழவனைத் தூக்கித் தோள் மீது வைத்துக் கொள்ள வேண்டாம். அமெரிக்கா, ருஷியா இவற்றின் சங்கட நிலையைக் கண்டு நாம் பாடம் பெற வேண்டுமேயன்றி அவற்றைப் பின்பற்றலாகாது. அணு ஆயுதத் தயாரிப்பை விஸ்தரித்துச் சோதனைகள் நடத்துவதால் கதிரியக்க ஆபத்துக்கள் பெருகுவது மட்டுமின்றி, இச்சர்வநாச ஆயுதத்தை ஒருகால் வாஸ்தவமாகவே பிரயோகிக்கக் கூடிய பேராபத்தான வாய்ப்பும் பெருகுகிறது.

அணு ஆயுதத்தைப் பற்றி அறிந்தோர் யாவரும் இதனை ஒப்புக்கொள்வர்.

* * *

'பாகிஸ்தானிடமிருந்த அமெரிக்க பாட்டன் டாங்கிகளைக் காட்டிலும் சக்தியில் குறைந்ததாகக் கருதப்படும் பிரிட்டிஷ் சென்டூரியன் டாங்கிகளையே இந்தியா உபயோகித்து வெற்றி கண்டுள்ளது. பாகிஸ்தானியர் பாட்டன் டாங்கித் திருகுகளை இயக்குவதற்குள் இந்திய ராணுவத்தினர் மூன்று முறை தங்கள் டாங்குகளால் சுட முடிந்தது.' இதைப் படித்த போது குருக்ஷேத்திரத்தில் துரியோதனனுக்கு நேர்ந்த நிலை நினைவு வந்தது. என்னுடைய 'வியாசர் விருந்து' புத்தகத்தில், 'தான் பலியாத கவச தாரணம்' என்ற அத்தியாயத்தில் இப்பகுதியைப் பாருங்கள்:

> ''தனஞ்சய, அதோ பார், பின்னால் துரியோதனன் வருகிறான்! இதைவிட உனக்கு வேறு ஒரு நல்ல சமயம் கிடைக்காது. வெகு காலமாக அடக்கிய கோபத்தை இப்போது தீர்த்துக் கொள். இவனே அனர்த்தங்களுக்கெல்லாம் மூல காரணம். இப்போது உன் பாணங்களுக்கு இலக்காக வந்திருக்கிறான்.....'' என்று கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குத் தூரத்தில் வந்து கொண்டிருக்கும் துரியோதனனைக் காட்டினான். அதன் மேல் தேரைத் திருப்பித் துரியோதனனை நோக்கிச் சென்று அவனை எதிர்த்தார்கள்....... கடுமையான போர் நடந்தது.
>
> ''பார்த்தா! இது என்ன ஆச்சரியம்! உன்னால் விடப்பட்ட அம்புகள் ஏன் துரியோதனனைத் துன்புறுத்தவில்லை? காண்டீபத்திலிருந்து விடுபட்ட அம்புகள் வீணாகப் போனதை இன்றுதான் பார்க்கிறேன்....'' என்றான் கிருஷ்ணன்.
>
> ''கிருஷ்ணா! இவன் துரோணரிடமிருந்து கவசம் பெற்று அதைப் போட்டுக் கொண்டு நிற்கிறான் என்றே எண்ணுகிறேன். இந்தக் கவசதாரண ரகசியம் துரோணர் எனக்குச் சொல்லியிருக்கிறார். இவன் மேல் அந்தக் கவசத்தை ஆசாரியார் போர்த்தியிருக்கிறார் என்றே எண்ணுகிறேன். மற்றொருவரால் பூட்டப்பட்ட இந்தக் கவசத்தை இவன், மாடு பாரத்தைச் சுமப்பது போல் சும்மா சுமந்து நிற்கிறான். இப்போது என் சாமர்த்தியத்தைப் பார்'' என்று அர்ச்சுனன் பாணங்களை விட்டுத் துரியோதனன் குதிரைகளையும் சாரதிகளையும் தேரையும் இழக்கும்படி செய்தான். பிறகு வில்லையும் கையுறையையும் அறுத்தான். அதன் பின் கவசம் மூடாத உள்ளங்கைகளிலும் நகக் கண்களிலும் நுண்ணிய அம்புகளை விட்டுச் செலுத்தித் துன்புறுத்தினான். துரியோதனன் தோல்வி அடைந்தான்.

* * *

ராணுவ உடுப்புப் போடாத ஊடுருவல்காரர்களைக் குறித்துத் தான் எதுவும் செய்ய முடியாது என்று பாகிஸ்தான் கூறுவது சட்டப்படி ஒரு வாதமாயிருக்கலாம். எனினும், சிறிதாவது நேர்மையில் லட்சியம் கொண்டுள்ள எந்த ஒரு சர்க்காரும் இவ்விதம் வாதிப்பது அதற்கு இழுக்காகும். காச்மீரம், பஞ்சாப், ராஜஸ்தானம் முதலிய பகுதிகளுக்கு ஆயுதம் தாங்கிய ஊடுருவல்காரர்களை அனுப்பி வைத்த பாகிஸ்தான் இப்போது தாங்கள் இருக்கும் இடத்தில் அடையாளம் தெரியாமல் மறைந்து வாழுகின்ற அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதற்கு உபாயம் இல்லை என்று சொல்லக் கூடும். இதில் உண்மை உண்டு என்று கொண்டாலும் இப்போது பாகிஸ்தான் செய்யக் கூடியது ஒன்று உண்டு. இதனை அது செய்தே ஆக வேண்டும். அதாவது, ஊடுருவல்காரர்கள் எங்கு இருப்பினும் அவர்கள் இந்திய சர்க்கார் அதிகாரிகளிடம் சரண் அடைந்துவிட வேண்டும் என்று பாகிஸ்தான் பகிரங்க அறிக்கை விடுக்க வேண்டும். சரணடைந்தவர்களைத் தீங்கின்றித் திருப்பி அனுப்பி வைக்க இந்தியா இணங்க வேண்டும். இதற்குமுன் கேள்விப்பட்டிராத ஒரு சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு இது ஒன்றே கௌரவமான உபாயமாகும்.

அன்பார்ந்த நேயர்களுக்கு

தீபாவளி வாழ்த்துக்கள்.

சீன பாகிஸ்தான் ஊடுருவல்களைக் கண்டு ஆர்த்தெழுந்து அவர்களை விரட்டி அடித்த நம் வீரர்களின் தீரத்தை எண்ணிப் பூரிப் படைந்துள்ள நாம் இவ்வாண்டு தீபாவளித் திருநாளைத் தனிப்பட்ட உற்சாகத்துடன் கொண்டாடப் போகிறோம்.

கொடுமைகளுக் கெல்லாம் முடிவு கட்டி அறம் நிலைக்கச் செய்த இறைவனின் திருவருளை நன்றியுடன் நினைந்து குதூகலத் துடன் கொண்டாடி மகிழும் திருவிழாவே தீபாவளி. புராண கால அரக்கர்களைவிடப் பயங்கரமான உணவுப் பஞ்சம், லஞ்சம், யுத்தம் போன்ற கொடுமைகளை யெல்லாம் அழித்து நாட்டில் சுபிட்சமும் தர்மமும் நிலவச் செய்து மக்களின் நல்வாழ்வுக்குத் துணை புரிய வேண்டும் என்று இறைவனை வேண்டிப் புனிதமான நினைவுகளுடன் இந்த ஆண்டு தீபாவளி மலரைத் தமிழ்ப் பெரு மக்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

இந்த வருஷம் கல்கி தீபாவளி மலர் பக்கத்துக்குப் பக்கம் சிறப்பாக அமைந்து புத்தொளி வீசி ஒளிர்கிறது.

அண்டங்களைப் படைத்து ஆட்டி வைத்து வேடிக்கை பார்க்கும் ஆண்டவன் உமா தேவியிடம் சொக்கட்டான் ஆட்டத்தில் தோல்வியடையும் தருவாயில் இருக்கும் 'திருவிளையாடல்' காட்சியை தம் கைவண்ண மெல்லாம் காட்டி வழங்கியுள்ளார் ஓவிய விற்பன்னர் மணியம். இது மலரின் அட்டையை அலங்கரிக்கிறது.

மலரின் முகப்பை முனிபுங்கவர் ஜகத் குரு ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களின் கருணை ததும்பும் அற்புதத் திரு உரு அலங்கரிக்கிறது.

குறளைப்போல் பொருள் பொதிந்த ராஜாஜி அவர்களின் சின்னஞ்சிறு கதையிலிருந்து மலரின் மற்ற சிறப்பு அம்சங்கள் ஆரம்பமாகின்றன. ராஷ்டிரபதி அவர்கள் அண்ணல் காந்தியடிகளின் நூறுவது பிறந்த தினம் வரப் போவதை நினைவூட்டி அவருக்கு அஞ்சலி செலுத்துகிறார் தம் அற்புதமான கட்டுரையில். இளைஞர்களுக்குச் சமய போதனையோடு கலந்த கல்வியே சிறப் புடையது என்று விளக்குகிறார் நம் முதல்வர் திரு பக்தவத்ஸலம் அவர்கள். ஆதிசங்கரர் காஞ்சியில் காமகோடி பீடத்தை நிறுவியது முதல் அந்தப் பீடத்தை அலங்கரித்த குரு பரம்பரையினரைப் பற்றியும் பிறகு அவர்கள் கும்பகோணம் சென்றதையும் ஆனாலும் அவர்களைக் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் என்றே சாஸனங்களும், பட்டாக்களும், கல்வெட்டுகளும் எப்படிக் கூறுகின்றன என்பதையும் பல ஆதாரங்களுடன் திரு ராமேசன் அறுதியிட்டுக் கூறும் ஆராய்ச்சிக் கட்டுரை மலருக்கே சிரமாகத் திகழுகிறது. பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரியார், திருமுருக கிருபானந்த வாரியார், திரு கி. வா. ஜகந்நாதன், திரு பி. ஸ்ரீ. திரு எச். வி. ஆர். ஐயங்கார், திரு அமிய சக்கரவர்த்தி, திரு கி. சந்திரசேகரன், திரு வெ. பா. தசுந்தரம் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் கருத்துக் கருவூலங்கள். இவை தவிர தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களின் கற்பனை வளம் படைத்த சிறுகதைகள் ஏராளம் இந்த மலரில்.

வண்ணப் படங்களின் வரிசை பற்றி நினைந்து நினைந்து சொல்லிக் கொண்டே போகலாம். அன்னை அகிலாண்டேசுவரியின் ஆலயமான திருவானைக்காவின் தல மகிமையைக் கூறும் மூவண்ணப் படங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். உலகில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக மகோந்நதமாக வாழ்ந்து மறைந்த மக்களையும் அவர்களின் நாகரிகத்தையும் தமது சித்திரங்களால் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் ஓவியர் வினு. கைத்தலம்பற்றக் கனாக் கண்ட ஆண்டாளின் கனவைக் கண்ணை விட்டகலாத ஓவியங்களாக வடித்துத் தந்துள்ளார் திரு ராஜம். ஓவியர்கள் விஜயாவும், கல்பனாவும் பாரதிக்குப் பின்வந்த கவிகளின் கற்பனையை வண்ணங்களில் வடித்துக் கொடுக்கிறார்கள். இன்னும் பல சித்திர மடல்கள் உங்களை மகிழ்விக்கப் போகின்றன.

இத்தனைக்கும் மேலாக எல்லாரும் விரும்பி ரசிக்கும் அம்சமான ஹாஸ்யப் பகுதியைத் திரு சாமா பூரணமாக்கித் தந்திருக்கிறார். உமாபதி, செல்லம், சுதர்ஸன், கோபுலு ஆகியோரும் தங்கள் பங்குக்குச் சிரிப்புச் சித்திரங்களை அள்ளி வழங்கியிருக்கிறார்கள்.

மலரைப் பற்றிக் கூறிய பிறகு உங்களிடமிருந்து விடைபெறு முன்னால் உங்களது அபிமான எழுத்தாளர் அகிலனின் அற்புதப் படைப்பான 'வெற்றித் திருநகர்' என்ற சரித்திரத் தொடர்கதை அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது என்ற மகிழ்ச்சிகரமான விஷயத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

''விஜயநகரம் என்றாலே வெற்றித் திருநகர் என்றுதான் பொருள். இந்த நாட்டு வரலாற்றில் தேசிய எழுச்சியின் முதல் சின்னம் அதுவே என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அந்த நகரமே இன்று நமக்கொரு பயங்கரமான எச்சரிக்கையாகவும் காட்சியளிக்கிறது. உலகில் வேறு எந்த நகரமுமே அவ்வளவு செல்வச் சிறப்போடும் உல்லாசக் களிப்போடும் வீரச் செருக்கோடும் வாழ்ந்ததுமில்லை; அவ்வளவு பயங்கரமான முறையில் வேறெந்த நகரமும் அழிக்கப் பெற்றதுமில்லை.....'' என்று தமது முன்னுரையில் கூறுகிறார் அகிலன். 'வெற்றித் திருநகர்' விறுவிறுப்புடன் அமைந்து வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் என்பதற்கு இது கட்டியம் கூறுவதுபோல் இருக்கிறதல்லவா?

— ஆசிரியர்

பொன்னான பணி புரியும் பொது நிலையம்



கே. சம்பத்கிரி ராவ்

இம்மாதம் 17ந் தேதியன்று பெங்களூரிலுள்ள கோகலே பொது விவகார நிலையம் (The Gokhale Institute of Public Affairs) தனது உபயோகமான பணியின் இருபதாண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. அதன் சேவையைப் பாராட்டுமுகமாக அச்சமயத்தில் பொது மக்களின் சார்பில் நிதி அளிக்கப்படவிருக்கிறது. மேன்மைதங்கிய மைசூர் மகாராஜா ஜயசாமராஜ ஒடையாரு அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்க இசைந்துள்ளார்கள்.

பொதுப் பிரச்னைகளை நன்கு ஆராய்ந்து, பொதுத் தொண்டர்களாகவும் வழிகாட்டிகளாகவும் வாழ்வதற்கே தமது முழு நேரத்தையும் செலவிடுவோரைப் பயிற்றுவிப்பதற்காக ஸ்ரீ கோகலே இந்திய சமூக சேவகர் சங்கத்தை (Servants of India Society) நிறுவினர்.

பொது வாழ்வில் இத்தகைய நாட்டத்தை உண்டாக்குவதற்காகவே 1945ல் டாக்டர் டி. வி. குண்டப்பா அவர்களும் சில நண்பர்களுமாகச் சேர்ந்து கோகலே நிலையத்தை ஸ்தாபித்தனர். பெங்களூர் கார்ப்பரேஷன் மானியமாக வழங்கிய இலவச மனைக் கட்டில் சொந்தக் கட்டடம் அமைத்துக் கொண்டு 1956லிருந்து நிலையம் அங்கு செயல்பட்டு வருகிறது. அதிலிருந்து நிலையத்தின் அலுவல்கள் மேன் மேலும் விரிவுபெற்று வருகின்றன. நிஜாம் டிரஸ்டின் நன்கொடையாலும், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் அளித்த உதவிக் கச்சேரி ஒன்றின் வரும் தொகையாலும் இந்த விஸ்தரிப்புப் பணிகள் சாத்தியமாயின.

கோகலே நிலையம் அரசியல் பொருளாதார, விஞ்ஞான, கலாச்சார, விஷயங்கள் குறித்துப் பிரசங்கங்கள் ஏற்பாடு செய்கிறது. ஆங்கில, சமஸ்கிருதப் பெரு நூல்கள் குறித்து ஞாயிறு காலைகளில் டாக்டர் குண்டப்பா அவர்கள் ஆராய்ச்சி முறையில் போதனை அளிக்கிறார். சட்டசபை நடவடிக்கைகள், அரசாங்க நிதிக் கொள்கை, பொது மக்களின் குறைகள், கல்வி, உணவுப் பண்டங்களின் விலை ஆகியவை குறித்து ஆராய்ந்து சம்பந்தப்பட்டோருக்கு அறிக்கை அனுப்புவதற்கு நிரந்தரக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அவ்வப்போது எழும் பிரச்னைகளை ஆராய குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

கோகலே நிலையத்தில் சுமார் இருபதினாயிரம் புத்தகங்கள் கொண்ட நூல் நிலையம் உள்ளது. நூலாராய்ச்சிக்கும் வசதி அளிக்கப்படுகிறது. பொது நடப்புக்களை விவாதிக்கும் Public Affairs என்ற மாதப் பத்திரிகை வெளியிடப்படுகிறது. அவ்வப்போது மக்கள் பிரச்னை குறித்துச் சிறு நூல்கள் பிரசுரிக்கப்படுகின்றன. இலக்கிய, இசைப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் பின்னிருந்து இயக்கி வைக்கும் முக்கியமான சக்தி, காரியதரிசி டாக்டர் டி. வி. குண்டப்பா அவர்களே ஆவார். தற்போது அவர்களுக்கு எழுபத்தியாறு பிராயமாகிறது. 1915லிருந்தே இதுபோன்ற ஒரு நிலையத்தைப் பற்றி அவர் நினைந்து வந்திருக்கிறார். அவ்வாண்டு மேமாதம் எட்டாம் தேதி மகாத்மா காந்திஜியால் கோகலே அவர்களின் திரு உருவப் படத்துக்குத் திறப்பு விழா நடத்தி யிருக்கிறார். அந்தப் படம் இன்றும் ஓர் அரிய பொக்கிஷமாக கோகலே நிலையத்தில் உள்ளது. ஆரம்பத்தில் டாக்டர் குண்டப்பா அவர்கள் 'கர்நாடகா' என்ற ஆங்கில மாத மிருமுறைப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். பொது இயக்கங்கள் பலவற்றிலும், சட்டசபைகளிலும், சர்வகலாசாலை, கன்னட சாகித்திய பரிஷத் ஆகியன போன்ற கல்வி நிலையங்களிலும் அவர் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். கவியாகவும், நாடகாசிரியராகவும், கீர்த்தனகர்த்தராகவும், கட்டுரையாளராகவும், வரலாற்று நூலாசிரியராகவும், விமரிசகராகவும் அவர் கன்னட இலக்கியத்துக்கு நிரந்தரப் பணி புரிந்திருக்கிறார். அவர் சர்வ கலாசாலையில் கல்வி பெறாவிடினும் ஆங்கிலத்தில் அபூர்வமான தேர்ச்சி பெற்றிருக்கிறார். அவரது எழுத்து பெருமதிப்புடன் வாசிக்கப்படுகிறது. அவர் சம்ஸ்கிருதத்தில் ஆழ்ந்த பாண்டித்தியம் பெற்றவர். இலக்கியகர்த்தர்களிடையே அவர் பெற்றுள்ள உயர்வுக்குப் பாராட்டு தெரிவிக்குமுகமாகவே நான்காண்டுகளுக்கு முன்பு மைசூர் சர்வகலாசாலை ஒரு விசேஷ பட்டமளிப்பு விழாவில் அவருக்கு டாக்டர் பட்டம் சூட்டியது.

இத்தகைய உயர்ந்த பொதுநல உணர்ச்சியும், ஆழ்ந்த பண்பும் உள்ள ஒருவர், சிரத்தை கொண்ட தொண்டர் வட்டம் ஒன்றினைத் தம்பாற்படுத்திக் கொண்டு நனவாக்கி வரும் நீண்டகாலக் கனவே கோகலே நிலையம்.





அமெரிக்க முன்னாள் அதிபர் கென்னடி மனைவிக்கு இன்னமும் வாரந்தோறும் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து 2000 கடிதங்களுக்குக் குறையாமல் வருகிறதாம்! எல்லாக் கடிதங்களுக்கும் விடையளிப்பதற்கெனப் பிரத்தியேகமாக அமர்த்தப் பட்டுள்ள மூன்று செயலாளர்கள் பதிலளிக்கிறார்களாம். அமெரிக்க முன்னாள் அதிபர்கள் "ஐக்", "ட்ருமன்" இவர்களை விட ஸ்ரீமதி கென்னடிக்கு வரும் கடிதப் போக்கு வரத்தை நிர்வகிக்கும் அலுவலகத்திற்கென அமெரிக்க அரசாங்கம் வாரத்திற்கு ரூ. 5000த்திற்கும் அதிகமாகச் செலவிடுகிறதாம். - ஓ. வி. வி

[ஆதாரம்: விவியன் ராக்லென்

'உடல் இளைக்க வேண்டுமா? இதோ இந்த மருந்தைச் சாப்பிடுங்கள், இந்த மருந்துணவை உட்கொள்ளுங்கள்!'

இப்படி எத்தனையோ விளம்பரங்கள்.

பருத்த உடல் பலருக்கும் பிடிப்பதில்லை. '' 'டயட்'டில் இருக்கிறேன், சார்!'' என்று பெருமையாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். அந்தக் காலத்து ஏகாதசிப் பட்டினி இதற்காகத்தான் ஏற்பட்டது போலும்!

இந்த நாகுக்கும் நாகரிகமும் மனிதர்களிடையே மட்டும் இல்லை;

பல் சுவைப் பக்கம் [1]

அக்காளுக்கும் தம்பிக்கும் இரண்டு இரண்டு லட்டுகள் கிடைத்தன. ஒன்று கொஞ்சம் பெரியது; மற்றது சின்னது. அக்காள் ஒரு தந்திரம் செய்தாள்.

'தம்பி, உனக்குப் பிரியமானதை நீயே எடுத்துக் கொள்!' என்று தம்பியிடம் சொன்னாள்.

தம்பி சட்டென்று பெரியதை எடுத்துக் கொண்டான். அக்காள் முகம் வாடியது.'இதோ பார், உனக்கு மரியாதையே தெரியவில்லையே! நானாயிருந்தால் இப்படிச் செய்யவே மாட்டேன்' என்றாள்.




'முதலில் நீ எடுத்துக்கொள் என்று உன்னிடம் நான் சொல்லியிருந்தால் நீ என்ன செய்திருப்பாய்?' என்று தம்பி கேட்டான்.

'சந்தேகம் என்ன? சின்னதைத்தான் எடுத்துக் கொண்டிருப்பேன்' என்றாள் அக்காள்.

'சரி; இன்னும் ஏன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறாய்? அதுதான் இப்பொழுது உனக்குக் கிடைத்துவிட்டதே!' என்றான் தம்பி.


ஆரம்பப் பள்ளியில் படிக்கும் திறமை மிக்க சிறுவர்களும் சிறுமிகளும் ஆங்கிலம் கட்டாயம் படிக்க வேண்டும் என்று மேற்கு ஜெர்மனி விதி செய்திருக்கிறது. மேல் நாட்டு மொழிகளில் விஞ்ஞானத் துறையிலும் இலக்கியத் துறையிலும் ஆங்கிலத்துக்குச் சமமாக, சில விஷயங்களில் ஆங்கிலத்துக்கும் மேலாக வளர்ச்சிபெற்ற மொழி ஜெர்மானிய மொழி என்பது அனைவரும் அறிந்ததே. இருப்பினும் அங்கே ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக்கியிருக்கிறார்கள். ஆங்கிலப் பாடத்தைக் கற்பிக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லாத குறையைப் போக்க ரேடியோவில் இருபது நிமிடங்களுக்கு ஆங்கிலப் பாடம் நடைபெறுகிறது. – ஜெர்மன் டிரிப்யூன்




உடல் பருமனைக் குறைக்க....

மனிடர்களுக்கு மூதாதையர்களிடமும் பரவி ஐரோப்பா தேசத்தில் இருக்கும் இந்தக் 'கரங்குரங்கார்' முந்நூற்று முப்பது ராத்தல் எடை உள்ளவர். தம் எடை குறைவதற்காக உணவைக் குறைத்துச் சாப்பிடுகிறாராம்.





போர்முனையில் உண்மைக்கதை
இரண்டு சீக்கிய இளைஞர்கள்
ஊர்ந்து ஊர்ந்து வந்தனர்,
இந்திய தளபதியும் படையினரும்
முன்னேறி வந்தனர்.
இந்த தியாக
வீரர்கள் தான் நமக்கு
வெற்றிப் பாதை
சமைத்துக் கொடுத்
திருக்கிறார்கள்!
அவர்கள் நினைவுக்கு
அஞ்சலி செலுத்துவோம்!





தெளிந்த நீர் மொள்ளுவதற்காக ஆற்றுப் பரப்பில் குடத்தைக் கொண்டு நீரைத் துழாவினான் பரிமளம். இடுப்பளவு ஆழத்தில் நின்று கொண்டிருந்த நிலையில் பாதங்களின் கீழ் மணல் பரிந்து கொடுத்தது. ஒரு விநாடி அடித்தளத்தைத் தொட்டுக் கொண்டும், மறு விநாடி பட்டும் படாமலும் நீரில் நின்றாடிக் கொண்டும் குடத்தைக் கவிழ்த்து நீர் மொள்ள முனைந்தான். நீந்தத் தெரிந்த தைரியம்; அந்த இதமான உணர்வில் சிறிது நேரம் நிலைபெற விழைந்தது அவன் உள்ளம்.

பரிமளத்தின் பார்வை நீர்ப்பரப்பில் நீண்டபோது அவன் உணர்வை ஒரு சிறு காட்சி அசைத்தது. நூல் பிடித்தாற்போல் நட்ட நடுப் பரப்பில் சிவப்புக் கொத்தாய் ஒரு மலர் மிதந்து கொண்டிருந்தது. 'செம்பருத்திப் பூ' என்று அவன் தனக்குள்ளே கூறிக் கொண்டு, அது மிதந்து வரும் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். நீரின் மேல் அந்த மலரின் ராஜ பவனி அவன் உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்தது.

'இந்த மலர் எங்கிருந்து வரக் கூடும்?' என்றொரு கேள்வி எழுந்தது அவன் மனத்தில்.

அவனைப் பொறுத்த வரை இதற்கு விடை கிடையாது; ஆனால், கற்பனை பண்ணினால் அவன் ஆயிரம் விடைகள் காண்பான்.

மலர் அவன் முகத்தருகே வந்து விட்டது. அதன் மலர்ச்சியில் அது தன் இதழ்கள் விரித்துச் சிரிப்பதாகத் தோன்றியது; அதன் மௌனத் தோற்றத்தால் அது தன் அறிமுகத்துக்குப் பிறகு கலகலவென்று ஏதேதோ பேசுவது போலிருந்தது. நீருடன் அந்த மலரையும் குடத்தினுள் முகர்ந்தான் பரிமளம். நீரோட்டத்தின் குறுக்கே நடந்து விடுவிடெனக் கரையேறினான்.

ஆற்றங் கரையேறி வீதியுள் நுழைந்து செல்லும்போது பரிமளம் எப்போதும் குனிந்த தலை நிமிராமல்தான் நடப்பான். அவன் பார்வை இப்போது குடத்தில், குறுகிய நீர் வட்டத்தில் — மிதந்து கொண்டிருந்த செம்பருத்திப் பூவின் மீதே யிருந்தது; நினைவும் அதைச் சுற்றியே படர்ந்திருந்தது.

தெரு முனையில் ஒரு சிறிய பிள்ளையார் கோயில் இருந்தது. வழக்கமாய்ப் பரிமளம் பின்புறத்து நுழைவிடம் வழியாக வந்து, குடத்தை இறக்கிச் சந்நிதியில் ஒரு கருங்கற் படியின் மேல் வைத்து விட்டு, நாலைந்து சுற்றுக்கள் பிள்ளையாரை வலம் வந்துவிட்டு மீண்டும் குடத்தை எடுத்துக் கொண்டு போவான். அன்று குடத்தை இறக்கிப் படியின் மீது வைத்தவுடனேயே அவன் உள்ளத்தில் இடீரென ஏதோ புரண்டது. அந்தப் புரட்சி அவனுள் ஓர் ஒளியைப் விசிறிக்கொண்டு நேர்ந்த மாதிரி இருந்தது; ஏதோ ஓர் ஒலியையும் இசைத்துக் கொண்டு தோன்றினாற் போலிருந்தது. அந்த இரண்டுமே அவனுடைய நினைவின் எதிரொலிகள்தாம். பிள்ளையாரை நிமிர்ந்து நோக்கும்போது நாள் தவறாமல் அவன் நெஞ்சில் முந்திக் கொண்டு வரும் அந்த நினைவு ஆறு வருடங்களாக வளர்ந்து, பெருகி, கற்பனைக்குப் பிடிபடாததாய் — ஆனால் நெஞ்சில் அடைபடுவதாய் நிறைந்திருந்தது.

குடத்தினுள்ளிருந்து அந்த மலரைக் கையில் எடுத்த போது அந்த மலரின் நினைவும் நெஞ்சில் மலர்ந்திருந்த அந்த மாபெரும் பழைய நினைவும் ஒன்றாய்க் கூடிய போதுதான் அவன் நெஞ்சில் அந்தப் புரட்சி ஏற்பட்டது. 'இந்த மலர் எங்கிருந்து வந்திருக்கக் கூடும்?' என்ற கேள்விக்கு விடை கிடைத்தாற்போல் தோன்றியது அவன் மனத்தில். அந்த விடையின் ஒளி உருவமும் இப்படித்தான் அவன் இதயத்தில் ஒலித்தது: 'இந்த மலரை அவர் தான் பறித்து நீரில் மிதக்க விட்டு அனுப்பி யிருக்கக் கூடும்!'

பிள்ளையாரின் பாதங்களில் சாற்றுவதற்கென்று கையில் எடுத்த அந்த மலரைத் திரும்பவும் அவன் குடத்தினுள்ளேயே போட்டான். திரும்பவும் நீருள் வீழ்ந்த புளகத்தில் அந்தச் செம்பருத்திப் பூ ஆனந்தமும் புத்துயிரும் கொண்டாற்போல் அந்தச் சிறு வட்டத்தில் ஆடி மிதந்தது.

பரிமளம் வீட்டுக்குள் நுழையும்போதே 'ஸௌந்தர்ய லஹரீ' ஸ்தோத்திரங்களைச் சொல்லிக் கொண்டுதான் வருவான். பிறகு பாசுரங்களைப் பாடுவான். இன்று பாசுரங்களுக்கிடையில் 'தட்'டென்று ஒரு சொல் அடிக்கடி அவன் நாவில் வந்து குதித்தபடி இருந்தது. தன் காதுகளுக்காகத்தானே அவன் ஒலித்த சொல்தான் அது. 'அவர்' என்ற அந்தச் சொல்லில் அவன் புதியதொரு சக்தியைக் கண்டான்.

என்றைக்குமே அந்த 'அவ'ரைக் குறித்தவைதாம் இந்தப் பணிகளும் பாசுரங்களும். என்றைக்கு இவற்றுக்குப் பலன் கிடைக்கும் என்று தெரியாமலே ஆறு வருஷங்களாய் இந்தப் புனித நோம்பில் மனம் ஒன்றியிருக்கிறான் பரிமளம். இன்றைக்கு முன் வரை 'அவ'ரைக் குறித்த பொதுவான வேண்டல்களும் பிரார்த்தனைகளும் 'அவர்' என்ற தனிச் சொல்லில் இடைப்பட்டு நின்றதில்லை; இன்று பரிமளம் பிரமை பிடித்து நின்று விட்டான். கை ஆடவில்லை; கால் ஓடவில்லை; காரியங்கள் புரியவில்லை. மனம்தான் ஓடியது. அந்த மன வேகத்துடன் அந்த மலரை எடுத்து நீரை உதறி, குவிந்த இரு கரங்களுள்ளும்

அதை ஏந்தி, கூடத்துக்குச் சென்று அவ ளுடைய 'அவ'ரின் படத்தில் சாத்திவிட்டு மெய்ம்மறந்து நின்ருள் பரிமளம்.

ஆறு வருடங்களுக்கு முன்பு முதன் முத லாகப் பரிமளத்தை வீட்டுக்கு 'அழைத்'திருந் தார்கள். ஊரே திரண்டு வந்து 'புதுப் பெண்'ணே வேடிக்கை பார்த்துச் சென்றது.

'பொண்ணு எப்படித்தான் இருக்குங்க றேன்! மகாலட்சுமியாட்டம் மூஞ்சி கிளி கொஞ்சுது!'

'சாமியாடி வீட்டுக் குடும்பத்துக்கென்ன! எல்லாத்துக்கும் கொடுத்து வைச்சவங்க. மருமவப் பொண்ணு குத்து விளக்காட்டம் வந்து நிக்கக் கேக்கணுமா?'

காற்றில் வந்த இந்தப் பேச்சொலிகள் பரிமளத்துக்குப் பெருமையைத் தந்தன.

வீட்டில் விருந்துக்குப் பறைசாற்றி நாலா புறமிருந்தும் ஒவ்வொரு மணமாய்ப் பரி மளிக்கத் தொடங்கியது. எல்லோரும் பார்த்து, பேசி, சடையை இழுத்துப் பரிசோதித்து, காதையும் மூக்கையும் நிமிண்டி மின்னியவற்றின் மதிப்பை எடை போட்டு, புடவைக் கொசுவத்தை உதறிக் கட்டக் கற்றுக் கொடுத்து ஒருவாறு எல் லாரும் நகர்ந்த பிறகு பரிமளம் தனிமை கிடைத்து விட்டாள். கழுத்து மாலையைக் கழற்றிக் கூடத்தில் மாட்டப் போகும்போது அந்தப் படத்தைப் பார்த்தாள். பத்து நாட் களுக்கு முன் திருமணத்தின் போது ஒரு நாள் ஒரு பொழுது பார்த்த முகம். நிமிர்ந்து பார்க்க இயலாத தருணத்தில், அசப்பில் பார்க்க நேரிட்ட போதும் நழுவி ஓடிய முகம்; இப்போது நிலைக்குத்தி அவளைப் பார்த்தது. அவளும் வேட்கை எழப் பார்த்தபின் தலை குனிந்தாள்.

'படமாய்ச் சுவரில் சிரிக்கும் உருவம் இப்போது இந்த வீட்டில் எங்கே இருக் கிறது? யாரும் தானுகச் சொல்லவில்லை; யாரையும் தானுகக் கேட்க முடியாது. இந்தச் சமயம் அவர் இங்கே இல்லாமல் எங்கேதான் போனுர்?'

வாசல்புறம் ஒரு சிறிய அறை; நடையை யொட்டி அதிக வெளிச்சம் இல்லாமல் — ஒரே இருளாயும் இல்லாமல் திறந்திருந்தது. பரிமளம் எச்சரிக்கையுடன் அடி அளந்து நடை போட்டு அந்த அறையுள் நுழைந்தாள். ஒரு சிறு மேஜை, நாற்காலி; சுவர் ஓரம் ஒரு நாடாக் கட்டில். ஒரு கற்றில் இவற்றையும் அறையில் யாரும் இல்லை என்பதையும் அவள் தெரிந்து கொண்டாள்.

இன்னும் ஒரு சுற்று நோட் டம் விட்டதில் சுவரில் அங் கங்கே ஏதோ எழுதியிருப்பது தெரிந்தது. ஆங்கிலத்தில் இருந் தன எழுத்துக்கள்: 'ஆர். வாக தேவன், 8-ம் வகுப்பு, போர்ட் மத்தியதரப் பாடசாலை....... ஆர்வி. தேவன், ஆர். வி. ரு.. மன் ஆப் கே. ராமாநுஜ..ரூர், மிராசுதார், பூவிருந்தநல்லூர், சாமியாடி வீடாமிலி.....இரும் பத் திரும்ப வாகதேவனும், ஆர். வி. தேவனு மாகச் சுவரில் மனம் நிறையும் வரை எழுதி யிருந்தது. எழுத்துக்கள் ஒன்றை விழுங்கி, ஒன்றைக் குட்டி போட்டாற் போல் பெரிதும் சிறிதும் கோணலும் மாணலுமாய் இருந்தன.

'அவர் இறுக்கியதுதான் போல் இருக் கிறது! எட்டாவது படிக்கும் போது சுவரை ஒரு கை பார்த்திருக்கிறுர் போல் இருக்கிறது. இப்போது பி. ஏ.வாமே..... இத்தனை வருஷங்களாய் இந்த வீடு சுண்ணும்பையே காணவில்லை போலிருக்கிறது. அதுதான் போகட்டும்; அவரே இதை எப்போதாவது பார்த்துச் சிரித்து அழித்திருக்கமாட்டாரோ!'

பரிமளம் உதட்டைச் சுழித்து ஒரு புன்னகை புரிந்தாள். இடதுபுறத் திருப்பத் தில் கூடத்திலிருந்த அந்தப் படம் அவள் பார்வையில் பட்டது. 'இதெல்லாம் உங்கள் இளம் பிராயத்து நினைவுச் சின்னங்களா?' என்று ஓர் இரகசியக் கேள்வியைத் தன் னுள்ளே — அந்தப் படத்தைப் பார்த்தபடி— கேட்டுக் கொண்டாள் பரிமளம்.

'வாசு' என்று வெளியில் பேச்சுக் கேட் டது. "மணி இரண்டடிக்கப் போகிறது. இன்னுமா அவன் வரவில்லே? இன்றைக்கு என்று என்ன வேலையை வைத்துக் கொண்டு அப்படிச் சுற்றுகிறுன்?" என்று யாரோ யாரிடமோ கேட்டது அவள் காதுகளில் வந்து விழுந்தது.

"அவனுக்கு வெட்கமாக இருக்கும்; அது தான் வீட்டுக்கு வராமலேயே சுற்றுகிறுன்..."



"இன்னொரு ஜன்மத்தில் நீங்கள் இப்படிச் செய்தால்கூட நான் வர மாட்டேன். என்னைப் பார்க்க வரவேண்டியது உங்கள் கடமை இல்லையா? இன்னொருத்தி உங்களுக்கு வருவாள் என்று வைத்துக் கொண்டால் கூட அவளும் அந்தத் தவறைச் செய்யமாட்டாள்!" இப்படிப் பெண் தெய்வமான பரிமளம் சீற்றமடையும்படி வாசு என்னதான் செய்துவிட்டான்? ※

"வெட்கம் என்னய்யா வெட்கம்! தொட்டுத் தாலி கட்டின பெண்டாட்டி வீட்டுக்கு வருகிறாள் என்றால் வெட்கம் வருவதாவது! நீயும் நானுமே அப்போது வெட்கப்பட்டிருக்க மாட்டோமே ஐயா!...."

மணி மூன்று இருக்கும்; எல்லோரும் விருந்து சாப்பிடுவது தெரிந்தது. சாப்பாட்டினிடையில் முன்பு கேட்ட குரல் இப்போதும் கேட்டது:

"வெள்ளத்தை வேடிக்கை பார்க்கப் போயிருக்கிறானும்! சின்னப் பையனா இவன்? பி. ஏ. படித்தவன்; இதற்கு வெட்கப்படவில்லையாமா?......"

சிறிது நேரத்தில் பரிமளத்தை அவள் மாமியார் வந்து அழைத்தாள்: "நீயும் ஒரு பிடி சாப்பிட்டு விடடியம்மா. அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். அவன் இத்தனை நாழி ஒன்றும் சாப்பிடாமல் நம்மைப் போல் பட்டினி கிடக்க மாட்டான்; வேறாட்டனில் கிட்டனில் சாப்பிட்டிருப்பான்."

"எனக்குப் பசி இல்லையம்மா. பசித்தால் நானே வந்து சாப்பிடுகிறேன்......" என்று கூறி விட்டாள் அவள். அவள் இதயம் எதிலும் ஈடுபடவில்லை. காலையில் மலர்ந்திருந்தது போல் இப்போது கிளுகிளுக்கவில்லை. 'அவர் ஏன் வரவில்லை?' என்று கடந்த நான்கு மணி நேரமாகத் தன்னையே கேட்டு, தன்னால் விடை காண முடியா நிலையில் அவள் தவித்துக் கொண்டிருந்தாள். அந்தத் தவிப்பில் அவள் இதயம் கனத்தது.

இரவு நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. வீட்டின் அகலக் கதவு நீண்டிருந்த நெடும் திண்ணையில் ராமானுஜலு படுத்துக் கொண்டிருந்தார். சாரல் மறைப்புக்குச் சம்பந் தட்டி தொங்கவிடப்பட்டிருந்தது. பரிமளம் அந்த அறையிலேயே மேறை ஓரம் ஒரு பாயைப் போட்டுக் கொண்டு, படுக்கை கொள்ளாமல் முழந்தாளிட்டு உட்கார்ந்திருந்தாள்.

ராமானுஜலுவுடன் நாலைந்து பேர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஊரைச் சுற்றி வெள்ளக் காடு என்று பேச்சில் அடிபட்டது புரிந்தது பரிமளத்துக்கு. வாசுவைப் பற்றிய கவலையில் அவள் பேச்சை உற்றுக் கேட்டாள்.

'உண்மையாகவே அவர் வெள்ளத்தை வேடிக்கை பார்க்கவா போயிருப்பார்?' என்று நினைவு ஓடியது அவள் உள்ளத்தில்.

அரை மணி நேரம் கழித்து ஒரு புதிய குரல் கேட்டது. பரிமளம் பாயின் மீது நின்று கொண்டு மெல்ல எட்டிப் பார்த்தாள். ஒரு மின்வெட்டில் தொப்பலாய் நனைந்து நடுங்கிக் கொண்டு வந்திருந்த ஒருவர், "ராமானுஜலு மாமா!" என்று அவசரமாகக் கூப்பிட்டார்.

"யார்ரா அது?" என்று எழுந்து உட்கார்ந்தார் ராமானுஜலு.

"வாசு சாயங்காலம் பஸ்ஸிலே மாயவரம் போயிட்டுது. உங்ககிட்டே தகவல் சொல்லச் சொல்லிச்சு. நான் தஞ்சாவூர்க்கிலே ஊருக்குப் போயிடறேன்...... குளிரு தாங்க முடியலே!" என்றபடி தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு ஓடினார் அவர்.

"அட, பைத்தியமே! மாயவரம் பயணம் கூட இன்னைக்குத்தான் நாளு பார்த்தானா?" என்று முனகியபடி கூறினார் ராமானுஜலு.

ஒரு மாதமாக வாசுவிடமிருந்து ஒன்றும் தகவல் இல்லை. பரிமளம் இப்போது வீட்டில் நன்றாகப் பழகிக் கொண்டு விட்டாள். மாமியாருக்கும் மாமனுக்கும் அவள் செய்த சேவைகளில் அவர்கள் நெஞ்சு நெகிழ்ந்து போய் விட்டார்கள். மிகுந்த நேரத்தில் அவள் வாசு அங்கேயே இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு விட்டவள் போல் அவனுக்காகவென்று யோசித்து யோசித்துச் சில பணிகளைப் புரியத் தொடங்கினாள். வாசல் பக்கத்து அறையைப் புதுப்பித்து விட்டது போல் சில மாறுதல்களைச் செய்திருந்தாள். சுண்ணாம்பு தயார் செய்து சுவர்களுக்கு அடித்தாள். வாசுவின் படத்தை அந்த அறையில் கொண்டு வந்து மாட்டினாள். அங்கே காலையும் மாலையும் வத்தியும் சாம்பிராணியுமாகப் புகைந்து மணத்தன.

பிள்ளையைப் பார்த்து வரவென்று ராமானுஜலுவும் அவர் மனைவியும் வண்டி கட்டிக் கொண்டு கிளம்பினார்கள். பரிமளத்திடம் வந்து, "நீயும் வருகிறாயா? எங்களை விட உன் மனசு எப்படி அடித்துக் கொள்ளும் என்று எனக்குத் தெரியும். வா, போய்ப் பார்த்து விட்டு வரலாம். பார்க்கிறதென்ன, அவனை எப்படியாவது கட்டி இழுத்து வருவதற்குத்தான் இந்தப் பயணமே!" என்றாள் அவள் மாமியார்.

"வேண்டாம், அம்மா! நீங்கள் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள். எனக்கு என்னவோ ஒரு மாதிரியாக இருக்கிறது. எப்படியும் வர வேண்டியவர்தானே அவர்! உங்களுடன் நிச்சயமாய் வந்து விடுவார். நான் வேறு எதற்கு?" என்று நாசூக்காக மறுத்து விட்டாள் பரிமளம்.

மறுநாள் திரும்பி வந்த வண்டியில் போனவர்கள் மட்டும்தான் வந்தார்கள்.

தீபாவளி விழாவிற்கு



எடுப்பான ஸாம்ஸன்ஸ் உடைகள்


தீபாவளிக்கு வீட்டிலுள்ள ஆடவர்களுக்கும், சிறுவர்களுக்கும் ரெடிமேட் உடைகளில் சிறந்த ஸாம்ஸன்ஸ் உடைகளையே வாங்குங்கள். அவை எடுப்பான தோற்றத்தை அளிப்பதுடன் நீண்ட காலம் உழைக்கின்றன. இந்தியாவில் பிரசித்தி பெற்ற மில்களின் ஸான்பரைஸ்ட் இன்னும் மற்ற துணிகளைக் கொண்டு தரம்மிக்க தையலுடன் விளங்குகின்றன. எங்களால் நிர்ணயிக்கப்பட்ட நியாய விலைக்கு எங்கும் கிடைக்கின்றன.

பருத்தி ரக ஷர்ட்கள், புஷ்ஷர்ட்டுகள் 8 (13½" முதல் 17" வரை) காலர் அளவுகளில் கிடைக்கின்றன.

பருத்தி டிரவுஸர் (இடுப்புளவு 26" முதல் 42" வரை, உயரம் 38" முதல் 44" வரை) 8 அளவுகளில் கிடைக்கின்றன.

பைஜாமா—வெண்மை—4 அளவுகளில் (இடுப்பு அளவு 32" 36" 40" உயரம் 38" முதல் 44" வரை) கிடைக்கின்றன.

சீரான உடை — சீரான தோற்றம் — சீரான பொருத்தம்



ஸாம்ஸன்ஸ்

ஆடவர் சிறுவர் உடைகள்

உங்களுக்கு தேவையான ஸாம்ஸன்ஸ் உடைகளை அங்கீகாரம் பெற்ற இந்த அடையாளம் காணும் கடைகளிலேயே வாங்குங்கள்.

பெங்களூர் டிரஸ் மானுபாக்சரிங் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்-2

''உன் புருஷன் டில்லிக்குப் போயிருக்கிறானடி!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் பரிமளத்தின் மாமியார்.

பரிமளம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வாசல் அறைக்கு வந்துவிட்டாள். கதவை மெல்லச் சாத்தி விட்டு, வாசுவின் படத்தின் முன் போய் நின்று அதை வெறிக்கப் பார்த்தாள். படத்தில் வாசுவின் கண்கள் களங்கமற்றுத் தெரிந்தன. அவை உட்கொண்டிருந்த அமைதியின் எதிரொலிப்பு பரிமளத்தின் இதயத்தில் சுரீர் என்று ஒரு புயலுணர்வை எழுப்பியது. அவள் பாதங்களின் விரல் நுனிகளில் 'தட் தட்' டென்று சுடும் நீர் முத்துக்கள் உதிர்ந்தன.

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் பரிமளம் ஆற்றில் நீராடிவிட்டு இடையில் குடத்துடன் வீடு திரும்பியபோது வீட்டு வாசலில் சைக்கிளுடன் தபால்காரர் நிற்பதைக் கண்டாள். வேகமாக நடை போட்டு விட்டையடைந்து உடை மாற்றிக் கொண்டு அவள் வாசல்புற அறைக்கு வந்தபோது ராமானுஜாசாரி மனைவிக்குக் கடிதம் ஒன்றைப் படித்துச் சொல்லிக் கொண்டிருந்தார் :

'........ இந்த வேலைக்கு என்னை நியமித்துள்ள ஸ்தாபனத்தினரே அவர்கள் செலவில் என்னை மேல்நாட்டுக்கு அனுப்புகின்றனர். நான் துளியும் நினைக்கவில்லை; உங்களிடமும் அம்மாவிடமும் நேரில் விடைபெற்றுக் கொள்ள இயலாமல் இப்படி எதிர்பாராமல் குறுகிய அவகாசத்துடன் புறப்பட நேர்ந்து விட்டது. ஆனால் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். எனக்கு இதில் ஒரு நிம்மதிகூட, என்னை வேண்டி வேண்டி நீங்கள் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைத்தீர்களல்லவா?....'

அதற்கு மேல் அவர் இரைந்து படிக்காமல் வார்த்தைகளை விழுங்க ஏதோ ராகம் போட்டு இழுத்து விட்டு விட்டார்.

பரிமளத்தின் உள்ளத்தில் துக்கம் உருவிப் பெருகி வந்ததில் பொறுமல் ஒலிகள் முட்டி மோதிக் கொண்டு கிளம்பின. வாசு தன்னை விட்டு ஒதுங்கிக் கொண்டு வந்தது தற்செயலாய் நேர்ந்ததல்ல என்று தோன்றியது.

சிறிது நேரம் பொறுத்து வாசுவின் தாயார் அவளைத் தேற்றும் முயற்சியுடன் அவளிடம் வந்தாள். ''மாமா கடிதாசு படிச்சாங்களே; கேட்டுக் கொண்டிருந்தியா?''

''அவர் வெளிநாடு போகப் போகிறார் என்று தெரிந்தது. ஆனால் முழுக் கடிதமும் படிக்கக் கேட்கவில்லை.''

வாசுவின் தாயார் அவள் தோளைத் தொட்டுத் தலையை வருடிக் கொண்டு கூறினாள்; கடித விஷயத்தைப் பேச்சிலிருந்து ஒதுக்கியபடிதான் கூறினாள் : ''அவன் எங்களுக்குப் பிறந்த பிள்ளையே தவிர அவன் அத்தையிடம்தான் வளர்ந்தான். இந்த ஊரில் எட்டாங் கிளாஸ் வரை படிச்ச போது இந்த அறையிலேயேதான் அடைந்து கிடப்பான். அவன் அத்தையிடம்தான் அவனுக்கு ஒட்டுதல் அதிகம். இப்போது அவனுக்கு வேலையும் வெளிநாட்டுப் பயணமும் கூட அவர்கள் பார்த்துச் செய்கிற ஏற்பாடுகள்தான். பாவம், உன்னைப் பார்த்தால் தான் பாவமாக இருக்கிறது...கொஞ்ச காலம் பொறுத்துக் கொள். அப்புறம் நீ அவனோடு டில்லியில் குடித்தனம் பண்ணலாம்.''

''அவருக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நீங்களும் மாமாவும் அவசரப்பட்டீங்களா, அம்மா?'' என்று கேட்டாள் பரிமளம். கண்ணீரை அடக்கியபடியே.

''இதிலேகூட அவன் அத்தையின் ஏற்பாடுதான். நாங்களும் எங்கள் பங்குக்குச் சொன்னோம் — காலா காலத்தில் அது நடக்க வேண்டுமே என்று.....''

இரண்டு வருடங்களில் எவ்வளவோ மாறுதல்கள் நடந்து விட்டன. சாமியாடி ராமானுஜாசாரி தெய்வமாகி விட்டார். பரம்பரையாக அந்தக் குடும்பத்துக்கு அந்தப் பட்டம் இருந்து வந்தது. சுவாமி அந்தந்தக் குடும்பத் தலைவரின் மீதும் ஸ்வரூபமாகிப் பேசுகிற ஐதிகம் இருந்து வந்தது. ராமானுஜாசாரி தம் கெடுவைத் தாமே சாமி வந்த நிலையில் குறித்துச் சொன்னார்; அதற்குச் சிறிது காலம் முன்போ பின்போ அவர் காலம் முடிந்தது.


வீட்டில் இரண்டு உருவங்கள் தனித்து இயங்கின; பரிமளம் வாசல் புறத்து அறையில் உலகம் கொண்டிருந்தாள். அவள் மாமியார் சமையற்கட்டு இடைகழியில் ஒரு பெஞ்சைப் போட்டுக் கொண்டு அங்கேயே காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

அந்தப் பரம்பரையில் சாமியாடும் வழிமுறை வாசுவுக்கு இல்லாமல் அற்றுவிட்டது. ஆயினும் பரிமளம் அவனுடைய படத்தை வைத்துக் கொண்டு, கற்பனைக் காட்சிகளில் அவனிடம் வேறு சில சக்திகள் தோன்றச் செய்ய முற்பட்டாள். கற்பனை உரையாடல்களில் அவன் மன ஆழத்தை அளக்கப் பாடுபட்டாள். கற்பனையிலும் அவன் 'கன்னிமங்கை'யாகவே இருந்தான். படத்தில் அவன் விழிகள்கூட உயிருள்ளவரது விழிகள்போல் இல்லை. நாளடைவில் அந்தப் படத்தைப் பார்ப்பதும் அந்த விழிகளைச் சந்திப்பதும்கூட அவளுள் ஓர் அச்சத்தை ஏற்படுத்தின.

ஒரு நாள் பரிமளம் வீட்டில் எதை எதையோ குடைந்து ஏதோ தேடுவதில் ஈடுபட்டிருந்தாள். பழைய கிஸ்தி ரசீது ஒன்றைக் கேட்டு மணியக்காரர் ஆளனுப்பியிருந்தார். ஓர் ஓலைப் பெட்டியைக் கடைசியாக அவள் திறந்த போது எட்டு மடிப்புகளாய் மடித்த ஒரு கடிதம் பல்லி விழுவது போல் 'சொத்'தென்று தரையில் விழுந்தது.

வாசுவின் கடிதம் என்பது தெரிந்து அவள் அதை எடுத்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்: '...... என்னை வேண்டி நீங்கள் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைத்தீர்களல்லவா ? எனக்கு விருப்பமில்லாததை உங்கள் திருப்திக்காக நீங்கள் சாதித்துக் கொள்ள முடிந்தது. ஆனால் என் விருப்பப்படி நான் இருக்க முடியும் என்பதை உங்களில் யாரும் உணர்ந்து கொண்டிருக்க முடியாது. இந்த வெளிநாட்டுப் பயணமே என் விருப்பம் நிறைவேறும் முதல் படியாக உதவுகிறது.......'

பரிமளம் கையில் கடிதத்துடன் மெல்லக் கீழே சரிந்தாள். அதற்கு முன்பே அவள் உள்ளம் சுருண்டு விட்டது.



பூனை : ஏனய்யா ? உன்மேலுள்ள வண்ணப் பட்டை வெள்ளம் போன புதுசிலேயேபோது அடிச்சதா, இல்லே, இந்த புதுசு 'ஜீப்ராக் கிராஸிங்'கை உத்தேசித்துப் புதுசா இப்ப அடிச்சீங்களா?

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

தன் அறையில் அபூர்வமாக மாமியாரைக் கண்டதும் பரிமளம் எழுந்து நின்றாள்.

''என்னமோ கேட்க வந்தேன்; மறந்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டு அறையை ஒரு சுற்றுப் பார்த்தாள் மாமியார்.

திடீரென அவள் குரல் வேறு விதமாய் மாறி உரக்கவும் ஒலித்தது: ''என்னடி காரியம் செய்திருக்கிறாய்?''

பரிமளம் பதறி, ''என்னம்மா?'' என்றாள்.

''அவன் என் இருக்கிறான் என்ற எண்ணமா உனக்கு? உயிரோடு இருக்கிற வர்கள் படத்துக்குப் பூ வைத்துப் பொட்டு இட்டு எல்லாம் செய்வார்களா யாராவது?''

பரிமளம் பார்வையை உயர்த்தி வாசு வின் படத்தைப் பார்த்தாள். அந்தச் செம் பருத்திப் பூ அவள் மாமியாரின் கண்களைப் போல் ஜிவ்வென்று சிவப்புடன் தோன்றியது. இரண்டடி முன்னால் நகர்ந்து அந்தப் பூவை எடுத்துக் கீழே எறிந்தாள் பரிமளம். அவள் மாமியார் தோளில் இடித்துக் கொண்டு பேசிக் கொண்டே வெளியேறினாள்: ''அது தான் அதிருஷ்டம் தீர்த்துக் கட்டினாற்போல் தெரிந்திருக்கிறதே. புத்தி போகிற போக்குக் குக் தகுந்தாற்போல் எல்லாமே நடக்கும்!''

மறு நாள் குடத்துடன் குளிக்கச் சென்ற போது. ஆற்றில் இறங்குமுன்னே அவள் பார்வையில் இன்னொரு காட்சி தென்பட் டது. நேற்றைவிட இன்று ஆற்றில் வெள்ளம் அதிகம். நட்ட நடுவில் ஒரு பூமாலை மிதந்து வந்தது. நீர்ச் சுழிப்பு அதை அலைக்கழித்து இழுத்துச் சென்ற விதம் பரிமளத்தின் உள் ளத்தில் பீதியை உண்டு பண்ணியது.

சில நிமிஷங்களில் இன்னொரு தோற்றம் அவளை நிலைகுத்திக் காணச் செய்தது. துறைக்கு நேராக ஒரு முதலை முழுமே எழுந்து வெள்ளத்தைத் துழாவி எதிர்நீச்சப் போட்டுக் கொண்டிருந்தது. பயத்தினால் அவள் உடம்பே மெதுவாகி விட்டது. ஆற்றில் இறங்க வேண்டாம் என்று தீர்மானித்துக் கொண்டு திரும்பி நடந்தாள் பரிமளம். இந்த அடையாளங்கள் அவள் மனத்தில் கலவரத்தை உண்டுபண்ணின. 'மாமி பேசியது போல நான் அவர் படத்தில் வைத்தது தவறுதானோ? ஏதாவது விபரீதம் நடந்திருக்குமோ?'

ஒரு வாரம் கழித்து ஒரு நாள்; பரிமளத் தின் மாமியார் கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். ''மாமி, மாமி!'' என்று, நாலு வீடுகள் தள்ளி ஒரு வீட்டிலிருந்தவன் கூப்பிட்டுக் கொண்டு வந்தான்.

''யாரு சேவுவா? என்னடா வச்சிருக்கே எனக்கு?'' என்று கேட்டு நின்றாள் மாமி.

''உங்களுக்கு ஒரு ரொம்ப முக்கியமான சேதி, மாமி. உங்க வாசு வந்திருக்கிறான் !''

''நிசம்மாவா? அட சேவு, நீ சொல்றது நிசந்தானா? தாயி, மீனாட்சி! என் வயித்துலே பாலை வார்த்தியோ?.... ஏ, பரிமளம்.....'' என்று குழந்தை மாதிரி கூவிக் கொண்டும் தாவிக் கொண்டும் உள்ளே ஓடினாள் மாமி.

பரிமளம் இதைக் கேட்டுக் கொண்டு ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி நின்றாள். அவள் காதுகளில் தேனோ பனியோ பெய்து இதயம் குளிர உறைவதுபோல் இருந்தது.

மீண்டும் அதே குழந்தைத்தனமாய் வெளியில் வந்த மாமி, ''சேவு, இப்போ அவன் எங்கே? நீ உன் கண்ணாலே பார்த் தியா? அவனேதானா?'' என்று கேட்டாள்.

''அவனேதான், மாமி, அவனுக்கு என்னே மறந்தாலும் நான் அவனே மறப் பேனா மாமி? சாட்சாத் உங்க வாசுதான். வெள்ளைக்காரன் மாதிரி இருக்கிறான் ஆள். எல்லாம் அதே தோரணைதான். அக்கரை பங்களாவிலே தங்கி யிருக்கிறான். அவ னோட கூட ஆளு, படை, மோட்டார், சமையல்காரன்னு ஒரு முகாமே வந்திருக்கு.''

''கூப்பிடு தொலைவிலே வீடு இருக்கிறப்போ அங்கே போயி பங்களாவிலே ஏன் தங்கறான்?''

''அவனுக்கு இந்தப் பட்டிக்காடு பிடிக் குமா மாமி?.....''

''நான் இப்போ இதே நடையா ஓடிப் போய் அவனைப் பார்த்திடுவேன்டா, சேவு! ஆனால் நான் அந்த நிலையிலேயா இருக்கேன்? அவன் ஐயா போயிட்ட சேதி கூடத் தெரி யாமயா இருப்பான்?....நீ போயி ராமலிங் கத்தை வரச் சொல்லு. அவருக்கு மரிச்சுக வீட்டுக்கு வாரானு பார்ப்போம்.''

இரவோடு இரவாக ராமலிங்கம் பங்களா வுக்குப் போய் வந்தார். ''கார் அனுப்பு கிறேன்; அம்மாவை உடனே வரச் சொல் லுங்கள்'' என்று வாசு கூறிய செய்தியுடன் தான் வந்தார்.

இருபத்தி நாலு மணி நேரம்கூடப் பொறுக்க முடியவில்லை அவள் தாயாருக்கு. காரை எதிர்பாராமல், நியதி — நியாயம் என்று பாராட்டாமல் வண்டி கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

மாமி போனதும் சேவுவும் ராமலிங்கம் என்பவரின் மகனும் ராமானுஜுலுவின் வீட்டுத் திண்ணைக்குப் பக்கத்தில் வந்து கூடிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''அக்கரை பங்களாவுக்குப் போகலியா நீ? உங்கப்பா போய் வந்தாரே?'' என்று ஆரம்பித்தான் சேவு.



தீபாவளி
பண்டிகைக்கு
விசேஷ தள்ளுபடி
ரூபாய்க்கு 10 பைசா
இப்போழுது உள்ள
விலையில்
கோ-ஆப்டெக்ஸ்
கற்பனை
கை வண்ணம்
எழில்
ஒருங்கே
அமைந்தது.
கைத்தறித் துணி
விற்பனையில்
இந்த தள்ளுபடி எல்லா "கோ-ஆப்டெக்ஸ்"
விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர்
கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும்.
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
பாலசுந்தரம் பில்டிங், எழும்பூர், சென்னை-8.

"ஊருக்குள்ளே வந்தால் கௌரவக் குறைவுன்னு இருக்கிறவன்கிட்டே நமக்கு என்னப்பா வேலை? ஆனா ஏக ஸ்டைலா இருக்கானாம். வாயிலே புகைக் குழாய் ஆட ஆடத்தான் அப்பாகிட்டே பேசினானாம்."

"பழைய வாசுவாப்பா அவன்? ஆர். வி. டெவான் அப்படின்னு பேரையே மாத்திக் கிட்டிருக்கானே....." என்று 'சடக்'கென்று ஞாபகம் வந்தவனுகப் பின்னும் திரும்பிப் பார்த்தான் சேவு. பரிமளம் வெறித்தபடி நின்றிருந்தாள்.

மாமி திரும்பி வந்த பிறகு அவனும் பரிமளத்திடம் வந்து எதுவும் சொல்லவில்லை. பரிமளமும் அவனிடம் போய் எதுவும் கேட்கவில்லை. இப்போது சில நாட்களாக எதிர்பாராத பலகாரங்கள் தயாராகி, விருந்தவை வைத்து நடைபெற்றிருந்தன. இட்டிலி ஒரு நாள்; ஒரு நாள் சேவை வகைகள்; இன்னொரு நாள் கோதுமை அல்வாவும் தயிர் வடையும். பெற்ற பாசம் தூண்ட இப்படிப் பாடுபடுகிறாள் மாமி என்பது புரிந்தது பரிமளத்துக்கு.

அன்று வாசலில் வண்டி பூட்டி நிறுத்தியிருந்தது. மாமி கையில் டிபன் காரியருடன் பரிமளம் இருந்த இடத்துக்கு வந்தாள்.

"வேறே புடவை கட்டிக் கொண்டு தலையைக் கோதிக்கொண்டு புறப்படு" என்றாள்.

"எங்கே?" என்று சுருக்கமாக, ஆனால் தீர்க்கமாகக் கேட்டாள் பரிமளம்.

"என்ன எங்கேன்னு கேட்கிறே, தெரியாதவளாட்டம்! அவனைப் பார்க்கணும்னு புறப்படு. இன்னும் இரண்டு நாட்களிலே அவன் காம்ப் முடிந்து போகிறானாம்......"

"போகட்டும்! நான் எங்கேயும் வரப்போவதில்லை. யாரையும் பார்க்க வேண்டாம்!"

"அத்தனையா உனக்கு?" என்றபடி விடுவிடுவென்று போய் விட்டாள் மாமி.

அன்று மாலை பரிமளம் வாசலில் விளக்கு வைத்து விட்டு, தெருக் கதவை இழுத்து வெளித் தாழ் இட்டுவிட்டுத் தெருவில் இறங்கி நடந்தாள். அவள் நினைவில் ஆற்றில் மிதந்த பூமாலையும் முழுகி எழுந்த முதலையும் இன்று இதுவரை நூறு முறைகள் தோன்றி மறைந்தன. காலையில் போன மாமி இன்னமும் திரும்பாதது அவளுக்கு நல்லதாகத் தோன்றியது.

மேடு ஏறி ஆற்றங்கரையை அடைந்த போது அவள் எதிரே யாரோ வருவது தெரிந்தது. மாலை உலாவின் நடையில் எதிரே வந்த வாசு அவள் அருகே தயங்கிய படி மெல்ல நடந்தான். பரிமளம் நின்று அவனை ஏற இறங்கப் பார்த்தாள். அவன் வாயிலிருந்து அந்தப் பைப்பை எடுத்துக் கையில் இடுக்கிக் கொண்டு, "ஓ! இட் இஸ்யூ!" என்றான்.

"நானேதான். இன்னும் இருக்கிறேன்.."

"ஓ! அது உன் இஷ்டம்! இருப்பது இல்லாதது யார் கையில் இருக்கிறது?"

"உங்கள் கையிலும் இருக்கிறது. ஏன், என் கையிலும் இருக்கிறது. ஏன், நான் இருப்பதோ இல்லாததோ உங்களைப் பாதிக்கிற விஷயம் இல்லையா?"

"என்னை ஏன் பாதிக்கிறது? அந்த வகையில் எல்லாம் நான் பொறுப்பில்லாதவன் என்று அன்று முதல் விலகி நிரூபித்திருக்கிறேனே!" என்றான் வாசு அலட்சியமாக.

"என் வாழ்க்கையை அழித்த பிறகு நீங்கள் எதை நிரூபித்தால் என்ன, நிரூபிக்காவிட்டால் என்ன? இந்தப் பெரிய தவறுக்கு ஈடு செய்ய முடியுமா உங்களால்?"

"முடியுமே! ஈடு செய்யத்தான் போகிறேன். அந்தத் தவறு மட்டுமில்லை; இங்கே 'காம்ப்' வந்த பிறகு இன்னொரு தவறுகூடச் செய்து விட்டேன். அம்மா வந்த பிறகு மறு நாளாவது நீ வருவாய் என்று எதிர்பார்த்த தவறுதான். நான் இரண்டாவதாகவும் கடைசியாகவும் செய்தது!"

"நான் வருவேன் என்றா? நான் ஏன் வருவேன்? இன்னொரு ஜன்மத்தில் நீங்கள் இப்படிச் செய்தால்கூட நான் வரமாட்டேன்! என்னைப் பார்க்க வரவேண்டியது உங்கள் கடமை இல்லையா? இன்னொருத்தி உங்களுக்கு வருவாள் என்று வைத்துக் கொண்டால்கூட, அவளும் அந்தத் தவறைச் செய்ய மாட்டாள்!"

வாசு விஷமமாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பைக் கண்டபோது அவளுக்கு அன்று நடு ஆற்றில் முழுகி எழுந்த முதலையின் தோற்றம் நினைவில் வந்தது.

"நீ புறப்படுகிற வரையில் அம்மா திரும்பி வரவில்லையா?"

"யார் வந்தால் எனக்கென்ன! எனக்கு யாரையும் பார்க்க வேண்டியதில்லை."

"அதற்குச் சொல்லவில்லை; அம்மாவைப் பார்த்திருந்தாயானால் சற்று முன் சொன்னதைத் திருத்தியே சொல்லியிருப்பாய்!"

"எதை?"

"யாரோ வருவதாக வைத்துக் கொண்டால்கூட என்றாயே; அதைப் பற்றிய உறுதியை அம்மா அறிவாள். அதைக் கேட்டுத்தான் ஆற்றங்கரையை நோக்கி ஓடி வந்து விட்டாய் என்று நினைத்தேன்....."

"இன்னொரு தடவை அப்படிச் சொல்லாதீர்கள். நான்கூடக் கோழை இல்லை. நான் இன்னும் நூறு வருஷங்கள் இருப்பேன். அந்தப் பூஜை அறை இருக்கிற வரை — துன்பம் தராத அந்தத் தெய்வத்தையும் வழிபட்டுக் கொண்டு, நீங்கள் விரும்புவதையோ, விரும்பாததையோ பொருட்படுத்தாமல், உங்கள் படத்தையும் வணங்கிக் கொண்டு வெகு நாட்கள் இருப்பேன்......"

"அப்படியானால் பெருமைப்படுகிறேன்."

"நீங்கள் எதற்கும் பெருமைப்பட்டுப் பயனில்லை. என் பெருமையைச் சொல்லட்டுமா? நான் உங்களை மணந்தேன்; உங்கள் ஒருவரையேதான் நினைந்து வாழ்வேன். இதை விடப் பெருமைப்பட உங்களிடம் என்ன இருக்கிறது?" என்று கேட்டு விட்டுப் பரிமளம் ஒரு முறை அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மடமடவென ஆற்றங்கரைச் சரிவில் இறங்கி விட்டாள். இதுவரை வாய் வீச்சாகப் பேசிக் கொண்டிருந்த வாசு இதற்கு மறுப்புக் கூறாமல் மௌனமாகி, அவள் வேகமாக ஊர் நோக்கி நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. பை.	அரை வருஷம் ரூ. பை.
இந்தியா இலங்கை	18-00	9-00
பர்மா, மலேயா இதர நாடுகள்	25-00	12-50

தனிப் பிரதி விலை 35 காசு

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி. பி. பி. கிடையாது

மானேஜர்:
கல்கி காரியாலயம், சென்னை-10

சுவையான சர்ச்சைகள்

ரேகை சாஸ்திரம் ஓர் ஏமாற்று வித்தை

•

குற்றம் சாட்டுபவர்:
ஆர். கிருஷ்ணமூர்த்தி, கீழ்ப்பாக்கம்

மறுப்பவர்:
வே. வைத்தியநாதன், தி. நகர்

'ஜோலியில்லாதவன் ஜோசியம் கேட்பான்' என்று எங்கள் பக்கத்தில் ஒரு சொற்றொடர் வழக்கத்தில் உண்டு. பல்லைக் காட்டி அவசரத் தேவைகளுக்குக் கைமாற்று வாங்கி, அரிசிக் கார்டு, சர்க்கரைக் கார்டு என்ற பல்வேறு கார்டுகளைக் காட்டிச் சாமான் வாங்கிப் பலர் குடும்பம் நடத்திக் குப்பை கொட்டிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், தெரு முனைக்கு முனை உட்கார்ந்திருக்கும் கைரேகை ஜோதிடர்களிடம் சிலர் தங்கள் கைகளைக் காட்டி அவர்கள் முகம் பார்த்து உட்காருவதைப் பார்க்கும்போது எனக்கு மேலே சொன்ன சொற்றொடர் நினைவுக்கு வருவதில் ஆச்சரியமில்லை.

இந்தக் கைரேகை ஜோசியம் ஒரு சரியான 'ஹம்பக்' என்பது என் அபிப்பிராயம். ஏதோ இயற்கையாக உள்ளங் கையில் அமைந்திருக்கும் கோடுகளுக்கும் மேடுகளுக்கும் விதம் விதமான பெயரைக் கொடுத்து எந்தப் புண்ணியவானோ வேடிக்கை பண்ணப் போக இன்று வியாபார ரீதியில் அது ஏகமாகப் பெருகிப் பல பேர்கள் பிழைப்புக்கு வழி செய்திருக்கிறது. வேறு ஒன்றுமில்லை.

உள்ளங்கை ஒரே சீராக வழுவழுப்பாக இருந்தால் எதையும் உறுதியாகப் பிடித்துக் கொள்ள இடம் கொடுக்காமல் வழுக்கி விடும் என்பதற்காக இயற்கை மானுடர்களுக்கு அளித்துள்ள சாதனம்தான் அந்தக் கோடுகள். இதை அவர்களின் தலைவிதியின் புகைப்படம் என்று சொல்லி ஜோசியப் புரளி செய்கிறார்கள்.

'சினிமாக் கொட்டகையில் இன்று டிக்கட் வாங்க முடியுமா?' என்று கேட்கவா அல்லது 'இன்று ஆபீஸ் காண்டீனில் மோர்க் குழம்பு வடை போடுவாளா?' என்று கேட்கவா ஒவ்வொருத்தன் கைரேகை பார்க்கப் போகிறான்? அவனவனுக்கு ஒரு மனக் கலக்கம். அது நிச்சயமாகப் பணக் கலக்கம். இது தெரியாதா, அந்தப் பலன் சொல்கிறவருக்கு? இதற்குக் கையையா பார்த்துச் சொல்ல வேண்டும்? முகத்தைப் பார்த்தாலே போதுமல்லவா!

பாவம்! ஓர் அப்பாவி ஆசாமிக்குக் கொஞ்சம் பணக் கஷ்டம். ஆபீஸில் கணிசமான ஒரு கிம்பளம் வர ஒரு சான்ஸ் இருந்தது. ஆனால் ஆசாமிக்கு அதை வாங்கப் பயம். இடையே தம் நெருக்கடி தீர வேறு ஏதாவது வழி உண்டா என்று அறியக் கைரேகைக்காரரிடம் தம் முகத்தையும் கையையும் ஏக்கக் குரலையும் நீட்டினார். ஜோதிடருக்கு இது போதாதா! இந்த ரகத்தாருக்கு வழக்கமாகப் பாடும் பாட்டை - உமக்குச் சீக்கிரமே எதிர்பாராத இடத்திலிருந்து செல்வம் வரப் போகிறது - என்ற பாட்டைப் பாடினார்.

கையைக் காட்டின மனிதர், 'ஆஹா! நாம் ஒதுக்கினால்கூட அந்தக் கிம்பளம் நம்மை விடாது. அதைத்தான் கைரேகை சொல்கிறது. துணிந்து வாங்கிவிட வேண்டியதுதான்' என்று வாங்கி விட்டார். அகப்பட்டுக் கொண்டும் விட்டார். உத்தியோகம் கோவிந்தா! கைரேகை பார்த்தவர் உபயம்!

'மேலை நாட்டார்களெல்லாம் இப்போது நமக்கே உரித்தான இந்த ரேகை சாஸ்திரத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள்! சீரோவைப் பற்றி உமக்குத் தெரியுமா?' என்று சிலர் என்னைப் பார்த்துச் சீறலாம். சீரோவும் மனிதன்தானே ஸ்வாமி! நாம் அவர்களின் டை கோட்டு பாஷையைப் பின்பற்ற ஆரம்பித்த மாதிரி அவர்கள் நம்முடைய கைக் கோட்டுப் புரளியைப் பின்பற்றியிருக்கலாமல்லவா? இங்கு ஒரு சம்பிரதாயம். ஆண்களின் வலது கைக் கோடுகளையும் பெண்களின் இடது கைக் கோடுகளையும் பலன் சொல்கிறவர்கள் பார்க்கிறார்கள். அந்த சீரோ இரண்டு கைகளையுமே பார்க்க வேண்டும் என்கிறாரும்! இதிலிருந்தே இந்த முறையில் முரண்பாடுகள் இருக்கின்றன என்று தெரியவில்லையா? இதயரேகை என்ற கோடு நேராகப் போய் வலது பக்கம் வளைந்தால் அதற்கு விசேஷ பலன்களாம். அதே ரேகை இடது பக்கம் வளைந்திருந்தால்.... அவர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்! காரணம் அந்த நாளில் புஸ்தகம் எழுதி வைத்தவர்கள் இதைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை!

ரேகை பார்ப்பவர்களுக்குக் காசு பழுக்கிறதே தவிர பலன் கேட்பவர்களுக்கு ஜோசியம் பலிப்பதில்லை! என்ன காரணம் என்று கேட்டால், ரேகை ஜோதிடர்களுக்கு நல்ல பலன் இருக்கும்போதுதான் அவர்கள் சொல்வதும் பலிக்குமாம்!

ரேகை ஜோதிடத்துக்கும் உண்மையான வருங்காலப் பலனுக்கும் சம்பந்தமே இடையாது. அதற்கும் மனோதத்துவத்துக்கும் வேண்டுமானால் உறவு இருக்கலாம்! எதிராளியின் பேச்சிலிருந்தே அவனைத் திருப்தி செய்யப் பலன்கள் சொல்வது சிறந்த நடிப்பு! அதைத்தான் வியாபாரமாகக் கையாளுகிறார்கள்!

எந்த விஷயத்திலும், தாம் நம்பிக்கை வைக்காமலும் பிறர் நம்பிக்கை வைக்காதபடி கலைப்பதிலும் ஆர்வம் காட்டுவார்கள் சிலர். இத்தகைய விதண்டாவாதக்காரர்களின் பட்டியலில் இடம் பெறக் கூடியவராகத்தான் தோன்றுகிறார் நண்பர் கிருஷ்ணமூர்த்தி.

எந்த உயர்ந்த நல்ல மருந்துக்கும் வியாதிகளைப் பூரணமாகக் குணப்படுத்தும் தன்மை கிடையாது. 'இந்த மருந்து குணத்தைக் கொடுக்கும்' என்ற நம்பிக்கையுடன் அந்த மருந்து உள்ளே போகும்போதுதான் பூரண குணத்துக்கு வழியுண்டு. நம்பிக்கைக்கு அத்தகைய சக்தி. ரேகை சாஸ்திரப் பலன் என்ற மருந்துக்கும் அந்த நம்பிக்கை தேவை. இதை நண்பர் கிருஷ்ணமூர்த்தி உணர்ந்ததாகத் தெரியவில்லை.

எண்ணத் தொடர்புள்ள மனம் இருக்கிறதே! இது இருவகைப்பட்டது. ஒன்று அக மனம். மற்றொன்று புற மனம். புற மனத்தை ஒரு கட்டுக்குள் வைத்துக் கொள்ளும் சக்தி அக மனத்துக்கு உண்டு. கடைத் தெருவில் கண் கவரும் ஒரு பொருளைக் கண்ட மாத்திரத்தில் வாங்கத் துடிக்கும் புற மனம். அதற்கான பணத் தட்டுப்பாட்டைச் சுட்டிக்காட்டி ஆசையை அடக்க முன் வருகிறது அகமனம். இந்த அக மனத்தின் பிரதிபலிப்புத்தான் ஒவ்வொருவர் கைகளிலும் கோடுகளாக அமைந்து விழுகின்றன. அக மனத்தைக் கட்டுப்படுத்தும் புற மனங்களும் உண்டு. அவர்களின் கைரேகைகளின் அமைப்பும் வேறு விதமாகத்தான் இருக்கும்.

கிராமபோன் இசைத்தட்டுகளில் லேபிளை மறைத்து, பாடுகிற பகுதிகளை மாத்திரம் பார்த்தால் எல்லாக் கோடுகளுமே ஒரே மாதிரியாகத்தான் தென்படும்; கிராமபோனில் மாட்டிச் சுற்றும்போதுதான் அந்த இசைக்கு உரிமையானவர் அரியக்குடி ஐயங்காரா அல்லது ஆஷா போன்ஸ்லேயா என்று தெரிய வரும். இதே போலத்தான் ஒவ்வொரு நபருக்கும் தனித் தனி ரேகை அமைப்புக்கள்.

போலீஸ் இலாகா வேலூரில் நிறுவியிருக்கும் ரேகைப் பரிசோதனை சாலையைப் பற்றி நண்பர் கேள்விப்பட்டிருக்க மாட்டார் என்று தோன்றுகிறது. ஏறக்குறைய லட்சத்தை எட்டும் குற்றவாளிகளின் கைரேகைகளை அங்கு சேகரித்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும் தனி ரகம். காது கண் மூக்குகளை மாற்றிக்கூடப் புது மனிதராக யாரும் தோற்றமளிக்கலாம். ஆனால் கைரேகைகளை யாராலும் மாற்றிக் கொள்ள முடியாது. காயம் பட்டு ஆறியபிறகும்கூட அதே பழைய ரேகைகள் மீண்டும் தோன்றி விடுகின்றன. அதே இடத்தில், அதே அமைப்பில்!

நான் நேரில் கண்ட அனுபவம். ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது எதிரே அமர்ந்திருந்த முன்பின் தெரியாத ஒரு சகப் பிரயாணியுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். பேச்சு எதிலெல்லாமோ தாவி ரேகை சாஸ்திரத்தில் வந்து நின்றது. எதிரேயிருந்தவர் என் கையை விரிக்கச் சொல்லிப் பார்த்தார். பிறகு ஒரு காகிதத்தில் சில நிமிடங்கள் ஏதோ எழுதிக் கொண்டார். அதை மடித்து வைத்துக் கொண்டு, என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டார். அத்தனையும் உண்மையாக இருந்தன. அவர் தம்முடைய பெயரையோ விலாசத்தையோ சொல்ல மறுத்து விட்டார். இடைவழி ஸ்டேஷன் ஒன்றில் அவர் இறங்கியபோது கையிலிருந்த காகிதத்தை நீட்டி, 'இது உங்கள் ஜாதகம். ரேகை அமைப்புகளிலிருந்து கணித்து எழுதியது' என்று கொடுத்து விட்டுப் போனார். நான் வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாக என் அசல் ஜாதகத்தை எடுத்து ரயில் நண்பர் கொடுத்ததுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். நூற்றுக்கு நூறு ஒற்றுமை! ஆகவே, கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கை ரேகைகளிலிருந்து சொல்ல இயலும்போது வருங்காலத்தைப் பற்றிச் சொல்ல முடிவது ஒன்றும் பிரமாதமில்லையே! ஆனால் அதற்கு அனுபவம் வேண்டும். வெறும் புத்தகப் படிப்பு மாத்திரம் உதவாது.

ரேகை ஜோசியரின் நல்ல காலத்தைப் பற்றிக் கேலியாக நண்பர் குறிப்பிட்டார். கல்யாண வீடுகளிலோ, மற்ற விசேஷச் சம்பவங்களிலோ, சம்பந்தப்பட்டவர்களை ஆசீர்வதிக்கும் வேளையில் ஒரு புரோகிதர் மாத்திரம் அதற்கான மந்திரங்களைச் சொல்ல மாட்டார். அங்கிருக்கும் மற்றவர்களும் அந்த ஆசீர்வாத கோஷத்தில் சேர்ந்து கொள்வார்கள். ஏன்? அவர்களுள் ஒருவருக்காவது அந்த நேரத்தில் நல்ல யோகம் இருந்து அவர்கள் வாக்குப் பலிக்காதா என்றுதான்!

ரேகை சாஸ்திரம் ஆதார பூர்வமானது. அது முக்காலத்தையும் தெரிவிக்கும் தீர்க்கதரிசி!



ஆர். கிருஷ்ணமூர்த்தி



வே. வைத்தியநாதன்

காதல் இல்லையேல் காதல்



'சோ'

[மாலதியை மணக்க நாகராஜனுக்குப் பணம் தேவைப்பட்டது. பம்பாய்ப் பிரமுகர் சிவேசன் சுரேஷிடம், கவிஞர் மறைந்த பிறகே அவர் குடும்பத்துக்கு உதவிபுரிய முன் வருவதாகக் கூறவும், பணம் அவரிடமிருந்து பெறப் புதிய யோசனையை நாகராஜனிடம் கூறினான் சுரேஷ். அவன் செத்துப் போய், அவன் தம்பி நிஜநாகராஜனாக நடிக்க வேண்டும் என்பது சுரேஷின் யோசனை. அதைக் கேட்டதும் நாகராஜன் கதி கலங்கிப் போனதில் என்ன அதிசயம்?]

சுரே: பைத்தியக்காரனு இருக்கியேடா. உன்னை ஜெயில்லே தள்ளிட்டு நான் சும்மா இருப்பேனா?

நாகு: என்னடா செய்வே?

சுரே: தினம் வந்து பார்த்துக்கிட்டு இருப்பேன்! போடா, முட்டாள்! அந்த மாதிரி எதுவும் நடக்காது. தைரியமா இரு!

நாகு: ஏதோ உன்னை நம்பி இந்தக் காரியத்துலே இறங்கறேன்.

சுரே: கவலைப்படாதே. இதான் ஒரே வழி. மிஸ்டர் பம்பாய்கிட்ட, நாகராஜன் தம்பி ரொம்பக் கஷ்டப்படறான்னு சொல்லி எப்படியாவது பணத்தை வாங்கணும். போறததுக்கு ஜனங்ககிட்டே ஒரு நிதி திரட்டணும்!

நாகு: என்னைத் தெருத் தெருவா உண்டி குலுக்கச் சொல்றியா?

சுரே: சே, சே! அப்படியில்லே. 'கவிஞர் நாகராஜன் குடும்ப நிதி'ன்னு போட்டு ஒரு டான்ஸ் அரேஞ்ச் பண்ணிட வேண்டியது. நமக்குத் தெரிஞ்சவங்க கிட்டேயே எல்லாம் டிக்கட்டைக் கட்டிடணும் சீக்கிரம்.

நாகு: டிக்கட்டிலே வர பணம், டான்ஸ்காரிக்குக் கொடுக்கிறதுக்குத்தான் சரியா இருக்கும்.

சுரே: ஒண்ணுமே தெரியலியேடா உனக்கு. அரங்கேற்றத்துக்கே சான்ஸ் இல்லாமல் தவிக்கிற நாட்டியக்காரி யாரையாவது கூப்பிட்டுப் ப்ரோகிராம் நடத்த வேண்டியது தானே. சொல்லப் போனா, டான்ஸ் பண்ண சான்ஸ் குடுத்ததுக்காக, அவளே நமக்குக் கொஞ்சம் பணம் தருவா!

நாகு: எல்லாம் நீதான் கவனிக்கணும். சுரேஷ்....

சுரே: டேய், நான் கவனிச்சுக்கறேன். ஆனா நீதான் இந்த மாதிரியெல்லாம் திட்டம் போட்டு வேலை செஞ்சு பணத்தைச் சம்பாதிச்சேன்னு கனகசபை நினைக்கணும். அப்பத்தான் மாலதியை உனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பார் இல்லையா?

நாகு: ஆமாண்டா.... யெஸ்.... யெஸ்... அதுக்கு என்னடா வழி?

சுரே: நேரா உன் ரூமுக்குப் போவோம். நான் என் திட்டத்தைச் சொல்லிக்கிட்டே வரேன். நீ அதை அப்படியே ஒரு வார்த்தை விடாமே எழுது. ஒரு கவரிலே அதை வெச்சு 'ஸீல்' பண்ணி மாலதிகிட்டே கொடுத்து இரண்டு மாசத்துக்கப்புறம்தான் பார்க்கணும்னு சொல்லிடு.

நாகு: கரெக்ட்! அதுக்குள்ளே, நானும் பணத்தைச் சேர்த்துக்கிட்டு வந்து கனகசபை முன்னாலே நோட்டுக் கத்தையை நீட்டுவேன்! 'எப்படிரா சம்பாதிச்சே? நீயாவா சம்பாதிச்சே'ன்னு கேட்பார். மாலதிகிட்டே யிருந்து கவரைப் பிரிச்சுக் காட்டுவேன். நம்ம திட்டம் சும்மா அவரை அப்படியே அசந்து போக வெச்சுடும்.

சுரே: அவ்வளவுதான்! தீர்ந்தது!

நாகு: ஆமாம், அவ்வளவுதான்! ஏமாத்திப் பணம் சம்பாதிக்கிறவனுக்கு, மாலதி கிடையாதுன்னு சொல்லிடுவார். தீர்ந்தது!

சுரே: சரியான இடியட்ரா நீ. பணத்தை எந்த வழியிலே வேணுமானாலும் சம்பாதிச்சுக்கிட்டு வான்னு அவர்தானே சொல்லியிருக்கார்? உனக்குச் சாமர்த்தியம் இருக்குன்னு நிரூபிக்கணும். அவ்வளவுதானே.

நாகு: இந்த மாதிரியெல்லாம் நான் செஞ்சா, மாலதி என்னைப் பத்தி என்னடா நினைப்பா?

சுரே: 'தனக்காக எதையும் செய்யத் துணியும் வீரத் தமிழன்'னு நினைப்பா.

நாகு: கடவுள்தான் என்னைக் காப்பாத்தணும்.

சர்வர் (வந்து): என் ஸார், பில்லுக்குக் கொடுக்கக் கையிலே பணம் இல்லையா? நீங்க ரெண்டு பேரும் இவ்வளவு நாழி

உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்தே நான் சந்தேகப்பட்டேன் !

நாகு: சே.... சே..... அதில்லேப்பா....

சர்: பரவாயில்லே சார். என்பது நயா பைசாதானே. இந்தாங்கோ. ஒரு ரூபா வைச்சுக்குங்கோ. பஸ்ஸுக்கும் இருக்கட்டும். இன்னொரு தடவை வரச்சே திருப்பிக் கொடுத்துடுங்கோ! என்ன முழிக்கிறேள்! பொறந்தியார் கஷ்டப்படறதை நான் பார்க்க மாட்டேன்! பிடியுங்கோ காசை! எனக்கு டைம் ஆறது! (ரூபாய் நோட்டை நாகராஜன் கையில் திணித்துவிட்டுச் சர்வர் போய் விடுகிறான்.)

சுரே (நாகராஜன் முதுகில் அறைந்து) : டேய் ,நாகு! உனக்கு அதிர்ஷ்ட காலம் அடிச்சாச்சு! நம்ம திட்டம் போட்ட உடனேயே கை மேலே காசு !

நாகு: ஆமாம், பெரிய காசு! ஒரு ரூபாய் கலபமாய்ச் சம்பாதிச்சாச்சு. பாக்கி ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூத்தொன்பது ரூபாய்க்கு எங்கே போறது?

சுரே: அத்தனை ஹோட்டல்களுக்குப் போகலாம் ! ஜெம்புடா இடியட்! மேலே காரியம் எல்லாம் மளமளன்னு நடக்கணும். நேரே சென்ட்ரலுக்குப் போய் பாம்பேக்கு ரெண்டு டிக்கெட் 'புக்' பண்ணிட்டு வரணும்.

நாகு: ஆரம்பத்திலேயே 'புக்' பண்ணறே. கடைசியிலே என்னை 'புக்' பண்ணி ஜெயில்லே தள்ளிடாதே !

காட்சி 14

[கனகசபை வீடு. மாலதியும் நாகராஜனும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

மாலதி: நாகராஜன்! அப்போ பம்பாய்க்குப் போறதுன்னு நீங்க நிச்சயம் பண்ணிட்டீங்களா?

நாகராஜன்: நான் என்ன நிச்சயம் பண்றது? என் பிரெண்ட் சுரேஷ் நிச்சயம் பண்ணிட்டான்.

மாலு: அவரை நம்பிப் போறீங்களே. இரண்டு மாசத்திலே பத்தாயிரம் சம்பாதிக்க முடியுமா?

நாக: உனக்கு சுரேஷைத் தெரியாது. எமகாதகப் பய. அவன் சொல்றபடி கேட்டா இரண்டு மாசத்திலே பத்தாயிரத்தை அலட்சியமாச் சம்பாதிக்கலாம்! அவன் பிளான் எப்பேர்ப்பட்ட பிளான் தெரியுமா?

மாலு: அவர் திட்டம்தான் என்ன? அதையும் சொல்ல மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறீங்களே.

நாக: அதைச் சொல்லிட முடியுமா? அப்புறம் அது தப்பித் தவறி உங்க சித்தப்பாவுக்குத் தெரிஞ்சுட்டா அவ்வளவுதான்! எங்க திட்டமே கோவிந்தா ஆயிடும்.

மாலு: எனக்குக் கூடத் தெரியக் கூடாதா?

நாக: மாலதி, இப்ப ஒண்ணும் கேக்காதே. இதோ பார், இந்தக் கவர்லே ஒரு பேப்பர்லே எல்லாம் விவரமா எழுதி வெச்சிருக்கேன். எங்க திட்டம் என்ன, எப்படிப் பணம் சம்பாதிக்கப் போறேன்னு எல்லாம் விரிவா எழுதியிருக்கேன். இந்தக் கவரை நீ இரண்டு மாசத்துக்கு முன்னே பிரிக்கவே கூடாது.

மாலு: ஏன்? (கவரை வாங்கி வைத்துக் கொள்கிறாள்.)

நாக: அப்புறம் அது சித்தப்பாவுக்குத் தெரிஞ்சா என் திட்டத்தை உருப்படியா நடக்க விடுவாரா? எப்படியாவது அதைக் குட்டிச்சுவராக்கிப்பிடுவாரு. அதனாலே இரண்டு மாசத்துக்கப்புறமா அதைத் திறந்து, என் திட்டத்தை நீயே சித்தப்பா கிட்டப் படிச்சுக் காட்டு. அப்படியே ஆசாமி அசந்து போயிடுவார்.

மாலு: சரி, நாகராஜன்! நீங்க சொல்றபடியே நான் கேக்கறேன். இரண்டு மாசத்திலே பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியலேன்னு என்ன செய்யப் போறீங்க?

நாக: என்ன செய்யறது? ஏதோ என் தம்பியை நம்பிப் போறேன்.

மாலு: உங்க தம்பியா? உங்களுக்குத் தம்பி இருக்காரா நாகராஜன்? நீங்க என்கிட்ட சொன்னதே யில்லையே?

நாக: எனக்கே சுரேஷ் சொல்லித்தானே தெரியும்? வந்து... அதாவது... எனக்குத் தம்பி.... யோகராஜன்... நான் நாகராஜன். பம்பாயிலே... வந்து...

மாலு: என்ன ஆயிடுத்து உங்களுக்கு? ஏன் இப்படி உளர்றீங்க?

நாக: நான் ஒண்ணும் உளறலியே. ஏதோ தப்பாப் பேசிப்பிட்டேன்....எனக்கு...



மாலு: நீங்க எங்கிட்ட எதையோ மறைக்கிறீங்க நாகராஜன்!

நாக: இல்லே மாலதி... என்ன நீ என் பேரிலேயே சந்தேகப்படறியே.

மாலு: சரி, நீங்க சொல்ல இஷ்டப்படலேன்னு நான் கேக்கலே.

நாக: நான் எல்லாத்தையும் பத்தி விவரமா அந்தக் கவரிலேதான் எழுதி உங்கிட்டயே கொடுத்துட்டேனே? இன்னும் என்ன உனக்குச் சந்தேகம்?

மாலு: உங்க தம்பியைப் பத்தியும் அதிலே இருக்கா?

நாக: என் தம்பியைப் பத்தியா? ஊம்..ஊம் இருக்கு.... எல்லாம் விவரமா இருக்கு.

மாலு: நாகராஜன், நீங்க நாளைக்கு பம்பாய் போறீங்க... இன்னும் இரண்டு மாசத்துக்கு உங்களைப் பார்க்கவே முடியாது. அதனாலே நான் கேக்கறதை நீங்க மறுக்கக் கூடாது.

நாக: கவிதைதானே? நீ கேப்பேன்னு தெரிஞ்சு நான் தயாராகவே எழுதி வெச்சிருக்கேன்.

மாலு: அப்பா! என் மனசை எவ்வளவு நல்லாப் புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க!

நாக: நீ முழிக்கிற முழியைப் பார்த்த உடனேயே அது கவிதை கேக்கிற முழிதான்னு தெரிஞ்சுக்கிட்டேனே நான்!

மாலு: கிண்டல் பண்ணாதீங்க. கவிதை எங்கே?

நாக: இதோ.. இந்தா...படி...

மாலு (ஆவலோடு வாங்கிப் படிக்கிறாள்):

"பம்பாயிலே நான் தம்பி
மாட்டிக்கிட்டா எண்ணுவேன் கம்பி
அம்மம்மோ இது பெரிய வம்பே!
நான் போகிறேன் நம்பி பாம்பே!

நாக: என்ன, எப்படி?

மாலு: அர்த்தம் சரியாலே புரியலியே?... பம்பாயிலே நீங்க தம்பியா? என்ன இது ஆரம்பமே புரியலியே!

நாக: கரெக்ட்! நானும் ஒண்ணும் புரியாமல் தான் ஆரம்பிக்கிறேன். நான் புறப்படறேன் மாலதி!

மாலு: இதுக்கு அர்த்தத்தைச் சொல்லிவிட்டுப் போங்க, நாகராஜன்!

நாக: இரண்டு மாசம் டைம்தான் இருக்கே. நீயே கஷ்டப்பட்டு அர்த்தத்தைப் புரிஞ்சுக்கோ!

மாலு: சரி, நானே கரெக்டா அர்த்தம் கண்டுபிடிக்கிறேன் பாருங்க... நாகராஜன் பம்பாய் போன உடனே என்னை மறந்துட மாட்டீங்களே?

நாக: சே! சே! காதலர்கள் பிரிஞ்சிருந்தா ஒருத்தரை ஒருத்தர் மறந்துட முடியுமா? நான் அன்னப் பறவையைத் தூது அனுப்பறேன், கவலைப்படாதே!

மாலு: அன்னப் பறவையா? இந்தக் காலத்துலே ஏது அன்னப் பறவை? அந்தக் காலத்துக் காதலர்கள்தான் அன்னப் பறவையை அனுப்புவாங்க. நீங்க அடிக்கடி எனக்கு லெட்டர் எழுதி போஸ்ட் பண்ணுங்க, போதும்.

நாக: அதைத்தான் நானும் சொன்னேன். நம்ப தபால் இலாகாவைப் பத்தி உனக்குத் தெரியாதா? நான் உனக்கு எழுதற லெட்டர் மெதுவா அன்ன நடை நடந்துக்கிட்டுத்தானே வரும்! இந்தக் காலத்து அன்னப் பறவை தான் 'ஏர் மெயில்' லெட்டர்!

காட்சி 15


(இதுவும் ஓர் அறைதான். இங்கு எப்படித்தான் மனிதன் வசிக்கிறானோ என்று வியக்கும்படியாக இருக்கும் ஒரு கூண்டு. ஐந்து மாடிகள். மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க ஏறிவந்து அடையவேண்டிய இடம். ஒரு மூலையில் அழுக்குத் துணிகள். பக்கத்திலே சலவை செய்த துணிகள். உட்காரவே இடம் இல்லாத அறையில் மேஜை நாற்காலி வகையறாக்கள். ஜன்னல் வழியேபார்த்தால் எங்கும் கட்டிடங்கள், கட்டிடங்கள்! துணிகளாலேயே கட்டப்பட்டவையோ என்று நினைக்கும்படியாக, ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வோர் அறையிலும் உள்ளேயும் வெளியேயும் கிடைத்த இடத்திலெல்லாம் துணிகளைக் காயப்போட்டிருக்கிறார்கள்.

சுரேஷ் அவசரம் அவசரமாகத் துணிகளைப் பெட்டியிலிருந்து எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறான். நாகராஜனோ ஏதோ சித்திரவதை அனுபவிப்பவன்போல் அமர்ந்திருக்கிறான்.)

சுரே: எப்படி பாம்பே?

நாக: சகிக்கலே. இது என்னடா ஊரா இது?

சுரே: நீ நாட்டுப்புறத்தான்டா! உனக்கு மெட்ராஸ்தான் லாயக்கு.



நாக: இங்கே வந்தப்புறம் எனக்கும் அப்படித்தான் தோணறது. டேய் சுரேஷ் எப்படா போய் அந்தச் சபேசனைப் பார்க்கப் போறே?

சுரேஷ்: ஆரம்பிச்சுட்டியா? வந்ததும் வராததுமா உன் வேலைதானு?

நாக: டேய், இரண்டு மாசம்தான் டைம். ஏற்கனவே நாலஞ்சு நாள் அவுட்.

சுரே: நானு! டோண்ட் வொர்ரி.

நாக: உன்கூட வந்தப்புறம் வொர்ரி பண்ணிக்கிட்டு என்ன பிரயோஜனம்? என் தலைவிதி.

சுரே: இஷ்டம் இல்லேன்னு திரும்பி மெட்ராஸ் போடா!

நாக: பம்பாய்க்கு வந்தா பணம் சம்பாதிக்கலாம்னு நம்பி வரவனுக்கு எல்லாம் இதுதான் கதி! கையிலே காலணு இல்லாம மெட்ராஸ் திரும்பிப் போக வேண்டியது தான். ரயில் டிக்கட்டுக்குக் கூட எங்கிட்ட பணம் கிடையாதேடா!

சுரே: அதனுலே என்ன? டிக்கட் இல்லாத பிரயாணத்துக்குத்தான் இப்போ மதிப்பு ஜாஸ்தி. டிக்கட் கலெக்டர் ரொம்ப முறைச்சா, கட்டண உயர்வை எதிர்த்துப் போராட்டம்னு சொல்லிப்பிடு! கழுத்தைப் பிடிச்சு ஜெயில் உள்ளே தள்ளுவாங்க. வெளியே வந்தவுடனே நான் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தறேன். ஒரு நிதி திரட்டறேன். கையிலே பணம் பத்தாயிரம். உன் கல்யாணம்!

நாக: எது இருக்கோ இல்லையோ, வாய் மட்டும் கிழியறது. எதுக்கெடுத்தாலும் நிதி திரட்டிப்பிடறேன்கிறது. நிதி திரட்டறது என்ன அவ்வளவு சுலபமா? போகட்டும். இதுக்குப் பதில் சொல்லு! சபேசனை இன்னிக்கே பார்க்கப் போறியா இல்லையா? (தொடரும்)

'சாணக்கியன்' பத்திரிகை வெளியீட்டு விழா

திரு ஜே. ராமபத்ரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மாதமிருமுறையாக, சுதந்திரக் கட்சி கருத்துக்களைத் தாங்கி வெளிவரும் ''சாணக்கியன்'' வெளியீட்டு விழா விஜயதசமியன்று பேராசிரியர் திரு எம். ரத்னசாமி எம். பி. தலைமையில் நடைபெற்றது.

முதலிதழை வெளியிட்ட திரு எஸ். எஸ். மாரிசாமி எம். பி. பத்திரிகை நடத்துவதில் உள்ள சிரமங்களையெல்லாம் விவரித்துப் பேசினர். அடுத்துப் பேசிய திரு சா. கணேசன் எம். எல். ஏ. சந்திரகுப்தனுக்கு மந்திரியாய் இருந்த சாணக்கியனின் அருமை பெருமைகளை விளக்கினர். ஒரு நேரிசை வெண்பாவை இயற்றிப் புதிய பத்திரிகையை வாழ்த்தினர்.

''.....செங்கோன்மை வாழவழி — தந்தவனும்
பேணற் குரிய பெரும்புகழோன் பேர்தாங்கும்
'சாணக்யன்' வாழ்க தழைத்து''

என்றார்.

திரு சித்திரா நாராயணசாமி வாழ்த்துரை கூறிய பிறகு ''சாணக்கியன்'' ஆசிரியர், ராஜாஜி அவர்களை ஆசி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள அதற்கிணங்கி ராஜாஜி அவர்கள் பேசியதாவது :

''தைரியமாகப் பத்திரிகை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்தியா சுயராஜ்யத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த அந்த நாளில் சுதந்திர இயக்கத்துக்கு லண்டனிலும் செல்வாக்கு ஏற்பட வேண்டுமெனக் கருதி ஒரு பத்திரிகையை ''இந்தியா'' என்ற பெயரில் தொடங்கினுர்கள். அந்தப் பத்திரிகை பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஆனால் கஷ்டங்களைக் கண்டு பயந்துவிடக் கூடாது. பயம் என்பது ஒரு பேயைப் போன்றது. இதற்குப் பணியாகக் கூடாது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று பயம் நாட்டில் தலைதூக்கியாடுகிறது. பயப்படாத நிலை உள்ளதே, அதுதான் வேதங்களில் மிக உயர்வான நிலை என்று சொல்லப்படுவது. அந்த நிலையைத் தேசத்தில் உண்டுபண்ணுவதுதான் நம் கட்சியின் நோக்கம். இந்தியா மீது பாகிஸ்தான் மாறுவேடத்தில் துருப்புகளை அனுப்பியதும் பிறகு பகிரங்கமாக இராணுவத்தை அனுப்பியதும் தவறு. இதற்காகப் பாகிஸ்தானைத் தண்டிக்க வேண்டும். இதில் ஆட்சேபனை இல்லை. பாகிஸ்தானைத் தடுத்து நிறுத்திய திரு சாஸ்திரியும் திரு சவானும் என் பாராட்டுக்குரியவர்கள். நான் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் பிரச்னை இதோடு தீர்ந்துவிடவில்லை. சீன ஆபத்து மிக மிகப் பெரியது. இதை உணர வேண்டும். உணர்ந்து சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். எது சரியான நடவடிக்கை என்பதுதான் கேள்வி. அதுதான் இப்பொழுது தகராறு. 'காஷ்மீர் நமது, நமது' என்று திரும்பத் திரும்ப ஜபம் செய்வது மாதிரியாகச் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? இவள்தான் என் மனைவி என்று எந்தப் புருஷனாவது தினமும் சொல்லிக் கொண்டிருக்கிறுனு?

''இப்படி நான் கேட்பதால் என் மீது கோபிக்கிறார்கள். இப்படி எழுதினுல் பத்திரிகை மீது கோபிக்கிறார்கள். திரு சாஸ்திரிக்கு இது புரியாமலில்லை; புரிகிறது. அவர் நல்லவர். அடக்கமானவர். ஆனால் கட்சிக்குப் பயப்படுகிறார். மாணவர்களுக்கு வாத்தியார் பயப்படலாமா? பயப்பட்டால் காரியம் நடக்குமா?''

இதுபோன்ற பல அரிய கருத்துக்களைக் கூறிய ராஜாஜி பத்திரிகைக்குத் தமது ஆசியைத் தெரிவித்தார்.

''சாணக்கியன்'' மாதமிருமுறை. பதினறு பக்கங்கள் கொண்டது. விலை : 20 காசு. வருஷ சந்தா ரூ. 5.

கிடைக்குமிடம்: ''சாணக்கியன்'', 4, வி. எஸ். முதலித் தெரு, சென்னை — 15.

காலச் சக்கரம்

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 38

சமூக சேவகி

வரப்புச் சண்டை, வம்புச் சண்டை, உறவுச்சண்டை, உணர்ச்சண்டை, பணச் சண்டை, பகைமைச் சண்டை என்றெல்லாம் பல ரகச் சொற்போர்களில் அந்தக் கிராமியப் பெண்டிர் ஈடுபட்டிருந்திருக்கலாம்; எனினும் அரசியலைப் பொறுத்த வரையில் இன்னமும் கள்ளங் கபடமற்ற கன்னி உள்ளத்துடன் திகழும்போது அவர்களை வாசாலகத்தினால் கவர்வதென்பது எத்தனை எளிது என்று உணர்ந்தான் தங்கப்பன். அதிலும் இந்தப் பெண்ணைப் போன்றவர்கள் அபார வெற்றி காண முடியும். தேர்தல் கூட்டமொன்றில் அபேட்சகர் தம் கொள்கைகளை விவரித்துப் பேசினாரென்றால் அவர் தாம் ஜெயித்துப் பயனடையும் நோக்கத்துடன், சுயநலத்துடன் வாய் கிழியப் பேசுவதாக மக்கள் நினைக்க இடமுண்டு.

ஆனால் இதோ இருக்கிறாளே இந்தப் பெண்ணைப் போல் முதியவர்களுக்குக் கல்வி போதிக்கும் இதர பல விதங்களில் சமூக சேவை செய்யும் நற்பெயர் பெற்றவர்கள் கிராமிய மக்களால் உயர்வாக மதிக்கப்படுவார்கள். தன்னல நோக்கத்துடன் அவர்கள் ஏதும் கூறுவதாகக் கருதப் படமாட்டார்கள். அவர்கள் தங்கள் அரசியல் சித்தாந்தங்களை மிக இலகுவாகப் பரப்பி விடுவது சாத்தியமாகும். அதோடு அரசியல் பிரசாரம் என்று பிரத்தியட்சமாகக் காணும்படியின்றி சமூக சேவை என்னும் போர்வைக்கடியில் நாசூக்காகப் பரப்ப இயலும். மேலும், வீட்டுக்காரிகளை முதலில் இப்படி வளைத்துப் போட்டு விட்டால் பிறகு அவர்களது அண்ணன்மார்கள், தம்பிகள், பிள்ளைகள் ஆகியோரிடத்தில் மனமாற்றத்தை உண்டாக்குவது ரொம்பவும் சுலபமாகி விடும். அதுதானே இந்தப் பெண்ணின் நோக்கமாகவும் இருக்க வேண்டும்?

ஆனாலும் இவள் எத்தனை சாமர்த்தியமாகச் செயல்படுகிறாள்? மிகக் கசப்பான ஒரு விஷயத்தை எப்படிச் சர்க்கரைக் கட்டி போல் இனிக்கப் பண்ணி விழுங்க வைக்கிறாள்? எத்தனை ஆபத்தான ஒரு சூழ்நிலை இங்கு தட்டிக் கேட்பாரின்றித் தாராளமாய் உருவாகி வருகிறது? இவ்வாறெல்லாம் நினைக்கும்போது கூடவே அவளுடைய அநாயாசமான திறமையை அவனால் மனத்துக்குள்ளாகவேனும் பாராட்டிப் புகழாமலும் இருக்க முடியவில்லை.

நேற்று; மேடை, பந்தல் தோரணங்கள் ஆகியவற்றுடன், 'மைக்'கும் வைத்துச் சினிமாப் பாட்டுப் போட்டுக் கூட்டம் சேர்த்து, வரவேற்புப் பத்திரங்கள், தலைமை உரை, நன்றியுரை பூமாலைகள் ஆகிய பக்கவாத்தியங்கள் சகிதம் தான் ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் தன் அகடவிகட சாமர்த்தியங்களையெல்லாம் காட்டிச் செய்த பிரசங்கத்தை இவள் ஒன்றரை நிமிஷத்தில் இங்கே ஒன்றுமில்லை என்றாக்கி விட்டாள் என்பதை அவன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. அதிலும் யாரை முக்கியமாகச் சரிக்கட்ட வேண்டுமோ அவர்களை — பெண்மணிகளை — இவள் சமாளித்து வெற்றி கண்டு விட்டாளல்லவா? அவளது சாமர்த்தியத்தைச் சிலாகிக்கும் முகமாக ஒரு புன்னகை தங்கப்பனின் அதரங்களில் அவனையுமறியாமல் மலர்ந்திருக்க வேண்டும்.

"ஏன் சார், உங்களுக்குக் காது செவிடா?" என்று இரைந்து கேட்பதைச் செவியுற்றதும் திடுக்கிட்டவனாய் அவன் ஆலமர விழுதொன்றில் சாய்ந்திருந்த தன் உடலை நிமிர்த்தி விரைப்பாக நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். "இல்லையே? இல்லை! என்ன கேட்டீங்க?" என்றான் ஒன்றும் புரியாதவனாக.

ஆசிரியை இப்போது அவனுக்கு மிக அருகில் நின்று கொண்டிருந்தாள்.

"அச்சா! கால்மணி நேரமாக இங்கேயே தவம் இருக்கிறீர்கள். திருடனைப் போல் விழிக்கிறீர்கள். என்ன வேண்டும் என்று கேட்டால் பதில் சொல்லாமல் சிரிக்கிறீர்கள்! இது நன்றாக இல்லை! தவறு!"

"ஏதோ யோசனை. நீங்க பக்கத்தில் வந்ததைக்கூட நான் கவனிக்கவில்லை."


"அப்படி என்ன ஐயா, பலமான சிந்தனை?"

"நீங்க சற்று முன்னால் ஒருவருடைய சொற்பொழிவை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்தெறிந்து கொண்டிருந்தீர்கள். அந்த அப்பாவித் தொழிலதிபர் நான்தான் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமா இல்லையா என்கிற கவலைதான்!"

"கவலை வேண்டாம்! நன்றாகத் தெரிந்துதான் அவ்விதம் கூறினேன். எனக்கு என்ன பயம்? ஒருவரை நேரில் பார்க்கும் போது புகழ்வதும் முதுகு திரும்பியதும் இகழ்வதும் எனக்குப் பிடிக்காத செயல்கள். ஆனால் ஒன்று. நீங்கள் அப்பாவி என்பதை மட்டும் நான் ஒப்புக் கொள்வதற்கில்லை."

"உங்களுடைய கொள்கைகள் எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கின்றன" என்றான் தங்கப்பன்.

அவள் தன் புருவங்களை நெரித்து அவனை ஓரளவு வியப்போடு நோக்கினாள்.



''உம்... அதாவது... உங்கள் கம்யூனிஸக் கொள்கைகளைச் சொல்லவில்லை. புறங் கூறுமையைக் குறிப்பிடுகிறேன்.''

''நான் ஒரு கம்யூனிஸ்ட் என்று உங்களுக்கு யார் சொன்னது?''

''நீங்களேதான்!''

''மிஸ்டர்! நான் ஒன்றும் கம்யூனிஸ்ட் இல்லை! ஏதோ உங்கள் பேச்சில் இருந்த சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினேனே ஒழிய வேறு நோக்கம் இடையாது; எனக்கு அந்தப் பட்டப் பெயர் சூட்டப் பார்க்காதீர்கள்! நான் ஒரு சமூக சேவகி; என் கடன் பணி செய்து கிடப்பதே!'' இப்படிக் கூறியவாறே அவள் பொய்யான விநயத்துடன் விளையாட்டாகக் குனிந்து கரம் கூப்பினாள். ''நமஸ்தே!'' என்றாள்.

''போரிலே எதிரிகளை நேருக்கு நேர் சந்திக்க யுத்தம் பண்ணி வெற்றி காணுவது சுலபம்; ஆனால் பசுத்தோல் போர்த்த புலி போல உலவி வருகிற ஜனநாயக விரோத சக்திகளோடே போராடுறதுதான் கஷ்டம்!''

இதைக் கேட்டு அவன் கோபமுறவில்லை. குழந்தைத்தனமாகச் சிரித்தான். பிறகு, ''ஜாக்கிரதை! கிட்டத்தில் வந்தால் அந்த முதலாளிப் பசுவை இந்தக் கம்யூனிஸப் புலி அடித்துக் கொன்று சாப்பிட்டு விடும்!'' என்று கேலியாகக் கூறி மீண்டும் நகைத்தான்.

தங்கப்பனும் அடக்கமாட்டாமல் சிரித்தான். அப்போது, 'எல்லா அரசியல் சர்ச்சைகளும் தர்க்கங்களும் எப்போதும் இதே போல் நட்புரிமையுடன் அமைந்திருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்? அதைவிட்டு வேறுபட்ட கொள்கைகள் காரணமாகப் பகைமையை வளர்த்துக் கொண்டு சூது வாது மோசடிகளிலும் அடி, உதைகள் கொடுப்பதிலும் ஈடுபடுவது எவ்வளவு அற்பத்தனம்?' என்று எண்ணினான் தங்கப்பன்.

''ஐயா, மிஸ்டர் முதலாளி! நீங்கள் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்து விடாதீர்கள்! உங்களைப் பகற்கனவுகளிலிருந்து எழுப்பி இந்த உலகுக்குக் கொண்டு வருவதற்குள் எனக்கு உயிரே போய்விடும் போலிருக்கிறது. ஒரு தரம் நான் பட்ட பாடு போதும்! பள்ளிக்கூடம் நடத்த வேண்டும் நான்...''

''உங்கள் பள்ளிக்கூடம் எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. சுகமான காலை நேரம், அமைதியான இடம், எளிமையான ஏற்பாடு. எல்லாப் பள்ளிகளுமே இப்படி நடக்கலாம், மழைக் காலங்களைத் தவிர. இருபதடிக்குப் பதினைந்தடி விஸ்தீரணமுள்ள வகுப்பு அறைகளில் புளிமூட்டை போல் ஐம்பது அறுபது பிள்ளைகளை அடைத்து வைக்கிறதைவிட இந்தச் சுதந்திரமான சூழ்நிலை எத்தனையோ நல்லது. ஆனால் உங்களோட அந்த மறைமுகமான பிரசாரந்தான் எனக்குச் சம்மதமில்லை.''

''என் கொள்கைகளைத்தான் பின்பற்ற வேண்டும் என்று நான் யாரையும் வற்புறுத்தவில்லை; என் பேச்சையெல்லாம் கேட்க வேண்டும் என்று நான் யாரையும் கட்டாயப்படுத்த வில்லை; நான் நடத்துகிற இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வருமாறு நான் யாருக்கும் அழைப்பு அனுப்பவுமில்லை!'' என்றாள் அவள்.

தங்கப்பன் முகவாயை அழுத்திப் பிடித்துக் கொண்டு புன்னகை செய்தான்.

''கோடி காண்பிச்சால் போதும், கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளணுமென்கிறதில்லை. நான் வர்றேன்'' என்று கூறித் திரும்பினான்.

சட்டென்று அவள் இயல்பாகக் கைநீட்டி அவன் கரத்தைத் தொட்டு நிதானிக்கச் செய்தாள்.

''நீங்கள் இங்கே நின்று கொண்டிருந்தால் அது என் மாணவிகளுக்கு ஏதோ விநோதமாகவும் கூச்சமாகவும் இருக்கிறது. பாடத்தைக் கவனிக்கக் காணோம். அதனால் தான் உங்களை அனுப்புகிறேன். மாலையில் வாசகசாலைக்கு வாருங்கள்.''

''அது வேறு இருக்கிறதா?''

''ஓயெஸ்! அதைப் பார்த்தால் நீங்கள் ரொம்பவும் சந்தோஷப்படுவீர்கள். கண்டிப்பாக வரவேண்டும். என்ன?''

''ஆகட்டும்!'' என்றான் தங்கப்பன்.

அத்தியாயம் 39

மிருணாளினி

அவள் பெயர் மிருணாளினி; பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவளெனத் தோன்றியது. வடக்கேயிருந்து வந்திருப்பவள் என்பதும் புரிந்தது. ஒரு வேளை வங்கத்தில் பிறந்து வளர்ந்தவளாயிருக்கலாம். சமூக சேவையையே உயிர் மூச்சாகக் கொண்டிருந்தாள். அந்தக் கிராமத்துக்கு வந்து சேர்ந்த இரண்டொரு நாட்களிலேயே அவள் எல்லாருடைய உள்ளங்களையும் கவர்ந்து விட்டாள். இனிமையான சுபாவம் கொண்டவள், சிரிக்கச் சிரிக்கப் பேசுபவள். இரண்டு மூன்று மாத காலம் பொன்னகரத்தில் தங்கி இருக்கப் போவதாகச் சொல்லி யிருக்கிறாள். வந்து இருபது இருபத்தைந்து நாட்கள் ஆகியிருக்கலாம். ஆனால் அவள் வருமுன்னரே அவளைப் பற்றிய செய்திகள், புகழுரைகள் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து பொன்னகரத்துக்கு எட்டியிருந்தன. காலையில் பெண்மணிகளுக்கும் மாலையில், வயல்வெளிகளிலிருந்து திரும்பிய பின்னும் அலுப்புச் சலிப்பின்றி ஆர்வத்துடன் வந்து திரளும் ஆடவருக்கும் கல்வி அறிவு புகட்டினாள் அவள். அறுவடை நடவு போன்ற சில காலங்களில் ஆண்களோடு பெண்களுக்கும் வேலைகள் மிகுதியாக இருக்கும். அச்சமயங்களில் அநேகமாகப் பள்ளிக்கு யாரும் வர மாட்டார்கள். மிருணாளினி அது பற்றிக் கவலைப்படுவதில்லை. தானும் அவர்களுடன்

சென்று வயலில் இறங்கிப் பாடுபடுவான்; பாட்டும் பாடுவான். அந்த இன்னிசையை அனுபவித்தபடியே விவசாயிகள் உற்சாகத்துடன் வேலைகளைத் துரிதமாக முடித்துக் கொள்வார்கள். இவ்விதமெல்லாம் கிராமிய மக்களின் இதயம் கவரும் விதத்தில் நடந்து கொண்டு நற்பெயர் பெற்றுள்ள அவனுக்குத் தான் செல்லும் இடங்களில் உள்ள முதியோர்கள் அனைவரையும் பெரிய அறிவாளிகளாக்கி விடுகிற நோக்கம் இல்லை. ஏதோ ஓரளவுக்கு அவர்கள் தங்கள் தாய்மொழியை எழுதப் படிக்கக் கற்று, எளிய முறையில் எழுதப்பட்ட சில நல்ல புத்தகங்களைப் படித்துப் பயன்பெற முடியுமானால் போதும், தனக்குத் திருப்திதான் என்று கூறியிருக்கிறான். இதைச் சாதித்ததும் அவன் தன் சேவை தேவைப்படும் இன்னொரு கிராமத்துக்குச் சென்று விடுவானாம். அப்படிப் போவதற்கு முன்னால் பொன்னகரத்தில் ஒரு சிறு நூலகத்தை ஏற்படுத்தி அதில் சில புத்தகங்களையும் விட்டுச் செல்வதாயும் அந்த நூலகத்தைப் பாதுகாப்புடன் அதனை மேலும் மேலும் வளர்த்து அனைவருக்கும் உதவுவது கிராமத்தில் உள்ள பெரிய மனிதர்களின் பொறுப்பு என்றும் அவன் சொல்லியிருக்கிறான். எழுத்தறிவிப்பது ஒருபுறமிருக்க, அந்தக் கிராமிய மக்களின் சுகாதார அறிவும் உலக ஞானமும் பொது அறிவும் விருத்தியடைய அவன் பெருந்துணையாக இருந்திருக்கிறான்.

இவற்றையெல்லாம் தான் தங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரர் சிவநேசனிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டான் தங்கப்பன்.

''உண்மையில் அவங்க இங்கே வந்த இரண்டு நாளைக்கெல்லாம் நான் ரொம்ப வெட்கப்பட்டுத் தலை குனியும்படி ஆகிப் போச்சுங்க. நானும்தான் ஊருக்குப் பெரிய மனுஷன்னு சொல்லிக்கிட்டு இந்தக் கிராமத்திலே எத்தனையோ வருஷங்களா, இல்லாத ஜபர்தஸ்துங்களை யெல்லாம் செய்துக்கிட்டு உட்கார்ந்திருக்கேன். என்ன புண்ணியம்? மிருணாளினி அம்மா வந்து இந்த இருபது இருபத்தைந்து நாட்களிலே செய்திருக்கிறதில் எதையுமே நான் கனவிலேகூட நினைச்சுப் பார்த்ததில்லே.''

''அதனாலென்ன?'' என்றான் தங்கப்பன். ''இதுவரை செய்யாததை எண்ணி வருத்தப்படுகிறதைவிட இனி செய்யவிருப்பதை நினைச்சு மகிழ்ந்தால் போச்சு.''

''ஆமா, நம்மாலான கைங்கரியத்தைச் செய்யணுமின்னுதான் கீழண்டைப் பக்கம் இருந்த மனையை நூலகத்துக்குன்னு கொடுத்துட்டேன். இருநூறு ரூபாய் பெறும்!'' என்று ரொம்பவும் பெருமிதத்தோடு கூறிய சிவநேசன், ''இப்போ அதன் முன்னுக் கம்பி வேலியிலே பொன்னகரம் நூலகம் அப்படின்னு எழுதிய ஒரு பலகை கட்டித் தொங்குது'' என்றார்.

''உங்களைப்போல் கிராமத்துக்கு ஒருத்தர் தேவை'' என்றான் தங்கப்பன் அவரைப் பாராட்டி உற்சாகப்படுத்தும் முகமாக.



'' எங்கய்யா இத்தனை நேரம் போயிருந்தே? ''
'' கடைக்குப் போனேனுங்க! ''
'' அதுக்கு ஏன் இவ்வளவு நேரம் ? ''
'' வழியிலே ஒரு வைத்தியம் நின்னுக்கிட்டு இருந்தது. சுற்றி ஒன்பது பேர் நின்னாங்க! வைத்தியத்தைச் சுற்றிப் பத்தும் பேர்னு வாணமாச்சேன்னு நானும் நின்னுட்டேன்! ''

''அது போதாது! என்னைப் போன்றவங்க ஊருக்கு நல்லது செய்யணுமின்னு அதுக்குத் தார்க்குச்சி போட மிருணாளினியைப் போலவும் கிராமத்துக்கு ஒரு பெண்மணி தேவைதான். தகரக் கொட்டாய் போட ஆன செலவை அவங்கதானே தன் தலையில் கட்டிக்கிட்டாங்க. கிராம மக்களிடமிருந்து உழைப்பை நன்கொடையாக வாங்கிக்கிட்டாங்க. ஒரு வாரம் முந்தி நினைதயாளு இந்தப் பக்கம் வந்திருந்தப்போ திறப்பு விழாவை அவரை விட்டு நடத்தச் சொல்லலாமான்னு ஒரு யோசனை. ஓர் அஞ்சு நிமிஷம் அவர் இதுக்கு ஒதுக்கிட்டா ஆச்சு. ஆனா மிருணாளினி அம்மா 'மந்திரியுமாச்சு மந்திரவாதியுமாச்சு, உங்களுக்குத்தான் முதல் மரியாதை! வாங்க, சொல்றேன்'னு என்னை அழைச்சுக்கிட்டுப் போய் ஒரு கத்திரிக்கோலை நான் என் கையாலே எடுத்துச் சின்னமுத்துவிடம் கொடுக்க, அவன் ஒரு ரிப்பனைக் கத்திரிக்க, எல்லாரும் கைதட்ட, கனஜோராகத் திறப்பு விழா நடந்தேறிப் போச்சு. எல்லாமே ஒரு பத்துப் ' பதினைஞ்சு நாளைக்குள்ளாகத்தான்! எனக்கே ஆச்சரியம் தாங்கவில்லே!''

தங்கப்பன் தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டே சிவநேசனுடன் பொன்னகரம் நூலகம் நோக்கி நடந்தான். மிருணாளினி மனோதத்துவ முறையில் தனது அரசியல் கொள்கைக்குப் பெற்றுத் தந்திருந்த பெரிய வெற்றியை அவன் புரிந்து கொண்டான். மிராசு சிவநேசன் பாட்டாளி சின்னமுத்துவிடம் கத்திரிக்கோலைத் தர அவன் அவருக்குச் சமதையாக, இல்லை, ஒரு படி மேலாகவேகூட இருந்து ரிப்பனைக் கத்திரிப்பது என்றால்...... அத்துடன் இது வெளிப்படையாகப் பெரிதுபடவில்லை என்றாலும் இதனைச் சிவநேசன் உள்பட எல்லாருமே உணர்ந்திருப்பார்கள்; எனினும் அவர் அது பற்றிக் குறைப்படாததுடன் பெருமிதத்

துடன் அந்திகுச்சி குறித்துத் தன்னிடம் விவரிக்கிறாள்! இதை மிருணாளினியாலன்றி வேறு யாரால் இத்தனை சாமர்த்தியமாகச் சாதித்திருக்க முடியும்? தங்கப்பனுக்கு அவளிடம் மதிப்பு முன்னிலும் மிகுந்தது.

அந்த நூலகம் மிகச் சிறியதான ஒன்றுதான். தகரக் கூரையுடன் கூடியது. கொஞ்சம் உயரமானது. ஓரளவு விசாலமான இரு ஜன்னல்கள் கதவுகளுடன் இருந்தன என்பவற்றைத் தவிர அதைச் சாதாரண ஒரு சிறு குடில் என்றே குறிப்பிடலாம். அதன் வாசலில் சிமிண்டுத் தளம் போடப்பட்டிருந்தது. சுற்றிலும் அழகிய பூந்தோட்டம். திறந்தவெளியில் சிமிண்டுத் தளத்தின் மையத்தில் ஒரு கயிற்றுக் கட்டிலில் கிராமவாசிகள் சிலர் புத்தகங்களைப் படித்தபடி உட்கார்ந்திருந்தனர். வேறு சிலர் தரையில் அமர்ந்து கூடை பின்னுதல், பாய்முடைதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தனர். வண்ணக் கலவைகளைக் குழைத்து ஓவியம் தீட்டினார்கள் ஓரிருவர். இன்னும் சிலர் தோட்டத்தைக் கொத்துவதும் செடிகளுக்குத் தண்ணீர் விடுவதுமாய் இருந்தார்கள். இவர்கள் அத்தனை பேருக்குமிடையே வளைய வந்த போதிலும் ஒரு தனித்துவம்பெற்று விளங்கினாள் மிருணாளினி.

நூலகத்தின் பின்புறமுள்ள கிணற்றடியில் அவள் சற்று முன்னால்தான் நீர் சேந்திக் குளித்துவிட்டு மாற்றுடை தரித்து வந்திருக்க வேண்டும். சுத்தமும் எளிமையும் மிகுந்து காணப்பட்ட அவளைச் சதா ஒரு புதுமை சுற்றிச் சூழ்ந்து கொண்டேயிருந்தது. அலை அலையாக அவள் தோள்களைத் தழுவிச் சரிந்த கருங்கூந்தலின் எண்ணெய்ப் பிசுக்கற்ற மென்மையிலே, அந்தக் கருமையின் மையத்தில் பிரகாசமாகத் துலங்கிய அந்த வதனத்தின் வடிவழகிலே, அவள் உடுத்தியிருந்த பசுமை தெளிக்கப் பெற்ற வெண்ணிறப் புடவை பிற்பகலெல்லாம் வெய்யிலில் காய்ந்ததால் உண்டாகியிருந்த ஒரு மொடமொடப்பிலே, துருதுருப்புடன் இங்குமங்கும் நோக்கிச் சுழலும் வட்டக் கருவிழிகளிலே, நீலமாக நிற்கும் நெற்றிப் பொட்டின் வட்டத்திலே, அப்போதுதான் மலர்ந்து பனி படியப் பெற்ற ரோஜா இதழொத்த அதரங்களிலே, மெல்லியபூங்காற்றை அனுபவித்து ஒடியும் கழுத்திலே, விரியும் நாசியிலே, நிமிரும் நெஞ்சத்திலே — இவை எல்லாவற்றிலும் ஒரு புதுமைப் பொலிவு விகசிப்பதைக் கண்டான் தங்கப்பன்.

தரையில் கால் பாவாமல் நடக்கும் ஒரு வனதேவதை போல் உலவிய அவள் படித்துக் கொண்டிருக்கும் ஒருவனிடம் சென்றாள். எந்தக் கட்டத்தில் அவன் இருக்கிறான் என்பதைக் கேட்டறிந்தாள். அந்த நூலைப் பற்றியும் அதன் ஆசிரியரைக் குறித்தும் சுவையான சில தகவல்களைக் கூறினாள். பிறகு கூடை பின்னிக் கொண்டிருந்த ஒரு பெண்மணியின் அருகில் குனிந்து அவள் செய்திருந்த ஒரு தவற்றைச் சுட்டிக்காட்டிச் சரி செய்தாள். அடுத்தாற்போல் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்த ஒருவனுக்குப் பின்னால் போய் நின்று, புருவங்களை நெரித்துக் கூரிய பார்வையை அந்தச் சித்திரத்தின் மீது செலுத்தி ஆராய்ந்தாள்.

ஓரிரு நிமிஷங்களுக்கு அவள் செய்கைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தங்கப்பன், இப்போது தான் அருகிலிருப்பதைப் புலப்படுத்திக் கொண்டு அவளை மேலும் நெருங்கினான்.

''வேண்டாம். ஓவியம் தீட்ட மட்டும் நீங்கள் கற்றுத் தர வேண்டாம்!''

அவள் சட்டென்று திரும்பி, வரவேற்புப் புன்னகையும் அவனுடைய விநோதமான கோரிக்கையால் விளைந்த வியப்பும் முகத்தில் பிரதிபலிக்க, ''வாருங்கள்'' என்றாள்.

''உங்களுடைய மரத்தடிப் பள்ளிக்கூடத்தில் கரும் பலகையில் நீங்கள் வரைந்த கழுதை, அசல் மனிதன் மாதிரியே இருந்தது!'' என்று குதூகலச் சிரிப்பு அலைவரது கண்டத்தினின்றும் எழக் கூறினான் தங்கப்பன்.

''எனக்குச் சித்திரம் வரையத் தெரியாவிட்டால் என்ன? நல்ல ஓவியங்களை ரசிக்கத் தெரியும். குற்றம் குறைகளைக் கட்டிக்காட்டி விமர்சிக்க முடியும்'' என்று மிருணாளினியும் மாறாத புன்னகையுடனேயே கூறினாள். ''இதற்குத் தடை விதிப்பதானால் இந்த ஆட்சேபணையையே ஒவ்வொரு விஷயத்துக்கும் சொல்லிக் கொண்டு போகலாம். பிறகு வாழ்க்கையில் ரசனையே இராது. கலையே இராது. ஒருவர் பாடுவது நன்றாக இல்லை என்றால் உடனே 'உனக்குப் பாடத் தெரியுமா' என்று திருப்பிக் கேட்பார்களா?''

''நீங்கள் ரொம்ப நன்றாகப் பாடுவீர்களாமே?'' என்றான் தங்கப்பன், தர்க்கத்தில் தான் அடைந்த தோல்வியை மறைத்து.

''நான் மட்டுமில்லை. நாங்கள் எல்லோருமே தினந்தோறும் மாலை நேரங்களில் பாடுவது வழக்கம்தான்'' என்றாள் மிருணாளினி. பிறகு சுற்றிலுமிருந்தோரைப் பரவலாக நோக்கி, ''பாடுவோமா?'' என்றாள். அவள் பாடலின் ஓர் அடியைப் பாட மற்றவர்கள் அதையே ஒருமித்த குரலில் திரும்பப் பாடினார்கள். தங்கள் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டபடியே பாடினார்கள் சிலர். புத்தகத்தை மூடி வைத்துவிட்டு உற்சாகத்துடன் கோஷ்டி கானத்தில் கலந்து கொண்டனர் சிலர். பாரதி, கவிமணி, நாமக்கல் கவிஞர் போன்றோரது தேசியப் பாடல்கள், சீர்திருத்தப் பாடல்கள், உழைப்பின் உயர்வை உணர்த்தும் எழுச்சிப் பாடல்கள் அவை. மிருணாளினி தங்கப்பனையும் பாடுமாறு புன்சிரிப்புடன் ஜாடை காண்பித்தாள். முதலில் சற்றுத் தயங்கிய அவன் தன் பக்கத்தில் நின்ற சிவநேசனும் அந்தக் கான வலையில் இழுக்கப்பட்டிருப்பது கண்டு, தானும் அந்தக் காந்தக் கவர்ச்சிக்கு உள்ளானான். ஒவ்வொருவர் கண்டமும் ஒவ்வொரு சுருதியில் பேசியது; ஒவ்வொருவரது குரலும் ஒவ்வொரு விதமாய்த் தொனித்தது. வார்த்தைகள் ஒன்றாக இழையாமல் இடர்ப்படுத்தின. ஆனால் அந்தக் கோஷ்டி கானத்தில் உற்சாகம் மிகுந்த ஓர் ஒற்றுமையும் தோழமையும் இறுதி வரை இடம் பெற்றன. தங்கப்பனுக்கு மேனி சிலிர்த்தது. (தொடரும்)



தீபாவளி ஸீஸன்
விசேஷ விற்பனை!

பட்டுச் சேலைகளுக்கு

நல்லி

பாண்டிபஜார்

டெக்ஸ்டைல்ஸ்

தியாகராயநகர் - (போன்: 42567) - சென்னை -17

17-10-65 ஞாயிற்றுக்கிழமை அன்றும் விற்பனை உண்டு!

க்கமிருந்தவள்



உங்கள் பெண்
அவளது வருங்காலத்திற்கு
உரியதைப்
பெறவேண்டும்!

அதனை

பணச் சேமிப்பு

மூலம் அவளுக்கென்று
உறுதிப் படுத்துங்கள்

சவிங்ஸ் பாங்க் அக்கௌண்டை எங்கள் பாங்கில் ஆரம்பியுங்கள்

ஜி. பி. கோயங்கா — சேர்மன்

ஆர். பி. ஷா — ஜெனரல் மானேஜர்


தலைமை ஆபீஸ்: கல்கத்தா

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

UCO-1/65 TH

குளிர்ந்த காற்றைத் தருகிறது

ராலி:.பேன்



SHRI RFN 79 TAM

ஒவ்வொரு ராலி:.பேனும் 2 வருட உத்தரவாதத்துடன் வருகின்றன. இன்றைய தேதியில் மிக நம்பகமான மேஜை விசிறி இதுவே என்பதை நிரூபிக்கும் மிகக் கடும் பரிசோதனைகளில் தேறியதாயிற்றே.

ராலி:.பேன் வகைகளைப்பற்றி மேலும் விவரங்கள் தேவையா? இதோ உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து, 'ராலி ஹாய்லண்ட் லிமிடெட், 21, ரவெலின் ஸ்ட்ரீட், பம்பாய்' என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

ராலி:.பேன்களைப்பற்றிய முழுவர்ண இலவச வெளியீட்டை எனக்கு அனுப்புமாறு கோருகிறேன்.

பெயர் ....

....

விலாசம் ....

....

சென்னை, கேரளம் ராஜ்யங்களுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் மஹமத் இப்ராஹீம் & கோ.,
ப்ரைவேட் லிமிடெட்.
7/8, மவுண்ட் ரோட், சென்னை.

சேவைக்கு ஒரு சகோதரி



மோனிகா ஃபெல்டன் — அநுத்தமா

அந்தச் சமயத்தில் அவருக்கு ஏகப்பட்ட வேலைகள் இருந்தன. ஆகவே, ஒரு வாரத்துக்குப் பிறகுதான் நான் அவரை மீண்டும் போய்ப் பார்த்தேன். நான் அங்கு சென்றபோது சகோதரி மேஜை எதிரே அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தார். கட்டில் போன்ற ஒரு விசாலமான ஆசனத்தில் நான் உட்கார்ந்தேன். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு அவர் எழுதி முடிக்கும் வரை காத்திருக்கலானேன். மேஜையருகில் சுவரில் ஸ்ரீ கிருஷ்ணரின் படம் ஒன்றிருந்தது. கிட்டத்தட்ட மூன்று அடி உயரமுள்ள முரளீதரனின் படம் அது.

சில நிமிஷங்களுக்கெல்லாம் ஸிஸ்டர் என் அருகில் வந்து காலை மடித்துக் கொண்டு அமர்ந்தார். வெள்ளை நிறப் புடவையின் கொசுவங்கள் அவரது கால்களை மறைத்தன. ''போன தடவை நீங்கள் வந்திருந்த போது நான் ராபர்ட் இங்கர்சாலைப் பற்றிப் பேசினேன் அல்லவா?'' என்றார் அவர்.

''ஆமாம்.''

''என்ன அருமையான நூலை அவர் எழுதியிருக்கிறார்! அதை நீங்கள் படித்திருக்கிறீர்களா ?''

''இல்லை. இங்குமங்கும் சில இடங்கள்தான் படித்திருக்கிறேன்.''

''நீங்கள் முழுவதும் படிக்க வேண்டும். கடவுள் மனிதனைப் படைத்தாரா, மனிதன் கடவுளைப் படைத்தானா? என்ற கேள்வியுடன் அது ஆரம்பிக்கிறது. என்ன அற்புதமான கேள்வி? அந் நூலைப் படிப்பது எனக்கு மிகவும் சுவாரசியமாக இருந்தது.''

''நீங்கள் கல்வி கற்று வந்த கான்வென்ட்டைச் சேர்ந்த கன்னிகாஸ்திரிகளுக்கு நீங்கள் இதைப் படித்தது தெரியுமா?'' என்று நான் விசாரித்தேன்.

''பேஷாக. மதர் பால் ஒரு முறை கூட என்னைத் தொந்தரவு செய்ததில்லை. ஆனால் மதர் பாட்ரிக்கை ஒரு மத வெறியர் என்றே சொல்லலாம். எப்போதும் மதத்தைப் பற்றியே விவாதித்துக் கொண்டிருப்பாள். கான்வென்டில் படித்தவர்களில் அநேகமாக எல்லாப் பெண்களுமே கிறிஸ்துவர்கள்தான்.... கிறிஸ்துவ மதத்தில் உள்ள உட்பிரிவினரிடையே எந்த அளவுக்குச் சகிப்புத் தன்மை இல்லாமலிருந்தது என்பதை மதர் பாட்ரிக் பேசியதிலிருந்துதான் நான் புரிந்து கொண்டேன். புராட்டஸ்டண்ட் பிரிவினரைப் பார்த்து அவள், 'உங்களைப் போன்ற 'புராடி'களை (Proddies) விட இந்த இந்துக்களையே நான் சகித்துக் கொள்வேன்' என்பாள்.'' சகோதரி சுப்புலக்ஷ்மி காது கேட்கத் தாம் பயன்படுத்தும் கருவியின் பாட்டரியை எடுத்துத் தம் குரலில் இருக்கும் அசாதாரண கோபத்தையும் அலட்சியத்துடன் கூடிய வெறுப்பையும் உரித்துக் காண்பிப்பதுபோல அந்தப் பாட்டரியைக் குறுக்கும் நெடுக்கும் ஆட்டினார். ''ஆமாம்! 'புராடிகள்' என்றுதான் அவர்களை அழைத்தார். என்ன அவமதிப்பான பேச்சு! மற்றவர்களுடைய நம்பிக்கைகளுக்கும் ஓரளவு மதிப்புத் தந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். உலகத்தின் படைப்பைப் பற்றியும், பிரளயத்தைப் பற்றியும் கர்னல் ராபர்ட் இங்கர்சாலின் புத்தகத்தில் நான் படித்தவைகளை அவளிடம் கூறுவேன். 'அப்படி ஒரு புத்தகத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. அதைக் கொண்டு வருகிறாயா?' என்றாள் மதர் பாட்ரிக்.''

ஸிபில் — சுப்புலக்ஷ்மி அடுத்த நாள் கான்வெண்ட்டுக்குப் புத்தகத்தை எடுத்துச் சென்று அதை மதர் பாட்ரிக்கிடம்

தந்தாள். ஓரிரண்டு நாட்களுக்குப் பிறகு மதர் பாட்ரிக்கின் அறைக்கு அவள் அழைக்கப்பட்டாள். இங்கர் ஸாலின் புஸ்தகம் மேஜை மீது கிடந்தது. ''இது மிகவும் மோசமான புத்தகம். இதை நான் தீக்கிரையாக்கப் போகிறேன்'' என்றாள் அந்தக் கன்னிகாஸ்திரீ.

சுப்புலக்ஷ்மி ஆச்சரியத்துடன் அவளை நோக்கினாள். சரி எது, தப்பு எது என்பதைப் பற்றி மனிதருக்கு மனிதர் அபிப்பிராய பேதம் இருக்கக் கூடாதா? சில சமயத்தில் அவ்வாறு மாறுபாடு இருப்பதே நல்லதல்லவா? தன்னுடைய வாழ்க்கையிலேயே இம்மாதிரி மாறுபாடுகளால்தானே அபிவிருத்தி ஏற்பட்டிருந்தது. ஒருவர் எழுதியது எவ்வளவு தான் தப்பு என்று வேறொருவர் எண்ணினாலும் அதற்காக அந்தப் புத்தகத்தையே எரிப்பதா என்ன!

இக்கருத்தை சுப்புலக்ஷ்மி தைரியமாக வெளியிட்டாள்.

மதர் பாட்ரிக் ஒத்துக் கொள்ளவில்லை. புத்தகம் கொளுத்தப்படத்தான் வேண்டும். அதை யார் படித்தாலும் அவர்கள் மனத்தை அது மாசுபடுத்தி விடும் !

அதுதான் அந்தக் கன்னிகாஸ்திரீயின் முடிவான அபிப்பிராயம் என்றால் அதை மாற்ற முயலுவது வீண் பிரயாசையாகத்தான் இருக்கும். ''அந்தப் புத்தகம் என் பெரியப்பாவினுடையது. அதை நான் அவருக்குத் திருப்பித் தர வேண்டும். தயவுசெய்து கொடுத்து விடுங்கள்'' என்று கேட்டாள் சுப்புலக்ஷ்மி.

மதர் பாட்ரிக் தலை குனிந்து சில விநாடிகள் பேசாமல் இருந்தாள். அவள் தன் நெற்றியோடு ஒட்டினாற்போல் அணிந்திருந்த, விரைப்பாக இருக்குமாறு கஞ்சி போடப்பட்டிருந்த துணியின் கீழ் அவள் முகம் மறைந்திருந்தது. அவள் மீண்டும் நிமிர்ந்து பார்த்த போது, ''ஒரு நிபந்தனையின் பேரில் புத்தகத்தை உனக்குத் திருப்பிக் கொடுப்பேன்'' என்றாள்.

''என்ன அது?''

''அதை மீண்டும் படிக்க மாட்டேன் என்று நீ உறுதி கூறவேண்டும்.''

இப்பொழுது சுப்புலக்ஷ்மி ஏதோ யோசித்தவாறு தயங்கினாள். பிறகு, ''சரி, நான் இந்தக் கான்வெண்ட்டில் இருந்து படிக்கும் வரை இதை மீண்டும் வாசிப்பதில்லை என்று உறுதி கூறுகிறேன்'' என்றாள்.

அதைவிட அதிகமாக ஒன்றும் எதிர்பார்க்க முடியாதாகையால், மதர் பாட்ரிக் புத்தகத்தைத் திருப்பித் தந்தாள். சுப்புலக்ஷ்மியும் தன் வாக்கை நிறைவேற்றினாள்.

மாதங்கள் உருண்டோடின. கான்வெண்டில் இது வரைக்கும் படிக்க வந்தவர்களுள் அதிதமான புத்தியுடைய மாணவியின் ஆத்மாவை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்பதில் மதர் பாட்ரிக் தீர்மானமாக இருந்தாள்! ஆனால் எல்லாத் தருணங்களிலும் இங்கிதத்தோடு அவள் நடந்து கொண்டதாகச் சொல்ல முடியாது !


சகோதரிக்கு இப்போதுகூட நன்கு நினைவிருக்கிறது. ஒரு சமயம் மதர் பாட்ரிக், ''உங்களுடைய இந்து மதப் பழக்கங்கள் எல்லாம் அருவருக்கத் தக்கவை'' என்றுரைத்தாளாம்.

''எந்தப் பழக்க வழக்கங்கள்?''

''தினமும் குளிக்க வேண்டும் என்பது, மாமிசம் சாப்பிடுவதில்லை என்பது — இவை போன்றவை.''

சகோதரி இதைப் பற்றி என்னிடம் பேசிக் கொண்டிருந்த போது அவருக்குச் சினம் கொப்பளித்தது. ''நிந்திப்பதற்குக் கிடைத்த பழக்க வழக்கங்களைப் பார்க்கவில்லையா? 'தினமும் குளிக்கக் கூடாது என்றும், மாமிசத்தைத் தின்னத்தான் வேண்டும் என்றும் எங்காவது இயேசு மொழிந்திருக்கிறாரா?' என்று நான் கேட்டேன். இந்தச் சீதோஷ்ணத்தில் மாமிசம் சாப்பிடாமலிருப்பதே தேக ஆரோக்கியத்துக்கு நல்லது என்றும், ஒரு நாளைக்கு ஒரு முறை அல்ல; இருமுறை கூடக் குளிக்க வேண்டியது அத்தியாவசியமானது என்றும் நான் எடுத்துச் சொன்னேன்.''

சகோதரி சுப்புலக்ஷ்மி தொடர்ந்து பேசினார்: ''அந்தக் காலத்தில் பெரும்பான்மையான ஐரோப்பியர்கள் — எல்லோருமே அல்ல — இதுபோன்ற அபிப்பிராயங்கள் கொண்டிருந்தார்கள். பல வருஷங்களுக்கு முன்னால் நான் ஓர் ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குச் சென்றிருந்தேன்...'' பள்ளியின் பெயரைச் சொன்னார் அவர். ''...அதன் தலைமையாசிரியர் என்னிடம் மிகவும் பெருமையான குரலில், 'இங்கே தங்கும் மாணவர்கள் எல்லோரும் தவறாமல் வாரத்துக்கு ஒரு முறை குளிக்கிறார்களா என்று கவனித்துக் கொள்கிறோம்' என்றார். இதைக் கேட்டதும் நான் அதிர்ச்சியுற்றேன். 'இதோ பாருங்கள், நாளைக்கு ஒரு முறையா, வாரத்துக்கு ஒரு முறையா' என்று சந்தேகத்துடன் கேட்டேன். 'தினந்தோறும் இல்லை. இங்கிலாந்தில் செய்வது போல வாரத்துக்கு ஒரு தடவை தான்' என்று அவர் பதில் தந்தார்.''



மல்லிகையின் மணம் கமழும் ஒளி எழிலுக்காக...

ஜேய்

அழகுசாதன சோப்!



ஜேய் தரும் மிருதுவான நுரை உங்கள்
சருமத்துக்குப் புதுமலர்ச்சி யூட்டுகிறது...
பளபளக்கும் ரேக்கு 'ராப்ப'ரில்
அடங்கிய மல்லிகை நறுமணம்...
இளஞ் சிவப்பு நிற ஜேய் உங்களுக்கான
உன்னத அழகுசாதன சோப்!

டாடா
தயாரிப்பு.

உங்கள் மேனி எழில் பெருக-**ஜேய்** அழகுசாதன சோப்

SHBI-TJS-84

பதட்டத்தின் அறிகுறியே இல்லை இப்பொழுது!



''இங்கிலாந்திலும் கூட அநேகம் பேர் தினமும் குளிக்கிறார்கள்'' என்று நான் இடைமறித்துக் கூறினேன்.

''சந்தேகம் இல்லாமல்! நான் சொல்கிற மனிதன் ஆங்கிலேயன் அல்ல, இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டு வந்த ஓர் இந்தியன். இங்கிலாந்துக்குச் செல்லும் எல்லோருக்கும் அங்குள்ள சற்று வசதி படைத்த மேன்மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை அறிய வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகவே, கிறிஸ்தவர்களாக மதம் மாறிய இவர்கள் தங்களைவிட மேலானவர்கள் என்று யாரைக் கருதுகிறார்களோ, அவர்களுடைய பழக்க வழக்கங்களை இங்கு அவை நம் வாழ்க்கைக்குப் பொருந்துமா இல்லையா என்று பார்க்காமலே மேற்கொள்ளுகிறார்கள்.''

தென்னிந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்களில் எல்லோருமே இப்படி இருந்தார்களென்று கூறிவிட முடியாது. கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலேயே இங்கு மாதா கோவில்களை ஸ்தாபித்தவர்களாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் ஸிரியன் கிறிஸ்துவர்கள் மேற்குக் கடற் கரைப் பக்கம் பெருமிதப்படுவதற்குரிய முறையில் வாழ்ந்து வருகிறார்கள்.

கிறிஸ்தவர்களிலும் பிராமணக் கிறிஸ்தவர்கள் என்றொரு பகுதியினர் சென்னை ராஜதானியின் கிழக்குப் பிரதேசங்களில் இருந்தனர். இவர்களில் அநேகம் பேர்கள் திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்து வந்தார்கள். மனித குலத்தின் சகோதரத்துவத்தைப் பற்றி யெல்லாம் அவர்கள் அதிகமாகக் கவலைப்படாமல், தொன்று தொட்டு வந்த தங்களது பழக்க வழக்கங்களையே கடைப்பிடித்து வந்தனர். மற்ற ஜாதி இந்துக்களும் தத்தம் ஜாதிப் பாகுபாடுகளை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தனர். தீண்டாதவர் தீண்டாதவராகவே இருந்தனர். சுப்புலக்ஷ்மி பிரசன்டேஷன் கான்வென்டில் படிப்பை முடித்துக்கொண்டு சுமார் இருபத்தைந்து ஆண்டுகளான பிறகும் கூட இந்த நிலையில் விசேஷ மாறுதல் ஏதும் காணோம்! அப்போது சிறையிலிருந்த காந்தி, வல்லபாய் படேல், மகாதேவ தேசாய் முதலியோர் இந்த மாதிரிப் பாகுபாட்டினால் விளையும் கஷ்டங்களைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். காந்திஜியின் காரியதரிசியாக இருந்த தேசாய் 1932ம் வருஷம் டிசம்பர் மாதம் 30ம் தேதி டைரியில் இவ்வாறு எழுதி இருக்கிறார். ''திருச்சிராப்பள்ளியில் உள்ள கிறிஸ்துவர்களில் சிலர் சென்னை



'இந்த அக்கிரமத்தைக் கேட்டீங்களா? அபாயச் சங்கு ஊதி ஒத்திகை பார்க்கும்போது பாவிங்க தான் விமானங்கள் நிஜமாகவே குண்டு போட்டுட்டதாம்!'

'அப்படித்தானே, உங்க அக்காவைப் பெண் பார்க்க வந்த [illegible] கூட வந்த என் தலையில் உன்னைத் தூக்கிப்போட்டார், உங்கப்பா!'

பிஷப்பை எச்சரித்திருக்கிறார்கள். மாதா கோயிலில் பிராமணர்களுக்கும், மற்றக் கீழ் ஜாதியினர், தீண்டாதவர் முதலியோருக்கு மிடையே இருக்கும் குறுக்குச் சுவரை எடுக்காவிட்டால் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். காந்திஜிக்கு இது வேடிக்கையாக இருந்ததாம். செயலிலே கருத்துடையவரான வல்லபாய் பட்டேலோ ''பிராமணர் அல்லாத கிறிஸ்துவர்கள் ஏன் உடனே குறுக்குச் சுவரைத் தாங்களாகவே தகர்த்து எறிந்து விடக் கூடாது? அதை விட்டு விட்டு அவர்கள் ஏன் பிறரை அந்தக் காரியத்தைச் செய்யும்படி வற்புறுத்திக் கொண்டு பட்டினி கிடக்க வேண்டும்?'' என்று கேட்டாராம்.

இது நடந்தது 1932ல். ஆனால் 1906ல் சுப்புலக்ஷ்மி கான்வென்டில் படித்து வந்தபோது, மதர் பாட்ரிக், தான் செய்ய முடியாததை ஒருகால் பிராமண கிறிஸ்தவர்களில் ஒருவர் சாதிக்க முடியும் என்று நினைத்தாள் போலும். அவள் ஒரு நாள் சுப்புலக்ஷ்மியிடம், ''நாளை மாலை பள்ளிக்கூடம் விட்ட பிறகு, கொஞ்ச நேரம் நீ இங்கே இருக்க வேண்டும். உன் பெற்

ளோரிடம் அனுமதி கேட்டுக்கொள். கவலைப்பட வேண்டாம் என்று சொல்'' என்றாள்.

சுப்புலக்ஷ்மி அவ்வாறே செய்தாள்.

மறு நாள் வகுப்பு முடிந்த பிறகு ஓர் அறைக்கு அவள் அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கு தன்னந் தனியாக ஒரு பெண்மணி அமர்ந்திருந்தாள். அவள் ஸ்மார்த்த மாதர்கள் உடுக்க வேண்டிய முறையில் புடவை உடுத்தியிருந்தாள். நெற்றியில் குங்குமப் பொட்டு துலங்கியது. தான் நடேச ஐயர் என்பவரின் மனைவி என்பதாகவும், திருச்சியிலிருந்து வந்திருப்பதாகவும், மதர் பாட்ரிக் தன்னைச் சென்னைக்கு வந்து சுப்புலக்ஷ்மியுடன் பேச வேண்டுமென்று அழைத்ததாகவும் கூறினாள். கிறிஸ்தவ மதத்தின் மெய்ப் பொருள்களைப் பற்றி அவளிடம் வற்புறுத்திக் கூறவே தான் வந்திருப்பதாகவும் ஒளிக்காமல் சொல்லி விட்டாள் அவள்.

சுப்புலக்ஷ்மியை இணங்க வைக்க முடியவில்லை. அந்தப் பெண்மணியை அவள் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். அன்று மாலை எல்லோரும் மிகவும் பிரியமாகப் பேசிக் கொண்டார்கள். ஆனால் மதர் பாட்ரிக் உத்தேசித்திருந்த வகையில் அல்ல.

வெற்றிப் புன்னகை பனிச்சிட ஸிஸ்டர் தொடர்ந்து பேசினார்: ''கடைசியில் மதர் பாட்ரிக் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக எல்லாம் நடந்து விட்டது. நடேச ஐயர் தம்பதிகள் மீண்டும் இந்து மதத்தையே தழுவி விட்டார்கள். உண்மையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் அது. அதுவரை கிறிஸ்துவ மதத்தினராய் மாறிவிட்டவர்களை மீண்டும் இந்து மதத்தில் சேர்ப்பதில்லை. ஸ்ரீ நடேச ஐயர் எங்கள் மதப் பெரியார்களிடம் அவர்களுடைய கருத்துச் சரியல்ல என்பதை வலியுறுத்திக் கூறி அவர்களைச் சம்மதிக்கச் செய்துவிட்டார். தம் மனைவியையும் தம்மையும் மீண்டும் ஹிந்துக்களாக ஏற்றுக் கொள்ள அவர்களை இணங்க வைத்தார். அது மட்டுமல்ல; அன்று முதல் தமது பழைய மதத்துக்கு மாற விரும்பிய எல்லோருமே அதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்திலேயே உள்ள உட்பிரிவினரிடமும் பிற மதத்தினரிடமும் சகிப்புத் தன்மை காட்டாததுதான் தமக்கு அதிர்ச்சி யளித்ததென்று ஸ்ரீ நடேச ஐயர் என் தகப்பனாரிடம் கூறியது எனக்கு நினைவிருக்கிறது. அவர் கிறிஸ்துவ மதத்தைத் துறந்துவிட்டு வந்ததற்கு இதுதான் முக்கிய காரணம் என்று நான் நம்புகிறேன்.''

சுப்புலக்ஷ்மி கான்வெண்டில் சேர்ந்து ஓராண்டு முடிவதற்குள் அவள் எந்த மதத்தில் தன் வாழ்நாள் முழுதும் நம்பிக்கையும் பற்றுதலும் வைத்திருந்தாளோ, அதனை அவள் விட்டுவிடுமாறு செய்வது யாராலுமே முடியாத காரியம் என்பது தெளிவாகி விட்டது. இதனை ஒப்புக்கொள்ள மதர் பாட்ரிக்குக்கு மனம் வரவில்லை என்ற போதிலும் உண்மை அதுதான். ஆயினும் 'ஃபாகல்டி ஆப் ஆர்ட்ஸ்' பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த அந்த இரண்டு வருஷங்களும் சுப்புலக்ஷ்மியின் வாழ்க்கையில் ஒரு மிக முக்கியமான கட்டமாக விளங்கி அவளது எதிர்காலத்தை நிர்ணயிப்பதாய் அமைந்தது. அங்கிருந்தவர்களின் ஒரு விருப்பத்துக்கு அவள் இசையவில்லை; மத மாற்றத்துக்குச் சம்மதிக்கவில்லை. எனினும் அவள் எந்த மாதர்களுடனும் பெண்களுடனும் அந்தக் கான்வெண்டில் பழகி வந்தாளோ அவர்களது ஓர் எடுத்துக்காட்டான சிறந்த வாழ்க்கை முறைதான் பின்னால் அவள் தன் ஜீவிய காலம் முழுவதும் பின்பற்ற வேண்டிய பாதையை வகுத்துத் தந்தது.

8

தன் வாழ்நாளில் ஒரு முறையேனும் கங்கா ஸ்நானம் செய்துவிட வேண்டும் என்று விசாலாட்சி ஆசைப்பட்டுக் கொண்டேயிருந்தாள்.

அந்த வருஷம் சுப்புலக்ஷ்மிக்குப் பரீட்சை ஏதும் கிடையாது. சித்தியின் பாதுகாப்பில் குழந்தைகள் நித்யாவும் சுவர்ணமும் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பார்கள். சாவித்திரியும் பாலமும் தாய்மைப் பேற்றை அடைந்து விட்டால் விசாலாட்சியால் அவர்களை விட்டு வர முடியாது. இப்போது அவர்கள் கர்ப்பமாக இருக்க வில்லை. சுப்பிரமணிய ஐயரும், அவர் மனைவியும், மூத்த மகளும் பிரயாணம் கிளம்ப இதைவிட நல்ல வாய்ப்புக் கிடைக்காது. இது வரை தன் கணவர், குழந்தைகளின் நன்மையையே சதா எண்ணி வந்த விசாலாட்சியின் உள்ளத்தில் அவர்களுடைய நலனில் நேரடியாகத் தொடர்பு கொள்ளாத வகையில் ஏற்பட்ட ஒரே ஆசை இதுதான். அந்த விருப்பமும் இப்போது நிறைவேறப் போகிறது! அவளும், அவள் கணவரும், சுப்புலக்ஷ்மியும் வடக்கே



யாத்திரை கிளம்பிக் கல்கத்தா மார்க்கமாகக் காசி, அலகாபாத், கயா போவதாகத் தீர்மானமாயிற்று.

''இக்காலத்திய ரொம்பவும் கெட்டிக்காரர்களான அரசியல்வாதிகளைவிட பழைய காலத்துப் பெரியார் ஸ்ரீசங்கராசாரியார் பாரதத்தின் ஒருமைப்பாட்டுக்கு என்ன தேவை என்பதை நன்றாக அறிந்து வைத்திருந்தார்!'' என்று இந்தப் பிரயாணத்தைப் பற்றி விவரிக்கும்போது ஸிஸ்டர் கூறினார்.

'' வடக்கில் இமாலயத்தி லிருந்து தெற்கில் ராமேசுவரம் வரை நமது நாட்டில் அவர் ஐந்து புண்ணிய யாத்திரா க்ஷேத்திரங்களை ஸ்தாபித்தார். ஜனங்கள் ஆங்காங்கு சென்று ஒருவரையொருவர் அறிந்து கொள்ள முடிந்தது. எல்லோருக்கும் பொதுவான கருத்துக்கள் இருப்பதை மக்கள் உணர்ந்தார்கள். மொழியும் ஒரு தடையாக இருக்கவில்லை. படித்தவர்களுக்கெல்லாம் தெரிந்த சமஸ்கிருதம், வடநாட்டு மொழிகள் எல்லாவற்றுக்கும் ஆதாரமாய் இருந்தது. தமிழர்களுக்கும், மலையாளிகளுக்கும் மற்றும் உள்ள தென்னிந்திய மக்களுக்கும் கொஞ்சம் சமஸ்கிருதம் தெரிந்திருந்தாலே போதும், இந்த யாத்திரைகளில் அவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசிப் பழகச் சிரமப்படவில்லை. ஆகவே, சமஸ்கிருதத்தை மிகவும் ஒத்திருக்கும் ஹிந்திதான் தேசிய பாஷையாக இருக்கத் தகுதி வாய்ந்தது என்பதும் சரியே.''

• • •

சுப்புலக்ஷ்மியும் அவள் பெற்றோரும் ரயிலில் பிரயாணம் செய்தார்கள். அந்த 1906ம் வருஷத்தில் க்ஷேத்திராடனம் கிளம்பிய மக்கள் பலரும் நடந்தே சென்றுகொண்டிருந்தார்கள். யாத்திரிகர்கள் ஒரு கயிற்றின் இரு கோடியிலும் தங்கள் துணி மூட்டையையும்,—சமையல் பாத்திரங்களையும் கட்டிக் கொண்டு இடது தோளில் தாங்கிச் செல்லும் காட்சி சர்வசாதாரணமாக இருந்தது. வடக்கே பிரயாணம் செய்யும் எல்லோருக்கும் முக்கியமான இடம் காசிதான். ''அவ்வளவு தூரம் சென்றவர்கள் அலகாபாத்துக்கும், —கயாவுக்கும் போகாமலிருக்க மாட்டார்கள். அதற்குப் பிறகு உடலில் வலுவுள்ளவர்கள் ஹரித்வாருக்கும் செல்வர். அதிலும் மிகச் சிலர் மேலும் பிரயாணம் செய்து பத்ரிநாத் வரையில் போவார்கள். அது மிகவும் கடினமான, ஆபத்து நிறைந்த பிரயாணமாக இருந்தது. ஏன், இன்றைக்கும் அப்படித்தான்'' என்று ஸிஸ்டர் தொடர்ந்து கூறினார்கள்.




'இந்தோனேஷியாவின் கருடா விமானசர்வீசை பம்பாயில் நிறுத்திவிட்டார்களாம் நமது பாரத சர்க்கார்! கருடாவுக்கு மூக்கு உடைபட்டது!.....'


'கம்பவுண்டர் ஐயா! என்னை அனுப்பிவிட்டு இந்தக் கதையெல்லாம் பேசலாம்!'

உள்ளதற்குள் அருகில் உள்ள க்ஷேத்திரத்துக்குக் கிளம்பிப் போய்த் திரும்புவதென்றாலும் நடந்து செல்லும் போது ஆறு மாதத்துக்குக் குறையாமல் ஆகிவிடும். க்ஷேத்திராடனம் கிளம்பியவர்கள் ஒரு வருஷம், இரண்டு வருஷங்கள், சில சமயம் அதற்கும் மேலாகவும் வீடு திரும்பாதிருப்பது சாதாரணமான நிகழ்ச்சிதான்.

க்ஷேத்திராடனம் செய்தவர்கள் காசியிலிருந்து சொந்த ஊர் திரும்பினாலும் யாத்திரை முடிவு பெற்றதாகாது. ராமேசுவரம் செல்வதுதான் யாத்திரையின் கடைசிக் கட்டம். கங்கையிலிருந்து நீர் கொண்டு வந்து ராமேசுவரத்தில் மூலவருக்கு அபிஷேகம் செய்வார்கள். பிறகு வீடு வந்து சேர்ந்ததும் பல பிராமணர்களுக்குச் சந்தர்ப்பணை செய்வார்கள். அப்போதுதான் யாத்திரை பூர்த்தியடைந்ததாகும்.

சென்னையிலிருந்து வடக்கே செல்பவர்கள் இரு புண்ணிய நதிகளைக் கடந்தாக வேண்டும். முதலில் கிருஷ்ணா. பிறகு கங்கையின் தங்கையான கோதாவரி. சுப்புலக்ஷ்மியின் பெற்றோர் இந்த இரு நதிகளிலும் இறங்கிக் குளிப்பது என்று தீர்மானித்தார்கள். (தொடரும்)






லைப்பாய்

இருக்குமிடம்: அதுவே...
ஆரோக்கியம் இருக்குமிடம்

லைப்பாய் சோப்பினால் நீராடுவீர்... அதுவே குதூகல உணர்ச்சியின்
குற்றாலம்... ஆரோக்கிய மலர்ச்சியின் ஆலோலம்...ஆஹாஹா...நல்ல சோப்பின்
நன்மைகள் யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர் லைப்பாய் துணையால் ...

அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்

ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.



50. உதயமும் அஸ்தமனமும்

பூத வீரர்கள் மீண்டும் தைரியத்தைத் தருவித்துக் கொண்டு சிங்கமுகாசுரனை எதிர்த்துப் போர் செய்தார்கள். சிங்கமுகாசுரன் தேரை விட்டு இறங்கி பூதர்களில் சிலரைக் கீழே எறிந்தான்; சிலரை விண்ணில் எறிந்தான்; சிலரைப் பிரம்ம உலகில் எறிந்தான்; சிலரை விஷ்ணு உலகில் வீசினான்; சிலரை நிலமெங்கும் வீசினான்; சிலரைக் கடலில் எறிந்தான். சிலரை ஒடித்தான்; சிலரை மிதித்தான்; சிலரை நசுக்கினான்; சிலரை அரைத்தான்; சிலரைத் தின்றான்; சிலரை நிலத்தில் வைத்துத் தேய்த்தான். சிலரை வெட்டினான். இப்படியாகச் சிங்கமுகாசுரன் கணப்பொழுதில் கண்ட கண்டபடி பூத வீரர்களைக் கண்ட துண்டமாக்கிக் கொன்று குவித்ததால் எங்கும் உதிர வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அது கடலில் கலந்து கடலையே செந்நிறமாக்கியது.

அழற்கண்ணர் என்ற வீரர் சிங்கமுகாசுரன் மீது பல கணைகளை விடுத்தார். அந்தக் கணைகள் அவரது மார்பில் பட்டதும் முனை மழுங்கி முறிந்து விழுந்தன. அழற்கண்ணர் வடவாமுகாக்கினிபோல் சினந்து ஒரு சூலப் படையைச் சிங்கமுகாசுரன் மீது எறிந்தார். அந்தச் சூலம் சிங்கமுகாசுரன் மீது பட்டதும் மலையில் பட்ட முள்ளைப் போல் ஒடிந்து விழுந்தது. சிங்கமுகாசுரனின் வலிமையைக் கண்டு வியந்த அழற்கண்ணர் ஒரு தண்டத்தை எடுத்து அவன் மீது எறிந்தார். அது சிங்கமுகாசுரனின் தேர்ப்பாகனின் தலையைச் சிதறடித்தது. அதனைக் கண்டு சினந்த சிங்கமுகாசுரன் தண்டாயுதத்தை எறிந்தான். அது அழற் கண்ணரின் மார்பைப் பிளக்க உதிர வெள்ளம் பெருகியது. அவர் மூர்ச்சித்தார். சிங்க முகன் வேறொரு தேர்ப்பாகனைத் தம் தேரில் அமர்த்திக் கொண்டு பூத வீரர்களின் மீது போர் செய்யப் புறப்பட்டான்.

சிங்கமுகாசுரன் போர் செய்ய வருவதைப் பூதப் படையைச் சேர்ந்த சுமாலி என்பவன் கண்டான். உடனே அவன், மேரு மலையைப் போன்ற ஒரு மலையைப் பெயர்த்து வீசி ஆரவாரம் செய்தான். அந்தப் பெரிய மலையைச் சிங்கமுகாசுரன் பந்து போல் ஒரு கையால் பிடித்துச் சுமாலி மீது திருப்பி யெறிந்தான். அதனால் சுமாலி உணர்விழந்து, செயலிழந்து நிலத்தில் விழுந்தான்.

அடுத்து, தண்டி என்பவன் தண்டை ஏந்திச் சிங்கமுகாசுரனுடன் சண்டை

செய்தான். சிங்கமுகன் அழியவில்லை; தண்டாயுதம்தான் அழிந்தது. சிங்கமுகன் தண்டியைக் காலினால் உந்தி, வானவர்களும் அஞ்சும்படி ஆரவாரம் செய்து விண்ணில் வீசி யெறிந்தான். விண்ணிற் சென்ற தண்டி திரும்பி வந்து சிங்கமுகாசுரனின் இரண்டாயிரம் தோள்களின் மீது குதித்தான். சோலைகளில் பாயும் குரங்கு போல் அவன் தோள்களில் உதைத்துத் திரிந்தான். சிங்கமுகனோ தனது தோள்களில், ''ஓர் ஈ உலவுகின்றது'' என்ற அளவுக்கே எண்ணி ஒரு கையால் சொறிந்து தண்டியை உருட்டித் துடைத்து விட்டான். தண்டி செயலற்றுப் போனான். பூதர்கள் யாவரும் பயந்து ஓடினார்கள்.

அவர்களை ஊக்குவான் வேண்டி இலக்கத்தெட்டு வீரர்களும், சிங்கமுகாசுரனுக்கு முன்னே தேரைச் செலுத்திக் கொண்டு வந்து சூழ்ந்து கணைகளைப் பொழிந்தார்கள். சிங்கமுகாசுரன் தேரினின்றும் கீழே இறங்கிச் சென்று இடி போன்ற பெரு முழக்கத்துடன் இலக்கத்தெண்மரின் தேர்களில் சிலவற்றைத் தூக்கி எறிந்தான். அவர்களது தேர்களிலேயே சிலவற்றை எடுத்து மற்றவற்றோடு மோதும்படி அடித்து நொறுக்கினான். இலக்கத்தெண்மரும் வலிமை இழந்து ஓடினார்கள். சிங்கமுகாசுரன் தனது தேரில் வெற்றி வீரனாக ஏறிக் கொண்டான்.

வீரவாகு தேவர், கோபத்துடன் தேரைச் செலுத்திக் கொண்டு சிங்கமுகாசுரன் முன்பு வந்தார். பெரிய வில்லை வளைத்துப் பல கோடி பாணங்களைப் பொழிந்தார். எதிர்த்து வந்த அவுணர்கள் தலை சிதறின; வெட்டுண்ட அவர்கள் பூமியில் விழுந்து உருண்டனர். அளவற்ற அவுணர்கள் மடிந்ததால் எங்கு நோக்கினும் பிண மலையே காட்சியளித்தது. அம்மலைகளைச் சுற்றிப் பேய்கள் சுற்றிக் கொண்டிருந்தன. இறந்த அவுணர்களின் உடலினின்றும் பெருக்கெடுத்தோடிய உதிர வெள்ளம் இறவாமல் நின்றிருந்த அவுணர்களை அடித்துச் சென்று கடலில் கொண்டு போய்ச் சேர்த்தது.

இதனைக் கண்ட சிங்கமுகாசுரனின் மக்களாகிய சதவீரர்களுக்குச் சினம் பொங்கியது. கணைகளை மழையென வீரவாகு தேவர்மீது பொழிந்தனர். அவற்றையெல்லாம் தனது கணைகளால் மாற்றினார் வீரவாகு தேவர். வீரவாகு தேவரை விற் போரில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த சதவீரர்கள் வாட்போர் தொடங்கினர். சிவபெருமான் தந்தருளிய வாளுடன் வீரவாகு அவர்கள் மீது பாய்ந்தார். சதவீரர்கள் அங்கம் அங்கமாகக் குறி பார்த்து வீசிய வாள் படையினாலும் வீரவாகு தேவருக்குத் தீங்கு எதுவும் ஏற்படவில்லை. உடனே அவர்கள் கூட்டமாகச் சென்று வீரவாகு தேவரைப் பிடித்துக் கொண்டார்கள். அதனால் ஆத்திரமடைந்த வீரவாகு தேவர் தமது வாள் படையினால் சதவீரர்களின் உடலைப் பலவாறாக வெட்டிக் கொன்று குவித்தார். சதவீரர்களைக் கொன்ற பின் தேரில் ஏறிக் கொண்டார் வீரவாகு தேவர்.

தமது புதல்வர்களான சதவீரர்கள் இறந்ததைக் கண்ட சிங்கமுகாசுரன் பெரும் துன்பத்தில் ஆழ்ந்தான்.

இதன் பிறகு சிங்கமுகனும் வீரவாகுவும் நேருக்கு நேர் சந்தித்தனர். வீரவாகு தேவரை ஏற இறங்கப் பார்த்தான் சிங்கமுகாசுரன். அவனது கண்கள் தீயைக் கக்கின. ''உ...ம், சிவகுமாரன் என்றால் ஆறு முகங்கள் இருக்கும். உனக்கு ஆறு முகங்கள் இல்லை. ஒரே முகம் உடைய நீ சிவகுமாரன் அன்று. நீ யார்? எண்மர்களில் ஒருவனோ? இலக்கம் வீரர்களின் தலைவனோ? நீதான் முன்பு நமது ஊருக்கு வந்த தூதனோ? யார்? சொல்'' என்றான்.

சிங்கமுகனின் கேள்விக்குப் பதில் கூறினார் வீரவாகு தேவர்.

''சிவகுமாரராகிய முருகப் பெருமானின் அடிமை நான். முன்பு உங்களது மகேந்திரபுரிக்குத் தூதனாய் வந்து முருகப் பெருமானின் அருளினால் நகரத்தை அழித்துத் திரும்பிச் சென்றவன் நானேதான். ஆறுமுக சுவாமியின் கிருபையால் அளவற்ற அவுணர்களைக் கணப் பொழுதில் அழித்த நான் உன்னையும் கொல்வதற்காக அவரது அநுக்கிரகத்தைப் பிரார்த்தித்து இங்கு வந்து நிற்கிறேன். என் பெயர் வீரவாகு'' என்று கூறினார்.

''விநயமாகப் பேசுவது போலப் பேசியே உன்னைப் பற்றி நீ தற்பெருமை அடித்துக் கொள்கிறாய். போர்ப்பயிற்சி பெறாதவர்களையும், நகரில் உள்ள பாமரர்களையும் வெல்லுவதுதான் சுத்த வீரனின் ஆண்மையோ? உன்னையும் உன் தரப்பினர் அவ்வளவு பேரையும் வதைக்க வந்துள்ளேன். சிறையில் சிக்கியுள்ள தேவர்களைச் சிறை விடுக்க வந்துள்ள நீங்கள், உங்கள் உடலில் அடைபட்டுள்ள உயிரை விடுத்துப்


Cadbury's
MILK
CHOCOLATE
ஒவ்வொரு சாக்கலேட்டும் . . . பாலின் குணங்கள் அடங்கியது!
இஷ்டம்போல் தேர்ந்தெடுக்க எண்ணற்ற
இன்பரயங்கள். காட்பரீஸ் சாக்கலேட்
சத்துச் செறிந்தது. சுவைமிக்கது
— ஊட்டமளிப்பதும்கூட.
Cadbury's
CRACKLE
Cadbury's
Snack
Cadbury's
ORANGE
MILK CHOCOLATE
Cadbury's
Fruit & Nut
MILK CHOCOLATE
Cadbury's
BOURNVILLE
PLAIN CHOCOLATE
Cadbury's
CANDY NUT
Cadbury's
Roasted Almond
Cadbury's
Hazel Nut
MILK CHOCOLATE
Cadbury's
Fruit & Nut
Cadbury's
NUT MILK
CHOCOLATE
Cadbury's
காட்பரீஸ் சாக்கலேட்
மிட்டாய் மட்டுமல்ல.... ஒரு உணவும்கூட

போவீர்கள்'' என்று இடிபோல் கர்ஜித்தான் சிங்கமுகாசுரன்.

சிங்கமுகாசுரனின் வீர கர்ஜனையைக் கேட்ட வீரவாகு தேவர் நகைத்துப் பதினெட்டுக் கணைகளைச் சிங்கமுகாசுரன் மீது செலுத்தினார். அந்தப் பாணங்கள் அவன் மார்பில் பட்டுப் பயனற்று வீழ்ந்தன. தொடர்ந்து இருவருக்கும் வெகு உக்கிரமான போர் நடைபெற்றது. சிங்கமுகாசுரன் தன் கையிலிருந்த சூலப் படையைச் சுழற்றி வீரவாகு தேவர்மீது வீசினான். விண் வழியே வந்த அந்தச் சூலத்தின் ஆற்றலைக் கண்ட வீரவாகு தேவர் அதனை எதிர்த்து ஆயிரம் பாணங்களை விடுத்தார். சூலப் படை அந்தப் பாணங்களையும் விழுங்கிவிட்டு வீரவாகு தேவரை நோக்கிச் சென்றது. இதனைக் கண்ட இலக்கத்தெண்மரும் வீரர்களும் கலக்கமடைந்தனர். தம்மை நோக்கி வந்த சூலப் படையை வீரவாகு தேவர் சிவபெருமான் அளித்த வாள் படையால் இரு துண்டங்களாக வெட்டினார். சினம் பொங்கச் சிவப் படைக்கலத்தை எடுத்து வழிபாடு செய்து ''சிங்கமுகாசுரனைக் கொல்வாயாக'' என்று விடுத்தார். சிங்கமுகாசுரனும் அதற்கெதிராக இன்னொரு சிவப் படைக்கலத்தையே வழிபாடு செய்து விடுத்தான். இருவரில் எவருமே அழியவில்லை. சிவப்படைக் கலங்கள் இரண்டும் ஒன்றோடொன்றுவந்து கலந்து தம்மைச் செலுத்தியவர்களிடமே திரும்பிச் சென்றன.

சிங்கமுகாசுரனைக் கொல்ல முடியவில்லையே என்று வீரவாகு தேவர் பெரிதும் வருந்தினார். ஆறுமுகக்கடவுளிடம், 'தாங்கள் இவனோடு யுத்தம் புரிய வேண்டாம்; நானே இவனை முடிப்பேன்' எனத் தாம் கூறியது தவறோ?' என்று எண்ணினார். 'இவனது ஆற்றலைக் காணுங்கால் ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்திலுள்ள படைகளாலன்றி வேறு எவற்றினாலும் இறக்க மாட்டான் என்றே தோன்றுகிறது. ஆயினும், இவனது தேரையும், படைக் கலங்களையும், சேனைகளையுமாவது அழிப்பேன்' என்று கருதினார் வீரவாகு. சிங்கமுகாசுரனின் தேர்ப்பாகனது தலையைத் துண்டித்தார். சிங்கமுகாசுரனின் தேரை அழித்தார். அந்தச் சமயம் பார்த்துப் பூத வீரர்கள் சிங்கமுகாசுரனைச் சூழ்ந்து மலைகளையும் படைக்கலங்களையும் வீசிப் போர் செய்தார்கள். சிங்கமுகாசுரனின் தேர் அழிந்து விட்டதால் அவன் வேறொரு தேரில் ஏறி ஆயிரம் கைகளிலும் வில்லும் அம்பும் எடுத்துக்



''அந்நாள்! மைசூர்ப்பாகு நானே செய்தேன். உப்பு போதுமா என்று பாருங்களேன்!''

கொண்டு அளவற்ற பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்கள் தாக்கியதால் போருக்கு வந்த பூதர்கள் மாண்டனர். சிங்கமுகாசுரனின் பாணத்தினால் தாக்கப்படாத உடலே இல்லையென்றாகிவிட்டது.

வீரவாகுவும் சிங்கமுகனும் இலட்சக் கணக்கான பாணங்களால் பரஸ்பரம் தாக்கிக் கொண்டனர். சிங்கமுகாசுரன் பெருஞ் சீற்றத்துடன் இரண்டாயிரம் பாணங்களைச் செலுத்தினான். அந்தப் பாணங்களால் வீரவாகு தேவரின் கையிலிருந்த வில் வெட்டுண்டு வீழ்ந்தது. அவர் வேறொரு வில்லை எடுப்பதற்கு முன் சிங்க முகாசுரன் கணை மழை பொழிந்து அவர் மார்பைத் துளைத்தான். வீரவாகுதேவர் வெகுண்டு சிங்கமுகாசுரனின் தேரை அழித்து அவன் ஆயிரம் விற்களையும் அழித்தார். அது கண்ட வானவரும் நான்முகனும், நாரணனும் ஆர்த்தனர். அதனால் சிங்கமுகாசுரன் நாணமடைந்தான்.

வீரத்தால் செய்வதற்கு இனி ஏதுமில்லை என்று கண்ட சிங்கமுகாசுரன் தனது தாயாகிய மாயை அளித்த மாயா பாசத்தை எடுத்து விடுத்தான்.

பிரளய கால இருளைப் போன்ற அந்தகாரத்தைப் பரப்பிச் சென்ற அந்த மாயா பாசம், ஏழு கடல்களும் ஒன்று சேர்ந்து மணல்களை வாரியடித்துக் கொண்டு செல்வதுபோல் வீரவாகு தேவர் முதலிய இலக்கத் தொன்பதின்மரையும் ஏனைய பூதர்களையும் மயக்கி அடித்துச் சென்று உதயகிரியில் வைத்தது. தமது உணர்வுகளின் அஸ்தமனத்தை அடைந்த பூத வீரர்கள் உதயகிரியில் மயங்கிக் கிடந்தனர்.

(தொடரும்)

இரு இதயங்கள்

கோமகள்

சென்ற முறை கல்லூரி விடுமுறை விட்ட போது கசந்து கொண்டேதான் கிராமத்துக்குப் போனேன். இப்போது அப்படியில்லை. விடுமுறை எப்போது வரும், கிராமத்துக்கு எப்போது போகலாம் என்று காத்திருந்தேன். எனவே, விடுமுறை ஆரம்பித்த முதல் நாளே குலாபி சென்னையில் வாங்கி வருமாறு பணித்திருந்த சாமான்களின் பட்டியலோடு சைஞபஜாருக்குப் புறப்பட்டேன்.

அலங்காரப் பொருள்கள், நைலான் ஒயர், பாசி மணிகள், வண்ண நாய் உருண்டைகள், வளையல்கள் என்று அவள் எழுதியிருந்ததை யெல்லாம் வாங்கியபின், குலாபிக்குப் பொருத்தமாக வேறு ஏதேனும் ஒரு பரிசு வாங்க விரும்பி யோசித்தேன். அழகாகவும், எப்போதும் உபயோகமாகவும் வேண்டுமானால் நல்ல உயர்ந்த பேனு ஒன்று வாங்கித் தருவதே சிறந்ததென முடிவு செய்து அவ்வாறே வாங்கினேன்.

புகைவண்டியில் செல்லும்போதே குலாபியின் நினைவு ரோஜா மணமாக மனத்தைச் சூழ்ந்திருந்தது.

என் சென்ற பிரயாணத்தின் போது கிராமத்து வீட்டில் பொழுது போகாமல் அடைந்து கிடந்தபோதுதான் அப்பாவைப் பார்க்கத் தம் பெண் குலாபி என்ற ஹரிணியோடு ராம்லால் வந்திருந்தார். கிராமத்தில் ஓர் எஸ்டேட்டை வாங்கி அங்கேயே ஒரு மாதமாக அவர் ருடிவந்து விட்டாராம். நில விவகாரங்களில் ஊருக்குப் புதிதாகையால் அப்பாவின் யோசனையைக் கேட்கத் தினசரி வருவாராம். அவ்வப்போது மகளையும் அழைத்து வருவாராம்.

குலாபி என்ற பெயர்தான் அவளுக்கு எத்தனை பொருத்தமானது! அவள் நிறமும், அழகும், அந்த முகமும் எல்லாம் ரோஜாவின் அம்சம்தான். இளமைக் கொதுவில் இன்ப நிறைவெய்திப் பவனி வரத் துடிக்கும் அவள் கண்களைக் கண்டு நான் மெய் சிலிர்த்தேன். அவளது சகஜமான பேச்சும், கலகலப்பான சுபாவமும் என் அன்னையைக் கவர்ந்தது. அதன் பயன் குலாபி அடிக்கடி வீட்டுக்கு வந்தாள். மாலை வேளைகளில் வயல் வெளிகளைப் பார்வையிடும் சாக்கில் நானும் ஊரின் ஒதுக்குப்புறத்திலிருந்த அவர்கள் வீட்டுக்குப் போக ஆரம்பித்தேன். உள்ளே குலாபியின் தாயார் வேலையாக இருப்பாள். ராம்லால், நான், குலாபி மூவரும் எதைப் பற்றியாவது பொழுதுபோக்காகப் பேசிக் கொண்டிருப்போம். சிலபோது ராம்லால் இருக்க மாட்டார். அப்போது நானும், குலாபியும் மட்டுமே எதைப் பற்றியாவது பேசிக் கொண்டிருப்போம். அவளுக்குச் சரத் சந்திரர், காண்டேகர் நாவல் எல்லாம் மிகவும் பிடிக்கும். நல்லவேளையாக நான் சிறு வயதில் அவற்றை யெல்லாம் படித்திருந்ததால் அதைப் பற்றிப் பேசி என் ஞாபக சக்தியின் திறமையையும், ரசிகத் தன்மையையும் காட்டிக் கொள்ள முடிந்தது.

அந்த விடுமுறை முடிந்தபோது நான் அவளிடம் வருத்தத்தோடு விடைபெற்றேன். அவள் கண்கள் பொங்க விடை கொடுத்தாள். பிறகு சமாளித்தவாறே ஒரு சில பொருள்கள் வாங்கி வரும்படி பட்டியல் கொடுத்தாள்.

கிராமத்தை அடைந்ததும் குளித்து உடைகள் மாற்றிக் கொண்டதும் அவசரம், அவசரமாகக் குலாபிக்கு வாங்கிய பொருள்களோடு அவள் வீடு நோக்கிப் பறந்தேன்.

''எனக்குத் தெரியும், நீங்கள் இப்போதே வருவீர்கள் என்று! இல்லையானால் நானே வந்திருப்பேனே...'' என்று மகிழ்வோடு வரவேற்றாள் குலாபி.

''ஏன், நீ வாங்கி வரச் சொன்ன பொருள்களைப் பார்க்க அத்தனை ஆசையா?''

''ஓ! ஈகவர் பாபுவைப் பார்ப்பதைவிட மற்றப் பொருள்களைப் பார்ப்பதில் எனக்கு அத்தனை பிரியம் கிடையாது. தெரிந்து கொள்ளுங்கள்'' என்று செல்லக் கோபம் காட்டினாள் அவள்.

''அதிருக்கட்டும், குலாபி! நான் வரப் போவது எப்படித் தெரியும் உனக்கு?''

''ஏன்? நான் அங்கு வரும்போதெல்லாம் மாதாஜியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு தானே இருக்கிறேன், உங்கள் நலத்தையெல்லாம். உங்களுக்குத்தான் என் நினைவு வந்திருக்காது பட்டணத்து வாழ்க்கையில்....''

''குலாபி! இந்த மாதிரி பழி போடாதே. உன் நினைவு இல்லை என்றால், இந்தப் பொருள்களை எப்படி வாங்கி யிருக்க முடியும்?''

''புறப்படும்போது என் நினைவு வந்திருக்கும். இல்லையானால் இத்தனை நாட்களும் மாதாஜிக்கு எழுதிய கடிதத்தில் என்னைப் பற்றி ஒரு வரி எழுதினீர்களா?'' அவளது குற்றச்சாட்டு போலியாக ஒலிக்கவில்லை.

நான் திகைத்துத் தடுமாறும் போதே, என்னை மகிழ்விக்கப் பேச்சை மாற்றினாள் குலாபி. ''எங்கே நான் வாங்கி வரச் சொன்ன பொருள்கள்?''

ஒவ்வோர் அட்டைப் பெட்டியாகத் திறந்து பார்த்துத் திருப்தியோடு புகழ்ந்தவள் கடைசியாக நான் தந்த சிறு அட்டைப் பெட்டியைத் திறந்து பார்த்துவிட்டு வியப்போடு என்னைப் பார்த்தாள். முகம் கொள்ளா மகிழ்வோடு, ''நிஜமாகச் சொல்லுங்கள், சகவர் பாபு. இந்தப் பேனாவை எனக்காகவா வாங்கி வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''உனக்கே உனக்குத்தான் குலாபி.''

''எத்தனை அழகாக இருக்கிறது இது! கொஞ்சமிருங்கள் பாபு. இதை என் மாதாஜியிடம் காட்டிவிட்டு வருகிறேன்'' என்று உள்ளே பாய்ந்தாள்.

''குலாபி.... குலாபி....'' என்று கூவித் தடுக்க நினைத்தது வீண் முயற்சியாயிற்று. அவளுக்காக அவன் ஒரு பரிசு வாங்கி வந்தது தெரிந்தால் யாரேனும் தவறாக நினைத்து விடுவார்களோ?

அன்று விடைபெற்று வந்தபின் இரண்டொரு நாட்கள் அந்தப் பக்கம் போகவில்லை. பிறகு ஒரு நாள் சென்றபோது முதலில் சிறிது நேரம் பேசாமலிருந்த குலாபி தன் அப்பாவைப் பார்த்து, ''சகவர் பாபு தினமும் இங்கு ஏன் வருவதில்லை என்று கேளுங்கள் அப்பா?'' என்றாள்.

நான் சிரித்தவாறே, ''நான் வருவதால் எனக்காக டீ தயாரிக்கும் வேலை உனக்குக் கூடுகிறதல்லவா?'' என்றேன்.

''ஏன், நான் தயாரிக்கக்கூடாதா, அப்பா? அன்பாகவும், நட்பாகவும் உள்ளவர்களைத் தினமும் பார்த்துப் பேசக் கூடாதா? அவர்களுக்கு டீ தயாரித்துக் கொடுக்கக்கூடாதா?'' ராம்லாலையே பார்த்துக் கேட்டாள் அவள்.

''இனிமேல் தினமும் வருகிறேன் குலாபி!'' என்று கூறியதும்தான் அவள் திருப்தியுற்றாள்.

ஆனால் அவள் கூறிய செய்தி? குலாபி இன்னும் ஒரு வாரத்தில் பம்பாய் போகப் போகிறாளாம்! திரும்புவதற்கு இருபது நாட்கள் ஆகுமாம்!

'இது மெய்தானா?' என் மனம் பதறியது. அவளை உற்று நோக்கினேன். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

பம்பாய்க்குப் புறப்படுமுன் குலாபி என்னிடம் விடைபெற்ற போது நான் கூறியது இதுதான். ''குலாபி! இந்த ஏழை சகவரை மறந்துவிட மாட்டாயே.''

குலாபியின் சிரிப்பு என் காதில் விம்மல் ஒலியாகக் கேட்டது. ''நான் இருபதே தினங்களில் திரும்பி விடுவேன் சகவர் பாபு.''

கட்டுப் போகக்கும் வெய்யிலில் குலாபி இல்லாத ஊர் கசந்தது. அந்த இருபது நாட்களும் இருபது யுகங்களாகக் கழிந்தன. அதன் பின் குலாபி வந்தாள். அன்று அவள் கையால் தனி ருசி படைத்துவிடும் டீயோடு பம்பாய் இனிப்புக்களும் கிடைத்தன.

குலாபி முன்புக்கு இன்னும் வெளுத்திருந்தாள். பனி பூசினாற்போல் இதழ்கள் பொலிந்தன. ''சகவர் பாபு! உங்களுக்கு ஒருசில பரிசுகள் வாங்கி வந்திருக்கிறேன்.''

''என்ன?''

அவள் விரல்கள் பரபரப்பாக நூலைப் பிரித்தன. ஒரு நைலான் டை, ஒரு செட்



நைலான் சாக்ஸ், ஒரு சிகரெட் லைட்டர். "பிடித்திருக்கிறதா பாபு?" என்ற கேள்வி.

"இந்த சிகரெட் லைட்டர் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருக்கிறது. கொஞ்சமிரு குலாபி. எங்க மாதாஜியிடம் ஓடிப் போய்க் காட்டிவிட்டு வருகிறேன்" என்றேன் கீச்சுக் குரலில்.

"போங்கள், பாபு! நீங்கள் வாங்கித் தந்த பேனாவை மாதாஜியிடம் காட்டினேனென்றுதானே கேலி பண்ணுகிறீர்கள்? உங்களுக்குப் பிடிக்கவில்லை. அப்படித்தானே?"

"நோ, நோ. எனக்குப் பிடிக்கிறது, குலாபி. ஆனால் நான் எப்போதோ அப்பாவுக்குத் தெரியாமல் சிகரெட் பிடிப்பதை அம்பலப்படுத்தவா இது?"

"இது உபயோகமில்லையா பாபு? நீங்கள் ஏன் அப்பாவுக்குப் பிடிக்காததைத் தெரியாமல் செய்கிறீர்கள்? இது உபயோகப்படாவிட்டால் போகிறது. சிகரெட் பிடிப்பதை விட்டு விடுங்கள்" என்று உபதேசித்தாள்.

"ஓ! அது முடியுமா குலாபி? இந்த லைட்டரை அப்பாவுக்குத் தெரியாமல் வைத்துக் கொண்டு உபயோகிப்பேன். ஆனால் உனக்கு ரொம்பச் செலவு...."

"உஷ்! இதென்ன சகவர் பாபு! எங்களை அத்தனை அந்நியமாகவா கருதுகிறீர்கள்?—என்னால் அப்படிக் கருத முடியவில்லையே?"

"இல்லை, இல்லை. நான் அப்படிக் கருதவில்லை. இப்படிக் கொடு அந்தப் பரிசுப் பொருள்களை."

அவள் தனக்கென வாங்கிக் கொண்ட பத்து கெஜ வாயில்களையும், அழகிய பூப்போட்ட சில்க் பாவாடைகளையும் காட்டினாள்.

கல்லூரிக்குத் திரும்பும் போது அவள் கூறிய சொற்கள் வெகு நாட்கள் வரை என் மனத்துள் தேங்கி நின்று புதிய பலத்தையும், பாச உணர்வையும் தந்தன.

"அங்கே போனதும் இந்த ஏழை குலாபியை மறந்து விடாதீர்கள் சகவர் பாபு. நட்பும், அன்பும் அன்று பூத்து அன்றே அழிவதல்ல. அது வாடா மலர் போன்ற உறவு. உங்களுக்காக எந்த நேரமும் நான் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்."

காலம் எத்தனை வேகமாக ஓடுகிறது! படிப்பின் நடுவே பனி படர்ந்த ரோஜாப் பூவைப் போல் நினைவில் மிதப்பாள் குலாபி. வீட்டுக்கு எழுதும் கடிதங்களில் குலாபியை விசாரித்து எழுதிக் கொண்டிருந்தேன். ஒரு நாள் அப்பா எழுதியிருந்தார். கூடிய விரைவில் குலாபியின் திருமணம் நடைபெறப் போகிறதாம். அன்று முழுதும் இனம் புரியாக் குழப்பம் நெஞ்சை அலைக்கச் சிந்தனையிலேயே லயித்துக் கிடந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அந்த வேதனைக்கு இனமும் கண்டுபிடித்தேன். "நான்...நான்...என்னை அறியாமல் ஒரு வேளை அந்தக் குலாபியை விரும்புகிறேனா?" நானே என்னுள் திடுக்கிட்டேன். இதுவரை ஓர் ஆண் துணையின் நட்பு எப்படி இருக்குமோ அப்படிக் களங்கமற்றுப் பழகிவிட்டு, இப்போது அதற்குப் புதிய பெயர் ஒன்று சூட்டுவதா? என் மனத்தில் இந்த அளவாவது ஒரு சிறு சலனம் தோன்றக் கூடுமானால் இந்தத் தவறுக்கு யார் காரணம்?

ஆம்! குலாபிதான் காரணம்! கடைசியாக அவள் என்ன சொன்னாள்? மனம் நினைவைக் கூர் தீட்டியது. "அங்கே போனதும் இந்த ஏழை குலாபியை மறந்துவிடாதீர்கள் சகவர் பாபு. நட்பும் அன்பும் அன்று பூத்து அன்றே அழிவதல்ல. அது வாடா மலர் போன்ற உறவு. உங்களுக்காக எந்த நேரமும் நான் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்."

இதன் பொருள் என்ன? குலாபியின் மனமும், அதன் ஈடுபாடும் என்ன என்பது தெள்ளத் தெளிய விளங்குகிறதே.

அடுத்த நாளே அப்பாவிடமிருந்து வந்த கடிதம் மேலும் வியப்பை மூட்டியது. 'குலாபி ஒரே பிடிவாதமாக நீ வரவேண்டுமென்று நினைக்கிறாள். இரண்டு தினங்கள் 'லீவு' கேட்டுக் கொண்டு புறப்பட்டு வரவும்.'

இதிலும் விவரம் இல்லை. எல்லாம் ஒரே மூடுமந்திரம்தான். இந்த முறை வீட்டை அடைந்ததும், அம்மாவை எதையும் கேட்கப் பயமாக இருந்தது. எதையாவது கேட்கப் போய் நானே குற்றவாளி ஸ்தானத்தில் நிற்க நேர்ந்து விட்டால்...! எனவே, 'சீரியஸா'க முகத்தை வைத்துக் கொண்டு என் காரியங்களைப் பார்க்கும் போதே குலாபி வீட்டிலிருந்து ஆள் வந்தது, என்னை உடனே அழைத்து வரும்படி.

"சீக்கிரம் புறப்படப்பா. குலாபி துடித்துக் கொண்டிருக்கிறாள்" என்று அம்மா கூறிய போது என் வியப்பும், அதிசயமும் எல்லை கடந்தன.

இத்தனை நிகழ்ச்சிகளும் அதனதன் போக்கில் நடப்பதுபோல் இருந்தாலும், ஏதோ சிக்கலாகத் தெரிந்தது.

ராம்லால் என்னை வரவேற்றார். அவர் அருகே அமர்ந்திருந்தவன் என் பழைய நண்பன் நவீன் அல்லவா?

"ஹல்லோ நவீன்!"

"ஓ! சகவர்! இதுதானா உன் ஊர்? எத்தனை அபூர்வமான சந்திப்பு? உட்கார் சகவர். பள்ளியில் படித்தபோது உன்னைப் பார்த்ததுதானே?"

"சகவர்! நவீன்தான் நம் குலாபிக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை. அவர் உங்ககூடப் படிச்சவர் என்றால் குலாபி ரொம்ப சந்தோஷப்படுவா! முன்னமேயே அவரை உங்களுக்குத் தெரியும்கிறது எத்தனை நல்லதாயிற்று! நீங்கள் உள்ளே போய்க் குலாபியைப் பார்த்துட்டு வந்துடுங்க......" என்றார் ராம்லால்.

எனக்கு இன்னும் குழப்பம் தீரவில்லை. குலாபி நவீனை விரும்பவில்லையா? என்னைச் சந்தித்து என்னிடம் எதைக் கூற விரும்புகிறாள்? நவீன் அழகன், பெரிய பணக்காரன். குலாபிக்கு என்ன தயக்கம்?

காலடியோசை கேட்கும்போதே தலை முக்காட்டைச் சரி செய்து கொண்ட குலாபி என்னைக் கண்டதும் முழு விகசிப்போடு சிரித்தாள். "சகவர் பாபு! உட்காருங்கள். டீ கொண்டு வருகிறேன்."

"கல்யாணப் பெண் இப்படி டீ போட ஓடலாமா? உட்கார்! ஏதேது ரொம்பப் பெரியவளாகி விட்டாயா? தலைமுக்காட்டை இழுத்திழுத்து விட்டுக் கொள்கிறாயே!"



"பின்னே நான் சின்னப் பெண்ணோ? அதிருக்கட்டும், சகவர் பாபு. அவரைப் பார்த்தீர்களா?"

"யாரை?"

"என் பெயரைச் சொல்ல மாட்டேனா என்ன? நவீனைத்தான்" என்ற குரலில் வெட்கத்தின் ரேகை படரத் தவறவில்லை.

"பார்த்தேன். அவன் என்னோடு படித்த நண்பன்தான்.... அது மட்டுமல்ல. ஒரே விடுதியறையில் இருந்து பழகியவர்கள்தான்."

"அப்படியா?"

"அழகாக இருக்கிறான். பணக்காரன். உன்னை ஒரு குறையும் வராமல் வைத்துக் காப்பாற்றுவான். ரொம்ப நல்லவன், அடக்கமானவன்......!"

"போதும்! அதெல்லாம் எனக்குத் தெரிய வேண்டாம்." பட்டென்று கூறினாள் அவள்.

"பின்னே?"

"உங்களுக்கு அவரைப்பிடித்திருக்கிறதா?"

இந்தக் கேள்வியில் நான் திகைத்துப் போனேன். "உனக்கு?" என்று பதில் பாணம் தொடுத்தேன்.

"என்னைப் பற்றிய உணர்வுக்கு நான் மதிப்புத் தரத் தயாரில்லை சகவர் பாபு. உங்களுக்குத் திருப்தியானால் அதுவே என் திருப்தியாக இருக்கும்."

"இல்லையென்றால்.....?"

"இல்லையென்றால்..... இது விளையாட்டுப் பேச்சு அல்ல சகவர் பாபு. இந்தக் கல்யாணம் நடக்காது!"

"நான்.... நான் உன் வாழ்க்கையில் அத்தனை முக்கியமானவனா குலாபி? அப்படியா என்னைக் கருதுகிறாய்....?" என் மனத்தின் பாசக் கசிவு மடை புரண்டது.


"அதை இத்தனை நாட்கள் நீங்கள் உணரவில்லையா பாபு? உங்கள் அப்பா, எனக்குப் பெரியப்பா, உங்கள் அம்மா எனக்கு மாதாஜி. அப்படியானால் நீங்கள் எனக்குச் சகோதரரில்லையா பாபு? உலகத்தில் இதைவிட நெருங்கிய சொந்தம் வேறு இருக்க முடியுமா? அப்படி யிருக்கும் போது உங்கள் தங்கையை மண முடிக்கப் போகிறவனைப் பார்த்து நீங்கள் திருப்தியுற வேண்டாமா? சொல்லுங்கள் சகவர் பாபு."

என் மேனி புல்லரித்துப் புளகமுற்றது. அன்பு அன்பு என்று கிடைத்ததையெல்லாம் ஏற்றுக் கொள்ளும்போது அதற்குப் புனிதமான உறவுமுறையில் ஓர் உருவம் கொடுக்கும்போது எத்தனை தெய்வீகத் தன்மை பெற்று விடுகிறது?

குலாபியின் தாயார் உள்ளே வந்தாள். "என்ன சகவர்? உனக்குப் பிடித்தால்தான் அவளுக்குப் பிடிக்குமாம். நவீனைப் பிடிக்கிறதா? எங்களைவிட அவளுக்குச் சகோதரன் மேல்தான் அன்பு அதிகம். உன் அப்பாகிட்ட வந்து உன்னை வரச் சொல்லிக் கடிதம் எழுதச் சொன்னாளே!"

"எனக்கு நண்பன்தான் மாதாஜி. நவீனை எனக்கு ரொம்பப் பிடிக்கிறது."

தாய் மகள் முகத்தை நோக்கினாள். அதே அன்புக் குழைவோடு குலாபி கூறினாள். "பாபுக்குத் திருப்தியானால் எனக்கும் திருப்திதான்!" என்றாள் அவள். இப்படிக் கூறிய



கல்யாண மண்டபம்

கதை: கவலைப்படத் தேவையில்லாத விஷயம். அந்தக் காலத்து ராஜா ராணிக் கதையை எடுத்துக் கொண்டால் புதுமைக்குப் புதுமை, கற்பனைக்கும் தடை போட முடியாது. மந்திரவாதி வரலாம். மாயா ஜாலங்கள் இருக்கலாம். கற்பின் மகிமை பெண்ணின் பெருமை, கொஞ்சம் கண்ணீர் இவைகளுக்கும் இடம் கொடுத்து விட்டால் போதுமே.

காதல்: இது ரொம்ப முக்கியம். கதை அப்படி இப்படி இருந்தாலும் கூட இதுமட்டும் 'அப்டுடேட்' டாக இருக்க வேண்டும். குகைவாசியாக மனிதன் வாழ்ந்தானே அப்போது தன் துணைவியை அவன் எப்படிக் குகைக்கு இழுத்து வந்தான் என்பதை மனத்தில்கொண்டுதான் இன்றைய திரைப்பட ஜோடிகளைக் காட்டுகிறார்கள். தரையில், மலைச் சரிவில், மணல் மேட்டில், தண்ணீருக்குள் அவர்கள் தாவிப் பிடித்துக் கட்டிப் புரண்டு காதல் செய்யட்டும்.

நடனம்: பரதம், பாவம், கலை, கலாச்சாரம் என்றெல்லாம் கவலைப்பட வேண்டாம். அயல் நாட்டு வெறியூட்டும் நடனங்களான ஹூலா ஹூலா, டுவிஸ்ட் போன்ற அமிட்டங்களாகப் பொறுக்கிப் போட்டுவிடுங்கள்.

சண்டை: இன்றைய பாக்ஸ் ஆபீஸ் படத்துக்கு இது அவசியம். ஆகவே அந்தக் காலத்தில் ஸ்டண்ட் க்வீன் நாடியா நடித்த படங்களை நினைவு கூர்ந்து காட்சிகளை அதன்படி அமைக்கவும். ஒலிக் குறிகள் முக்கியம். ஹீரோ குத்தும்போது டங் டங் என்று வெண்கல நாத ஒலி பிறக்க வேண்டும். மறைந்த எரால்பிளினை நினைத்துக்கொண்டு ஹீரோ கத்தியைச் சுழற்றித் தாண்டிக் குதிக்கட்டும், கவலையில்லை. முக்கிய குறிப்பு: சமீபத்தில் வெளிவந்த ஆங்கிலப் படங்களின் ஸ்டண்ட் காட்சிகளில் ஏதாவது புதுமை இருக்குமானால் - சாட்டையடிச் சண்டை, கோடாலிச் சண்டை - இத்யாதி - இவைகளை மறக்காமல் காப்பி செய்து கொள்ளவும்.

கவர்ச்சி: இது இல்லாவிடில் படம் குறைந்த பட்ச நாட்கள்கூட ஓடாதே. குளிக்கும் சீன் முக்கியம்.

பாட்டு: அந்தப் பாடு நமக்கு எதற்கு?

ஹாஸ்யம்: அந்தக் காலத்தில் திரையுலகை ஆட்சி புரிந்த ஹீரோக்களுக்குத் தோழனாகத்தான் ஹாஸ்யப் பாத்திரம் வரும். நாமும் அதே உத்தியைக் கையாளுவோமே.

நடிப்பு: இதைப் பற்றித் தயாரிப்பாளரோ நடிகர்களோ கவலைப்பட வேண்டாம். இம்மாதிரிக் கதைகளுக்கு நடிப்பு முக்கியமல்ல. ரசிகர்கள் தாபப் பட்டால் புது முகங்கள் என்று கூறித் தப்பலாம்!

முடிவு: படத்தின் தலைப்பை நினைவுபடுத்திக் கொண்டு எப்படியாவது அதற்குப் பொருத்தமாக முடித்துவிட வேண்டும். இறந்தவர்களைப் பிழைக்க வைக்கச் சஞ்சீவி தருவிக்கப்பட்டாலும் கவலையில்லை.

இத்தகைய குறிப்புகளுடன் - குறிக்கோளுடன் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களின் வரிசையில் வெளியானதுதான் கல்யாண மண்டபம். யுத்த காலத்தில் கச்சாப் பிலிமை மிச்சப்படுத்தி யிருக்கலாம். அதுவும் போகட்டும். பொன்னான நமது நேரத்தையும் அல்லவா பாழ்படுத்திவிட்டார்கள்!

அவளிடம் நான், ''பொய் சொல்லாதே. என்னை எதிர்பார்க்கும் முன்பே உன் திருப்தி கூடிவிட்டது. இல்லையா?'' என்றேன்.

''உண்மைதான் பாபு! ஆனால் உங்களுக்குப் பிடிக்க வில்லை என்றால் எனக்குக் குறை. தெரிந்து விட்டால் நிறைவு ஏற்படும். பின்னால் குறைப்படுவதைவிட முதலிலேயே மறுத்துவிடலாம் என்றுதான் உங்களை அவசரமாக வரவழைத்தேன்..... இப்போது..... அவர் உங்களோடு நெருங்கிப் பழகியவர், ஒரே அறையில் வாழ்ந்தவர், எல்லாவற்றையும்விட உங்கள் திருப்திக்கு உகந்தவர் என்று உணர நேரும்போது பெருமகிழ்வடைகிறேன். ஈசுவர் பாபு! கொஞ்சம் இருங்கள். உங்களுக்கு 'டீ' கொண்டு வருகிறேன். ஒரு நாளும் உங்களுக்கு 'டீ' தராமல் இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்ததில்லை.....''

என் கண்கள் பனித்தன. குலாபியின் புனிதமான அன்பை வாலிபத் துணிவில் தவறாக நினைத்து ஒரு நிமிடம் சலனப்பட்டதற்கும், நடுங்கி அவள் மீது மானசீகப் பழி சுமத்தியதற்கும் வருந்திக் கடவுளிடம் மனப்பூர்வமான மன்னிப்பை வேண்டி நின்றேன்.

தட்டு நிறைய பட்சணங்களோடு குலாபி உள்ளே வந்தாள். ''சாப்பிடுங்கள் பாபு.''

''வெளியே நவீன் இருக்கிறான். நான் மட்டும் சாப்பிடுவது நன்றாக இல்லையே... வெறும் 'டீ' மட்டும் கொடு போதும்.''

''ஊஹூம்! அதுதான் முடியாது. இன்று உங்களுக்கு என் கையால் பரிமாற வேண்டிய விசேஷ தினம் பாபு. அவருக்கும் சேர்த்து நான் எப்படிப்போடமுடியும்? சாப்பிடுங்கள்''

''அப்படி என்ன விசேஷம், இந்த வீட்டுக்கு மாப்பிள்ளையாக வரவேண்டிய நவீனை கூடக் கவனிக்காமல்......?''

''முதல் பெருமை பிறந்த வீட்டில் சகோதரனுக்குத்தான் ஈசுவர் பாபு. அதிலும் இன்று ரக்ஷாபந்தன் தினம். நம் பந்தத்தையே புதுப்பிக்கும் நாள் இது. எனவே, என் சகோதரனை வெறும் 'டீ'யோடு அனுப்புவதாக இல்லை.''

சாப்பிட்டதாகப் பெயர் பண்ணி எழுந்தேன். குலாபியின் மெல்லிய கரங்கள் பட்டுக் குஞ்சலங்கள் ஊசலாடும் ரக்ஷாபந்தன் கயிற்றை என் கரங்களில் கட்டின. அவள் முன் கையில் வந்து விழும் பட்டை வளையல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கிலுகிலுத்தன. நான் சற்றும் எதிர்பாராதவாறு என் கால்களைத் தொட்டு வணங்கினாள். ''ஆசீர்வதியுங்கள் ஈசுவர் பாபு.''

அவள் கரங்களைப் பற்றி எழுப்பியபோது நவீன் அங்கு வந்தான். சட்டென அவன் கையொன்றைப் பற்றி அவளுடன் இணைத்தவாறே, ''கடவுள் நீங்கள் இருவரும் இன்பமுடன் வாழ வாழ்த்த வேண்டும்'' என்றேன்.

நாணத்தால் குலாபி முக்காட்டை இழுத்து விட்டவாறே உள்ளே ஓடினாள்.

நவீன் என் கைகளை அன்புடன் பற்றிக் கொண்டான். ''அப்படிப்பட்ட ஒரு சகோதர உறவா இருக்க முடியும் என்று கொஞ்சம் சந்தேகப்பட்டு விட்டேன் ஈசுவர். என்னை வேண்டுமென்றே இழுத்தடிக்கிறாளோ என்றும் பயந்தேன். என் சகோதரன் வந்து பார்த்து, அவனுக்குப் பிடித்தால்தான் என்று ஒரே பிடிவாதமாகக் கூறவும் வேறு என்ன வெல்லாமோகூட நினைத்துவிட்டேன். இருந்தாலும் அவள் சகோதரன் வரும் வரை இருந்து என்ன நடக்கிறது என்று பார்த்துப் போகவே விரும்பினேன். அந்தச் சகோதரன் நீதான் என்றதுமே என் ஐயங்கள் தீர்ந்து விட்டன. நாம் இருவரும் உயிருக்கு உயிராகப் பழகிய நண்பர்கள் இல்லையா? உனக்கு என்னைப் பிடித்துவிடும் என்று தெரியும்.... அதே போல் புனிதமான அப்பழுக்கில்லாத அன்பு செலுத்தி அதை வளர்க்க முடியும் என்று குலாபியும் நிரூபித்து விட்டாள். உன் அன்பின் மேன்மையைப் புரிந்து கொண்டேன் ஈசுவர். உன்னைக் காணுமுன் நான் சந்தேகப்பட்டதற்கு என்னை மன்னித்துவிடு.''


''இப்படி ஏன் குழப்பிக் கொள்கிறாய்? சந்தர்ப்பவசத்தால் ஒரு நிமிடம் கொஞ்சம் சந்தேகப்படுவது மனித இயல்புதானே? என் சகோதரி குலாபி உத்தமமான பெண். நவீன்! இப்போது நீ கொடுத்து வைத்தவனா, அவள் கொடுத்து வைத்தவளா என்று சொல்ல முடியாதபடி இருவருமே அதிர்ஷ்டசாலிகள்.''

ஆனால் என்னுள் ஒரு முள் குத்திக் கொண்டிருந்தது. ஒரு கணம் குலாபியின் அன்பைத் தவறாக நினைத்துப் பார்த்ததின் மூலம் நான் இன்னும் கடவுளின் முன்னிலையில் குற்றவாளியாகவே நிற்கிறேன்! ஆனால் குலாபி எங்கள் நட்பையும், அன்பையும் புனிதமான உறவாக்கித் தன்னை உயர்த்திக் கொண்டு விட்டாள்! இந்த இரண்டு இதயங்களின் வேற்றுமையைத்தான் ஆண், பெண் என்று பிரித்து வைத்தார்களோ?

செய்திப் படங்கள்








மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில் திரு எம். வேங்கடராமய்யர் நூற்றாண்டு விழா திரு பி. டி. ராஜன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடந்தது.

மதுரை லக்ஷ்மியம்மாள் கோஷ்டியினர் திருவல்லிக்கேணி மாட வீதியில் நிகழ்த்திவரும் பஜனையின் ஒன்பதாவது ஆண்டுவிழா திரு கி. வா. ஜகந்நாதன் தலைமையில் விமரிசையாக நடந்தது. பைந்தமிழ்ச் செல்வர் திரு சிவகுமார் சிறப்புச் சொற்பொழிவாற்றிப் பஜனை ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தார்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் மாணவர் ஆட்சி மன்றத் திறப்பு விழாவில் திரு ஏவி. மெய்யப்ப செட்டியார் கலந்துகொண்டார்.

சென்னை வாணி மகாலிலும், தியாகராயநகர் ராமகிருஷ்ணு உயர்நிலைப் பள்ளியிலும் பாரதியார் விழா சிறப்பாக இரண்டு நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் விழாவுக்குத் திரு சுத்தானந்த பாரதியார் தலைமை வகித்தார். இரண்டாம் நாள் பாரதியார் கருத்தைப் பிற மொழிகளில் ஆக்கித் தந்த அறிஞர்களுக்குப் பொள்ளாச்சி என். மகாலிங்கம் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தார்.




அவள் எங்கே?
28
கதை:
கௌசிகன்
சித்திரம்:
ரமணி
அங்கே... அது...
ஒரு மனித உடல்... கட்டி உருட்டி விடப்பட்டிருக்கிறது...
ஆ...! இது... நீதிபதி
சார்! உங்களை இந்த நிலையில் இங்கே?
எங்கே...? என்ன...?



அந்தப் பெண்ணுக்கு யாரால் எப்படிப் பட்ட ஆபத்து சார்?
உங்களை இந்த நிலைக்கு உள்ளாக்கியது யார் சார்?
இதோ நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம்... நீங்கள்?
என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் ஓடிவிட மாட்டேன். என்னை மறுபடி நீங்கள் இங்கேயே சந்திக்கலாம்.

தொடரும்...

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு.

கால்கேட்டின் நீடித்திருக்கும், நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயேப்பல் துலக்க விரும்புகிறார்கள்.

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் பற்பொடி மூலம் அடையலாம். ஒருடப்பி பலமாதங்களுக்கு வரும்.

பல்சுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்.



... உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டென்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

DCG-35-TAM

அத்தியாயம் நாற்பத்திரண்டு

கசப்பான அறிமுகம்

சேற்றில் படுத்துச் சுகம் கண்டு எழுந்த எருமை மாடு ஆனந்தக் கேவ விடுவது போல் எங்கோ தொலை தூரத்தில் எண்ணெய்ச் செக்கின் 'ஒய்ங்' என்ற ஒலி இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்தது. அவ்வொலியைச் செவிமடுத்தவாறு கவுண்டன்பாளையம் அகதிகள் முகாமை நோக்கி நடந்து கொண்டிருந்தான் சபேசன்.

அவன் மனத்தில் என்றுமில்லாத உற்சாகம் நிரம்பித் ததும்பிக் கொண்டிருந்தது. அத்துடன் அவனது நேற்றைய திட்டம், தீர்மானம் எல்லாமே



ஜெகசிற்பியன்

இன்று தலைகீழாக மாறிப் போய் விட்டிருந்தன. ஆமாம்; நேற்று திட்டமிட்டது போல் மறுபடியும் சென்னைக்குச் செல்ல இப்போது அவன் விரும்பவில்லை; வேதாவுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்ற தீர்மானமும் தேவையற்றதெனத் தோன்றியது அவனுக்கு! தன் சொந்தக் கிராமத்தில், சொந்த வீட்டில் இருந்து கொண்டு, கோவையிலோ, அல்லது தொழில் வளம் நிறைந்த அதன் சுற்றுப்புற ஊர்களிலோ ஏதேனும் ஒரு வேலையை எப்படியாவது தேடிக் கொள்வது என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

இப்படித் திடீரென்று அவனுடைய திட்டமும் தீர்மானங்களும் திசை மாறிப் போனதற்குக் காரணம் என்ன? இக்கேள்விக்குப் பதில் சொல்வது மாதிரி தூண்டில்கோலைச் சுண்டி இழுத்து வீசுவதுபோல் தன் வலது கையை வெறுமனே சுழற்றிவிட்டுத் தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டான் அவன்!

ஆயினும் உடனே அந்தச் சிரிப்பு மறைந்து ஒருவித வேதனை கலந்த வெட்கம் அவனைச் சூழ்ந்து கொண்டது. சென்னைக்குப் போவதென்ற தன் முந்தைய முடிவை மாற்றிக் கொண்டது பற்றி அவன் எள்ளத்தனை வெட்கமோ வேதனையோ கொள்ளவில்லை; மாறாக மகிழ்ச்சியே அடைந்தான். ஆனால் வேதாவுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்ற தீர்மானத்தைக் கைவிட்டு விட்டதை எண்ணித்தான் அவனையுமறியாமல் அவன் மனம் வேதனையுற்று வெட்கியது.

'அந்த அன்பு நெஞ்சம் கொண்ட அபலைப் பெண்ணின் விஷயத்தில் மட்டும் நான் எப்போதுமே ஏன் இப்படி அலட்சியமாக நடந்து கொள்கிறேன்? இதை அலட்சியம் என்று சொல்ல முடியாது; மனிதத் தன்மையற்றது அல்லது தரக் குறைவானது என்று தான் கூற வேண்டும்! என்னைப் பற்றி— என் எண்ணம், நடத்தை, குணம், லட்சியம், ஆகியவை பற்றி — எனக்கு நானே பரிசீலனை நடத்திக் கொள்ளும்போதெல்லாம் அவற்றில் அந்தரங்கமாகக்கூட வெட்கப் படும்படியானதோ, திருத்தப்பட வேண்டியதோ, தரக் குறைவானதோ எதுவும் இருந்ததில்லை. இது குறித்து நான் பெருமைப்பட்டுக் கொள்வதும் உண்டு. இப்படி என்னுள் என்றுமே உயர்வாக அமைந்திருந்த இந்தத் தன்மை அந்தப் பெண்ணின் விஷயத்தில் மாத்திரம் ஏன் இத்தனை மோசமாகத் தாழ்வடைந்தது? சென்னைக்குப் போவதில்லை என்ற முடிவினால் இனி அவளைச் சந்திக்க வாய்ப்பில்லை என்று தெரிந்து கொண்டு தானே அவளுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்றிருந்த தீர்மானத்தையும் காற்றில் பறக்க விட்டு விட்டேன்? இது எத்தகைய கேவலமான சுயநலப் போக்கு! காரண காரியத்துக்காக ஒருவரை நேசிப்பதும், மதிப்பதும், இழைவதும், குழைவதும், அது இல்லையென்றால் வெறுப்பதும், விரோதிப்பதும், மறப்பதும், துச்சப்படுத்துவதும், தூர விலகிப் போவதும் எத்தனை இழிவான தன்மைகள்!'

தொடக் கூடாத ஒன்றைத் தொட்டுவிட்டது போன்ற அருவருப்புடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு, கால்களை எட்டிப் போட்டு நடந்த சபேசன், 'அதெல்லாம் இல்லை; என்னைப் பொறுத்தவரையில் அந்தப் பெண்ணிடம் நான் பொதுவான உறவுக்கு மேலே போய் எவ்வித ஒட்டுதலும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அவள் அப்படி ஏதாவது ஒட்டுறவு கொண்டிருந்தால் அதற்கு நான் பொறுப்பாளியுமல்ல. இந்த நிலையில் அநாவசியமாக அவளுக்கு ஏன் கடிதம் எழுதி அவளது மனத்தை இன்னும் சலனமடைய வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்தத் தீர்மானத்தைக் கைவிட்டேன். இதில் தலைக் குனிவோ, தரக் குறைவோ என்ன இருக்கிறது?' என்று தனக்குத் தானே பதில் சொல்லிக் கொள்ளுகிறவன் மாதிரி வாய் விட்டு முனகிய பின், 'இந்த வாதம் வெறும் நொண்டி வாதமே' என்பதை அந்தக் கணமே உணர்ந்து கொண்டவனாய் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

சற்று நேர நடைக்குப் பின் அவனுடைய சிந்தனை அந்த அகதிப் பெண் சந்தியாவைப் பற்றித் திரும்பியது. அவள் சொன்ன, அவளது அவலம் நிரம்பிய குடும்ப விருத்தாந்தங்கள் ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்த போது பீதியால் அவன் மனம் மிரண்டு நடுங்கியது. பர்மாவிலிருந்து வெளியேற்றப் பட்ட இந்தியர்கள் தம் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்தபோதும், வந்த பின்னரும் அநுபவித்த துன்பங்கள் அனைத்தும் அவனுக்கு நன்கு தெரியும். மனிதராகப் பிறந்த எவருமே அத்தகைய வேதனைகளை அநுபவித்திருக்க மாட்டார்கள் என்றே அவன் இதுகாறும் நினைத்திருந்தான். ஆனால் பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்த அகதிகளின் அநுபவங்களை அந்தப் பெண்ணின் வாயிலாகக் கேட்டபோதோ, பர்மா அகதிகளின் நிலைமை அதைக் காட்டிலும் நூறு மடங்கு மேல் என்று அவனுக்குப் பட்டது. 'நம்மைப் பற்றி நாம் தனிமையில் நினைத்துப் பார்க்கும் போது நாம் மட்டுமே உலகில் படுமோசமான கதியிலே கிடந்து கஷ்டப்படுவதாகவும், நம்மை விடக் கீழான விதி படைத்தவர்கள் வேறு எவருமே இருக்க மாட்டார்கள் என்றும் தோன்றும்; ஆனால் இன்னொருவரை அணுகி, அவரது நிலைமையைக் கேட்டு அவரும் அதை உண்மையாகச் சொல்வாராயின், அப்போது அவரைவிட நாம் எவ்வளவோ மேல் என்று நமக்குத் தோன்றிவிடும். இது எல்லா மனிதர்களிடமும் உள்ள ஓர் இயற்கையான மனப் பிராந்தி போலும்.'—அவன் மெல்லச் சிரித்துக் கொண்டு மேலே நடந்தான்.

“ஆஷோன்! மொஷாய், நோமஷ்கார்!”

அகதிகள் முகாமை அடைந்த சபேசன், இறக்கமான கப்பிச் சாலையின் முனையிலேயே தயங்கி நின்ற சில விநாடிகளுக்கெல்லாம் தன் செவிக்குப் புதிய — ஆனால் ஏற்கனவே கேட்டுப் பழக்கப்பட்ட இனிய மென்மையான — இம்மொழியொலி கேட்டுச் சட்டென்று திரும்பினான்.

அங்கே, தண்ணீர்த் தொட்டிப் பக்கமிருந்து தலையில் குடமும், இடுப்பில் சிறு

செப்புப் பாத்திரமுமாகச் சுமந்துகொண்டு அழகு நடை பயின்று வந்த சந்தியாதான் அவனைப் பார்த்து மகிழ்ச்சிப் புன்னகையுடன் அவ்வாறு சொன்னாள்.

அந்தச் சொற்களைப் புரிந்து கொள்ள முடியாமல் விழித்துக் கொண்டு நின்ற சபேசனை நோக்கி மீண்டும் அவள், "வாருங்கள், நமஸ்காரம்!" என்றாள் பிள்ளைத் தமிழில்.

கூச்சமும் குழைவுமாகப் பின்னால் நகர்ந்த சபேசன், "வணக்கம்" என்று இளநகை புரிந்தான்.

ஒயில் நடை போட்டு அவனைக் கடந்து சென்ற அவள், இடது புற வரிசையிலிருந்த ஒரு குடிசைக்குள் புகுந்து மறைந்தாள். இனி என்ன செய்வது என்று தோன்றாமல் அங்குமிங்குமாகப் பார்த்துக் கொண்டு தயங்கி நின்றான் சபேசன்.

அன்றொரு நாள் அவ்விடத்தில் கண்ட அதே காட்சிகளே இன்றும் அவன் கண்ணில் பட்டு, நெஞ்சில் துயரத்தை மூட்டின. அதோ, அந்தக் குடிசையின் பின்புறத் தாழ்வாரத்தில் தன்னந் தனியாக உட்கார்ந்திருக்கும் அகதி இளைஞன் அவல மயமான இசையொன்றைத் தன் புல்லாங்குழலில் தோய்த்து இசைத்துக் கொண்டிருக்கிறான்!...

"ஆஷோன், மொஷாய்!"


சிந்தனையில் ஆழ்ந்து நின்ற சபேசன் இந்தக் குரல் கேட்டு மெல்லத் திரும்பினான். சந்தியா சென்ற குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்த ஒரு பெரியவர் அவனை நோக்கி இவ்வாறு கூறி, அன்பும் பரிவுமாகப் புன்னகை பூத்துத் தம் அருகில் வரும்படி சமிக்ஞை செய்தார். அவருக்கு வயது சுமார் ஐம்பது இருக்கும். நல்ல சிவந்த மேனி, ஒல்லியும் உயரமுமான உடல், உச்சந் தலை வழுக்கையைச் சுற்றிச் சலசலவென்றிருந்த நரைத்த கேசம், கழுத்துப் பிடரி வரை தொங்கிச் சுருண்டிருந்தது. கவலை தேங்கிய சதுரமான முகம், கூரிய மூக்கு, காவி ஏறிய பற்கள்; அகன்ற நெற்றி; சிறிய கண்கள்; பழுப்பு நிறமான நீண்ட கதர் ஜிப்பா; பஞ்ச கச்சம் வைத்துக் கட்டிய வெள்ளைக் கதர் வேஷ்டி; அதன் ஒரு மூலை ஜிப்பாவின் இடது ஜேபியில் செருகப்பட்டிருந்தது.

அவர்தான் சந்தியாவின் தந்தை என்பதை ஊகித்துக் கொண்ட சபேசன், "வணக்கம், பாபு!" என்று கரம் குவித்தவாறு தயங்கித் தயங்கிக் குடிசையருகில் சென்றான்.

"போஷோன்!" என்று சொன்ன அவர், சிறிய கட்டைச் சுவரைச் சுட்டிக் காட்டி விட்டுத் தாமும் உட்கார்ந்தார். உடனே, மூங்கில் தட்டியாலான கதவுக்குப் பின்னாலிருந்து, 'போஷோன்' என்ற வங்காளிச் சொல்லை மொழிபெயர்ப்பது மாதிரி "உட்காருங்கள்!" என்ற இனிய குரல் எழுந்தது. அது சந்தியாவின் குரல். சபேசன் சங்கோசத்தோடு உட்கார்ந்தான்.

"உன் பெயர் நடன சபேசன், இல்லையா தம்பி? உன்னைப் பற்றி என் மகள் எல்லாம் சொன்னாள்!" என்று தமிழில் தட்டுத் தடுமாறிக் கூறினார் பெரியவர். "உன்னைப் பார்த்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்!"

"எனக்கும் உங்களைச் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி, பாபு!" என்றான் சபேசன். அவ



"ஏண்டா பயலே! இந்தச் சைக்கிளை ரோட்டில் விட லாயக்கில்லை; அதற்கு 'பிரேக்' இல்லை என்று சொன்னேனே, ஏன் விடறே?"

"நான் ரோட்டில் விடவில்லையே! பிளாட்பாரத்தில் தானே விடறேன்!"

ருடைய பண்பும் சகஜமுமான பேச்சு அவனை வெகுவாகக் கவர்ந்தது.

ஏதோ யோசனையில் மோவாயை வருடிக் கொண்டிருந்த பெரியவர் ஆழ்ந்த அவலப் புன்னகையுடன் மெல்லத் தலையசைத்தவாறு, "நாமெல்லாம் இப்படிக் கஷ்டப்படக் காரணம் என்ன தம்பி? நமக்கும் நம்மைப் போல் அடிமைத்தளையில் கட்டுண்டு கிடந்த ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் கிடைத்த சுதந்திரம்தான் என்று எனக்குத் தோன்றுகிறது! சுதந்திரத்தைப் பற்றி நாம் முன்பு எண்ணியிருந்த அவ்வளவும் பொய்யானவை, தவறானவை என்று இப்போது தெளிவாகி விட்டன! மண்ணுக்கு மதிப்பளிக்கத்தான் சுதந்திரம் வந்ததே தவிர அதில் வாழும் மனிதரை மதித்து உயர்த்த வரவில்லை! மக்களிடையே உள்ள இன மத மொழி வேறுபாடுகளை மிகைப்படுத்தி வீணான விரோத குரோதங்களை வளர்க்கவே அது உதவுகிறது. இவற்றைக் காட்டிலும், இன்று உலக அமைதிக்குக் குந்தகம் விளைவித்துப் போரையும் பூசலையும் உண்டுபண்ணுவது புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள்தாம் என்பது மற்றோர் உண்மையாகும்!" என்றார்.

சற்று முன்வரை உற்சாகக் குழைவோடும் துறுதுறுப்பான குழந்தை மாதிரியும் உட்கார்ந்திருந்த சபேசன், அந்தப் பெரியவரின் இப்பேச்சைக் கேட்டு உணர்ச்சிகள் புண்பட்டவனாய், ஆத்திரத்துடன் தன் உடம்பை உலுக்கி முறுக்கினான். அவன் முகம் கறுவடைந்து சிறுத்தது.

இந்தச் சமயம் குடிசைக்குள்ளிருந்து சந்தியா தன் வங்க மொழியில் ஏதோ இரைந்து பேசியது கேட்டது. அதற்குப் பதில் சொல்வது போல் அந்தப் பெரியவரும் புன்முறுவலுடன் என்னமோ சொன்னார்.

சுதந்திரத்தைப் பற்றி அவர் கூறிய கருத்துக்களை ஆக்ரோஷமாக மறுக்கத் துணிந்து

விட்டவன் போல் வெடுக்கென்று தலை நிமிர்ந்த சபேசன். அந்த ஒரு கண நேரத்தில் தன்னை எப்படியோ கட்டுப்படுத்திக்கொண்டு புன்னகை பூத்தான். 'மனித மனம் ஒரு வில்லைப் போன்றது. அதை ஓரளவுவரையில் தான் வளைக்கலாம். அதற்கு மேலும் வளைத்தால் அது படீரென்று முறிவதோடு அல்லாமல் அதிலே பூட்டப்பட்ட அம்பும் குறி பிசகிப் பாய்ந்து விடும். அப்படித்தான் தாள முடியாத துன்ப, துயரங்களையும், சோதனை வேதனைகளையும் அனுபவித்துவிட்ட இந்தப் பெரியவரின் உள்ளமும் அறிவும், முறிந்த வில்லின் அம்பாகி வக்கிர திசையிலே பாய்ந்து விட்டிருக்கின்றன. ஆகவே அவரைக் கடிந்து கொள்வது சரியல்ல.—' இவ்வாறு எண்ணி அமைதியடைந்த அவன், அவரை இதமாக ஏறிட்டு நோக்கித் தணிந்த குரலில் கூறினான்: ''பாபு சொன்னது போல் நானும் சில சமயம் அப்படி நினைத்திருக்கிறேன். நம்மைப் போன்ற அகதிகள் பலரின் கருத்தும் அதுவாகவே இருக்கலாம். ஆனால் சற்று நிதானமாகச் சிந்தித்தால் அது சரியல்லவென்பது நமக்கே தெரிந்துவிடும்.''

கடகட வென்று நகைத்த பெரியவர், ''ஓ..... கொஞ்சம் முன்னே என் மகளும் இப்படித்தான் சொல்லி என்னைக் கோபித்தாள்!'' என்றவாறு மீண்டும் நகைத்தார்.

இதைக் காதில் வாங்கிக் கொள்ளாத சபேசன் தொடர்ந்து சொன்னான்: ''ஆமாம், பாபு! சுதந்திரம் என்பது மண்ணுக்கும், மலைக்கும், நதிக்கும், காட்டுக்கும் கிடைக்கும் மதிப்பு மாத்திரம் அல்ல; காரணம், அவற்றை விட்டு மனிதனைப் பிரிக்க முடியாதாகையால் அது மனிதனுக்குக் கிடைக்கும் மதிப்பே ஆகும். அதனால் அவனுடைய உயிரைவிட அது மேலாகிறது. அடிமை என்னும் மலட்டுத்தனத்தினால் பீடிக்கப்பட்ட பாரதத் தாய் பல்லாண்டு காலமாகத் தவமா தவம் கிடந்து, சகிக்க முடியாத துன்பங்களை யெல்லாம் அநுபவித்து, செய்யவொண்ணாத் தியாகங்களை யெல்லாம் செய்து பெறற்கரிய பேறாகச் சுதந்திரம் என்னும் தெய்வமாக் குழந்தையைப் பெற்றாள். இந்தக் கஷ்டப் பிரசவத்தால் அவள் உடல் கொஞ்சம் பலவீனமாகியது. அது இயற்கைதானே? பலவீனமான உடலில் புதுப் புது நோய்கள் பற்றுவதும் இயற்கைதான். எனவே, அவள் எதிர் பார்த்த சில நோய்களும், எதிர்பாராத சில நோய்களும் இப்போது அவளைப் பிடித்துத் துன்புறுத்திக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒரு நோய்தான், அயல்நாடுகளிலிருந்து வெளியேறி அகதிகளாக வந்து சேரும் நம்மைப் போன்றவர்களின் பிரச்னை. இது அவளுக்கு ஒரு சொறி சிரங்கு போன்ற நோய் தான். முதலில் வலியும் அரிப்பும் மிகுதியாக இருந்தாலும் விரைவிலேயே ஆறிக் குணமாகி விடும். ஒரு முக்கிய விஷயம், பாபு! 'பாரதத் தாய், பாரதத் தாய்' என்கிறேனே; அவள் எங்கே இருக்கிறாள்? எப்படி இருப்பாள் ? சித்திரக்காரர்கள் வரைந்து காட்டுவது போல் கிரீடம் தரித்த ஒரு பெண்ணின் வடிவில் கையிலே சூலாயுதம் ஏந்திக் கொண்டு இமயமலையில் வீற்றிருக்கிறாளா? அல்லது நிமிர்ந்து பறக்கும் ஒரு புறாப் போன்று விளங்கும் பாரதத் தேசப் படத்தின் வடிவிலே இருப்பாளா? அப்படி யெல்லாம் அவள் இருக்கவில்லை. இதோ, என்னுடையவும் உங்களுடையவும் இரத்தத்தில் ஒரு துளி, தசையில் ஒரு துணுக்கு, நரம்பில் ஓர் இணுக்கு, எலும்பில் ஒரு துண்டு, உயிரில் ஓர் அணு, ஆத்மாவில் ஒரு கோண் — இவ்வாறு இந்நாட்டில் வாழும் நாற்பத்து நான்கு கோடி மக்களினும் எடுத்துச் சேர்த்த ஓர் அற்புத அரூப சங்கமாகவே பாரதத் தாய் விளங்குகிறாள். அதாவது, நான் ஒரு பாரதத் தாய்! நீங்கள் ஒரு பாரதத்தாய்! இங்கே நம் கண்ணெதிரேயும் கண்ணுக்கு அப்பாலும் உள்ள ஒவ்வோர் ஆணும் பெண்ணும் பாரதத் தாய்களே ! ஆக, நமக்கு உண்டான சிறு சிறு நோய் உபாதைகளைப் பொறுக்க முடியாமல், நாம் தவமா தவமிருந்து பெற்ற நம் குலவிளக்கான நமது வாழ்வின் ஊன்றுகோலான — சுதந்திரம் என்னும் குழந்தையை வெறுப்பதும், வீண் எனத் தூற்றிப் பேசுவதும் சரியல்ல!''

பனிக் கட்டி போல் முகம் இறுகி வெளுக்க, வாயடைத்த நிலையில் சபேசனையே வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார் பெரியவர். இந்தச் சமயம் குடிசைக்குள்ளிருந்து சந்தியா மகிழ்ச்சிக் குரலில் ஏதோ தன் பாஷையில் உரக்கச் சொல்வது கேட்டது. சலிப்புடன் தலையசைத்துக் கொண்ட பெரியவர், ''தம்பி சொல்வதும் சரிதான்!... ஆனால், அந்தக் காம்ரேட் இதற்கு மாறாகச் சொன்ன போதும் சரியாகத்தானே தோன்றியது !.... அவர் சொன்னதைத்தான் சற்று முன் நானும் சொன்னேன்!.....'' என்று முனகினார்.

சபேசனுக்குச் சட்டென்று ஒரு விஷயம் விளங்கியது. சுதந்திரத்தைப் பற்றி அவர் மனம் கசந்து பேசியது அவருடைய சொந்தக் கருத்து அல்ல; அவ்விஷக் கருத்தை வேறு யாரோ அவருள் திணித்திருக்கிறார்கள் என்பதுதான் அது. அத்துடன் அவர் இயற்கையாகவே வெகுளித்தனமும், சுயநல வேட்கையும் கொண்டவர் என்பதையும் புரிந்து கொண்டான்.

வியப்பும் குதூகலமுமாகச் சபேசனைப் பார்த்துக் கொண்டே இரு கோப்பைகளில் தேநீருடன் வெளியே வந்த சந்தியா அவ்விருவருக்கும் இடையில் வைத்து விட்டு உள்ளே ஓடி மறைந்தாள்.

''உ. சாப்பிடு, தம்பி!'' என்று அன்புடன் கூறிய பெரியவர் ஒரு கோப்பையை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டுத் தாமும் அருந்தலானார். சற்றைக்கெல்லாம் குடத்துடன் வெளியே வந்த சந்தியா தண்ணீர்த் தொட்டியை நோக்கி நடந்தாள்.

''ஹல்லோ, சுரேஷ் பாபு!''

தேநீரைச் சுவைத்துப் பருகிக் கொண்டிருந்த சபேசன் அவசரமாக நிமிர்ந்தான். பெரியவரும் மலர்ந்த முகத்துடன் திரும்பினார். பக்கத்துக் குடிசையிலிருந்து அப்போதுதான் வெளிப்பட்ட அந்தக் குட்டையான அகதி வாலிபன் கையில் ஓர் உருது தினசரியுடன் அமர்த்தலாக வந்தான். அவன் பார்வை சபேசனையே ஊடுருவியது. (தொடரும்)


நேர்த்தியான வேலைப்பாட்டிற்கு
பிரசித்திபெற்ற மண்டபக்கூண்டு
அரவிந்த
நாட்டில் மிக உயர்ந்த ஜவுளிகளுக்கு பிரபலமானது
விதவிதமான தினுசுகள்
லான்ப்ட், பாப்ளின்ஸ்
ஷர்ட்டிங்ஸ் ஸ்டிரைப், டாப்பி, செக், பைஜாமா
தோதீஸ், மெர்ஸிரைஸ்ட லான் 5531, ஸூட்டிங்ஸ், காபர்டின்
பிரின்ட்ஸ், பிரின்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்
செசவான கலர் புட்டாக்கள்
2 × 2 கவர்ச்சியான மூழு வாயில்கள் - விரேலிலும், புட்டாக்களிலும்
SANFORIZED
Arvind Quality
டெபினைட்* மற்றும்
டெபினைட் டபுள் டெஸ்டெட்
TAM
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்
*Registered Users

ஆதாரம்

கோமதி சுப்பிரமணியம்

இறைவனில்லா ஆலயத்தில் ஏற்றி வைக்கும் விளக்காகச் சென்று கொண்டிருக் கும் சரோவின் இதயத்தில் என்ன என்ன எண்ணங்கள் உருவாகிக் கொண்டிருக்க முடியும்? சூனியத்தை எதிர்நோக்கி முன்னேறும் கவலை யுடன் வண்டியில் அமர்ந்திருக்கிறாள்.


அவளை வழியனுப்ப அவள் சகோதரி வசந்தி வந்திருக்கிறாள். சரோவின் மனத்தின் பிரதி பலிப்பு போல் அவள் சகோதரியின் முகத் திலும் ஆயிரமாயிரம் எண்ணங்கள் உருவாகி அழிந்து கொண்டிருக்கின்றன. தனக்குத் தானே மறைத்துக் கொள்ளும் முயற்சியில் வெற்றியும் தோல்வியுமான போராட்டத் தில் அவள் தவித்துக் கொண்டிருக்கிறாள்.

அவள் தவிப்பு சரோவின் இதயத்துள் வேதனையைப் பாய்ச்சுகிறது.

"வசந்தி! என் பொருட்டு நீயோ அப் பாவோ வருத்தப்படவே வேண்டாம். நான் இறைவனுக்கு நல்ல மலரெடுத்து அர்ச்சித் திருக்கவில்லை. என் கையிலே பட்டது காட்டு மலர் தான் போலும்...."

அவள் வார்த்தையில் பொங்கி வந்த விரக்தித் தெறிப்பைத் தாளமாட்டாது முகத்தை மறுபுறம் திருப்பிக் கொள்கிறாள்.

சரோவின் பார்வையும் பிளாட்பாரத் தைத் துழாவுகிறது.



நேரம் இரவு ஒன்பது மணி என்பது தெரியாமலே, குப்பரப் பட்டினமாக ஒளி சிந்திக் கொண்டிருக்கிற மின் விளக்குகள், பிரயாணம் செய்ய வருபவர்களின் நடையிலும் சரி, அவர்களின் பயணத்தைத் தொடங்கி வைக்க முன்னேறும் சுமைதூக்கிகளின் நடையிலும் சரி, ஒரே வேகம், ஒரே பரபரப்பு.

கிடைத்த இடத்தில் தொற்றிக் கொள்ள விரைபவர்களும் முன்கூட்டியே பதிவு செய்து குறித்த வண்டியைத் தேடி ஆராய்வோருமாக கக் குதும்ப நடைச் சத்தம் அங்குமிங்கு மாக அலைபாய்ந்துகொண்டிருக்கிறது.

நெடுந் தொலைவிலிருந்து பயணம் வருபவர்கள் நீண்ட நேரம் வண்டிக் குள் அடைபட்டுக் கிடந்த களைப்பைக் களையக் கீழே இறங்கிப் பிளாட்பாரத்தில் அடி அளந்து கொண்டிருக்கின்றனர்.

சாப்பாட்டு ஸ்டாலை நோக்கிப் பாயும் கூட்டம், குடி தண்ணீர்க் குழாயில் நிறைந்து வழியும் கூட்டம், புத்தகசாலையில் போட்டி யிடும் கூட்டம், பூக்காரனைச் சுற்றியுள்ள கூட்டம், பழக் கடையில் வட்டமிடும் கும்பல் எல்லாமே இன்னும் சற்று நேரத்தில், ஓட்ட மெடுக்கும் வண்டிக்குள் நெருக்கி அடித்துக் கொண்டு அடக்கமாகிவிடும்.

பிளாட்பாரத்தில் மக்கள் வழியின்று காட்சி, தண்ணீருக்குள் வட்டமடிக்கும் மீனினத்தை நினைப்பூட்டுகிறது.

மீனினத்துக்கும் குறிக்கோள் உண்டோ இல்லையோ. இந்த மனித இனம் மட்டும் ஒரு குறிக்கோளுடன்தான் இயங்குகிறது.

இதை நினைத்து ஏற்று பெருமூச்சு விடுகி றாள் சரோ. இப்போது அவள் கொண்டுள்ள பயணத்தின் குறிக்கோள்... குறிக்கோள்....

நெஞ்சிலே வலி பிறக்கிறது.

"அம்மா..."

"என்னக்கா, நெஞ்சு வலியா? சோடா வாங்கி வரட்டுமா?" — கீழே இறங்கப் போகி றாள் வசந்தி.

"வேண்டாம், வசந்தி... எனக்கு ஒன்று மில்லே. இன்னும் சற்று நேரம் அருகே இருந்துவிட்டுப் போ..."

இருந்தாற் போலிருந்து அவளுக்கு என்ன கவலை வந்துவிட்டதோ? "...அக்கா, நீ தனி யாகப் போகவேண்டுமா அக்கா?"

சரோ சிரித்துக் கொள்ளுகிறாள்.

வசந்தி, உன் கண்களில் படுவது இந்தத் தனிமைதான். துணை இருந்தும் தனிமை

யாகப் பொய்யான வாழ்விலே போலி நடை போடுகிறேனே, அந்தத் தவிமை உனக்கு எங்கே தெரியப் போகிறது? உலகத்தின் கண்களுக்கே திரையிட்டு நாடகமாடுகின் றேனே.... நானில்லே.... வசந்தி..... என்னை நாடகமாட வைப்பவர்... எல்லோராலும் எனக்கு இறைவன் என்று சொல்லிக் கொள் ளக்கூடியவர்.... நான் வழிபடும் கோவிலிலே தெய்வமில்லே வசந்தி.... தெய்வமே இல்லே..

''அக்கா, என் கேள்வி உன் பயத்தைக் கிளப்பி விட்டதா?''

''கிளம்பியது பயமில்லே வசந்தி; சிந்தனை தான்...'' என்று சொல்ல வந்ததைச் சொல் லாமலே மீண்டும் சிரிக்கிறாள்.

''ஏன் அக்கா சிரிக்கிறாய்?''

''இத்தனை பெரிய வண்டியிலே இருக்க இடமின்றி, நிற்க நிலையின்றி, நிறைந்து வழி யும் மக்கள் குவியலிலே துரும்பாக ஒட்டிக் கொண்டிருக்கும் என்னைத் தனியாகப் பிரித் தெடுக்க முயலுகிறாயே, அதை நினைந்துச் சிரிக்கிறேன்.''

வசந்தி என்னவோ சொல்லப் போகிறாள். அதைக் கவனிக்காதவள் போல் தூரத்தே பிளாட்பாரத்துப் படியின்மேலே ஏறிவரும் ஓர் உருவத்தை உற்று நோக்குகிறாள் சரோ.

நேரத்துக்கு நேரம் பார்வை விழிப்படை கிறது. அவளது மனத்துக்குள் ஏதோ ஒரு வகைப் பரபரப்பு. பார்வையைப் பின்னும் சற்றுக் கூர்மையாக்குகிறாள்.

அவள் பார்வைக்குள் சிக்கிய பிரயாணி வேறெங்கும் போகாமல் நேராக அவள் இருந்த வண்டியை நோக்கியே விரைந்து வருகிறாள்.

வந்தவள் சட்டென்று வண்டியில் ஏறாமல் வெளிக் கதவில் எதை உற்று நோக்குகிறாள்? ஓ!.... பதிவு செய்துள்ள வண்டியா?... சரி! சரி! அவள் நிச்சயம் இந்த வண்டிக்குள் வந்துதானேயாக வேண்டும்?

வண்டியிலும் ஏறி விடுகிறாள். நம்பரை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டு வந்தவள், சரோ இருந்த பகுதிக்கே வந்து விடுகிறாள்.

சன்னலுக்கருகாக அமர்ந்திருந்த சரோ வுக்கு எதிராக வந்து நின்றவள் ''இந்தாப்பா, போர்ட்டர்! சாமான்களை இப்படிக் கொண்டு வா...'' என்று ஜன்னல் வழியே போர்ட்ட ருக்குக் குரல் கொடுத்துவிட்டுத் தன் நம்ப ருக்கு நேராக உள்ள இடத்தைத் தனதென உறுதிப்படுத்திக் கொள்வதைப் போல, கையிலே தொங்கிய தோல் பையை அந்த இடத்திலே வைக்கிறாள்.

திருச்சியையே விலைக்கு வாங்கிச் செல்வது போல் எத்தனை சாமான்கள்! வண்ண வண்ணக் கலரிலே தோல் பெட்டிகள், தொங்கு பைகள், கூடைகள், பிளாஸ்க்கு... இன்னும் எத்தனை எத்தனையோ சாமான்கள்.. வாங்கி வாங்கிப் பெஞ்சுக்கடியிலும், பெஞ் சுக்கு மேலாக உள்ள படுப்பதற்கான பலகை யிலுமாக நிறைக்கிறாள்.

அம்மம்மா! ஒரு டிக்கட்டிலே இத்தனை 'லக்கேஜா?'...

வசந்தி வந்தவளுக்கு உதவி செய்ய எண்ணிப் பெஞ்சுக்கடியில் குனிகிறாள். தன் அக்காவின் சாமான்களைச் சற்று நெருக்கமாக வைத்துவிட்டு, இடவசதி செய்து கொடுக்க எண்ணிக் குனிந்தவள், திடுக்கிட்டவள் போல, ''அக்கா, உன் பெட்டி எங்கே?'' என்று பதறுகிறாள்.

சரோவின் நெஞ்சு திடுக்குறவில்லே. வேண்டுமென்றே பெட்டியை விட்டு வந்த வள் அவள்தானே? தனக்காகப் படபடக்கும் தங்கைக்காகச் சற்றுப் பரபரப்புக் காட்ட வேண்டியதுதானே?

''பெட்டியை நிச்சயமாக எடுத்து வந் தோமா அல்லது...''

''டாக்ஸியிலேயே விட்டு விட்டீர்களா?'' என்று பக்கத்துப் பிரயாணி அனுதாபம் காட்டுகிறார்.


''டாக்ஸியின் நம்பரைக் குறித்து வைத் திருக்கிறீர்களா?'' என்று கேள்வி பிறப் பிக்கிறார் மற்றொருவர்.

வண்டிக்குள்ளிருந்த பலரது பார்வையும் கேள்வியும் சகோதரிகள் புறம் திரும்பு கின்றன. வீணாகப் பிறரது அனுதாபத்துக்கு ஆளாக்கிவிட்டாளே என்று தங்கையின்மீது கோபமே வருகிறது சரோவுக்கு.

தன் கைக்கடிகாரத்தை உற்று நோக்கு கிறாள் வசந்தி.

''வீட்டுக்குப் போய்த் திரும்பி வருவ தென்றால் நேரமில்லேயே அக்கா... ஒன்று செய்யட்டுமா? நம் பக்கத்து வீட்டுக்குப் போன் செய்து அப்பாவை எடுத்து வரச் சொல்லுகிறேனே...'' என்றவள் படபடத்து இறங்கப் போகிறாள்.

''வேண்டாம் வசந்தி! இருக்கும் நேரமோ பத்து நிமிஷம். உன் தகவல் கிடைத்து அப்பா வந்து சேருவதென்றால் முடிகிற காரியமா? யாராவது வருகிறவர்களிடம் கொடுத்தனுப்பினால் போச்சு... இருக்கிற சில நிமிஷங்கள் என்னுடன் இருந்துவிட்டுப் போ'' என்று தடுக்கிறாள் சரோ.



வண்டிக்குள் திரும்பப் போனவள், "அக்கா, அக்கா... அங்கே பாரேன்" என்று துள்ளுகிறாள்.

வயதையும், இருக்கும் இடத்தையும் மறந்து, வசந்தி அப்படிக் கத்தியது வெறுப்பாக இருந்திருக்க வேண்டும் சரோவுக்கு.

சட்டென எழுந்து போகிறாள்.

"என்ன வசந்தி? இப்படித் துள்ளிக் குதிக்கும்படியாய் என்ன நடந்து விட்டது?" என்று கேட்டுக் கொண்டே வெளியே இறங்கக்கூடிய இடத்துக்கு வந்து விட்டபோது, அவளை திடுக்கிடும்படியான நிலையிலே, அவள் அப்பா அவள் விட்டு வந்த பெட்டியோடு பரபரத்து வந்து கொண்டிருக்கிறார்.

"என்னப்பா இது... எப்பொழுதுமே உங்களுக்குச் சிரமத்தையே தந்து கொண்டிருக்கிறேனே, அப்பா!" என்றவள் பெட்டியை வாங்கிக் கொண்டு அவர் முகத்தையே பார்க்காது தலையைக் குனிந்து கொள்கிறாள்.

"வெளியே போயிருந்தவள் வீட்டுக்கு வருவதற்குள் அக்காவும் தங்கையுமாகப் புறப்பட்டு வந்த இலட்சணம் தெரிகிறதே... பிரயாணத்துக்கு எது தேவையோ, அதைக் கூட எடுத்து வர முடியாத என்ன நிதானமோ?"

வேண்டுமென்றேதான் எடுத்து வரவில்லை என்று சொல்ல நினைத்ததைச் சொல்லாமலே விழுங்கிக் கொள்கிறாள் சரோ.

"வசந்தி! கீழே இறங்கி வா... வண்டி புறப்படப் போகிறது. சரோ போய் வருகிறாயாம்மா..."

பெரியவர் குரலிலே வந்தபோதிருந்த சூடு தணிந்து பாசத்தின் தழதழப்பு பொங்கி வருகிறது.

"ஆகட்டும் அப்பா.... நான்....நான் சௌகரியமாகப் போய் வருகிறேன்."

"அக்கா, போனதும் கடிதம் எழுதுகிறாயா?"

வழியனுப்ப வந்திருப்பவர்கள் வண்டிக்குள்ளிருக்கும் பிரயாணியிடம் வழக்கமாகக் கூறிக் கொள்ளும் கடைசி வாசகத்தைச் சொல்லி முடிக்கவும் வண்டி புறப்படவும் சரியாக இருக்கிறது.

எவர் எவர் எந்தெந்தக் குறிக்கோளுடன் புறப்பட்டிருந்தாலும் சரி, வண்டி ஒரே குறிக்கோளுடன் தனது பிரயாணத்தைத் தொடங்குகிறது. சரோ தன் இருப்பிடத்துக்கு வந்து அமர்ந்து கொள்கிறாள்.

இப்போது சாமான்களை யெல்லாம் நிதானமாக அடுக்கி முடித்த பின், எதிர்ப் பெஞ்சுப் பிரயாணி சரோவை ஒரு முறை ஏறிட்டுப் பார்க்கிறாள்.

"நீ...நீ...நீங்கள்..."

"நான் சரோஜாதான்... நீ சாவித்திரி தானே...?"

"ஒரு திருத்தம். சாவித்திரி ராமநாதன். நீ மிஸ் சரோஜாவா? இல்லே, மிஸஸ்..."

"மிஸஸ்ஸேதான். சாவித்திரி, நெடுநாளைய இடைவெளிக்கப்பால் உன்னை இங்கே சந்திக்க முடியும் என்று எதிர்பார்க்கவில்லை."

"நான்கூட நினைத்துக் கொள்வதுண்டு, நம்மோடு படித்தவர்கள், நம்மோடு விளையாடியவர்கள்.... சரோ உன்னைப் பார்க்க எனக்கு எத்தனை சந்தோஷமாக இருக்கிறது, தெரியுமா?"

ஆனந்தத்தில் சரோவின் கைகளை இறுகப் பற்றிக் கொள்கிறாள் சாவித்திரி.

அந்தப் பிடிக்குள்தான் எத்தனை இறுக்கம்!

இருவரும் அந்த நேரத்தில் தங்களது அன்றைய நிலையை மறந்து பத்து வருஷங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் குழந்தையாக மாறிக் குதூகலிக்கின்றனர்.

"சரோ, நாம் இறுதி வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது என் அப்பாவுக்கு மாற்றல் கிடைத்தது. அதனால் நான் படிப்பைத் தொடர்ந்து படிக்காமல் நிறுத்தி விட்டேன். நீ என்ன செய்தாய்?"

"இறுதியைப் படித்து முடித்தேன்."

"மேலே?"

"டீச்சர் டிரெயினிங் எடுத்தேன், வேலை பார்க்கத் தொடங்கினேன் என்பதையும் சொல்ல வேண்டாமல்லவா?"

"தொடங்கிய வேலை இன்னும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறதோ? அதிருக்கட்டும்.. நீ யாரை மணந்து கொண்டாய்? உன் கணவர் பேரென்ன?"

"என்னைப்போல் ஓர் ஆசிரியரை."

"காதல் கல்யாணமாக்கும்?" என்று கேட்டுவிட்டுக் கலகலத்துச் சிரிக்கிறாள் சாவித்திரி. "காதல் கல்யாணம் செய்துகொண்ட உன் வாழ்க்கை மிகவும் இனிமை நிறைந்ததாகத்தான் இருக்கும்!"

பேச்சை மாற்ற எண்ணிய சரோ, "என்னைப் பற்றிய கேள்விக்கு இதுவரை நான் பதில் சொன்னேன். இப்பொழுது உன்னைப் பற்றிக் கேட்கப் போகிறேன்" என்கிறாள்.

"அடி அம்மா, அந்தப் பயமுறுத்தலெல்லாம் வேண்டாம். உன்னைப் போல் மூடி மெழுகாமல், என்னைப் பற்றிச் சொல்வதோடு என் கணவரைப் பற்றியும் கூறுகிறேன்,



கேன். அப்பாவுக்கு மாற்றலாகி, வெளியூர் போனதும் படிப்பு பாதியில் நின்று விட்டது. படிக்கிற வேலை இல்லைன்னு வேறு ஏதாவது வேலை வாங்கி வைக்க வேண்டுமே என்று நினைத்திருக்கிறார் அப்பா. எனவே நல்ல பையனாகப் பார்த்துத் தம் மருமகனாக்கிக் கொண்டு அவரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை என் தலையில் சுமத்தி விட்டார். அன்று முதல் இன்று வரையில் அதுதான் என் உத்தியோகம். போதுமா... அது சரி, உன் வீட்டுக்காரர் பெயரென்ன? அவர் எப்படி இருப்பார்? என் கணவர் கண்ணுக்கு அழகாக – மிக அழகாக இருப்பார்...''

கண் முன்னே கணவரின் அழகை நிறுத்தி அதன் லயிப்பிலே அரைக் கணம் தன்னை மறந்து விடுகிறாள் சாவித்திரி.

தன் கணவரைப் பற்றி மீண்டும் ஏதாவது கேட்டுவிடப் போகிறாளோ என்று பயந்து கொண்டு சரோ கேட்கிறாள்: ''உன் கணவருக்கு என்ன வேலை?''

''என்னுடையவருக்குத்தானே?''

'என்னுடையவர்' என்ற அழுத்தத்திலேயே அன்பின் ரசமெல்லாம் சொட்டச் சொட்டக் கேட்கிறாள் அவள்.

''அவர் பார்க்காத வேலையே இல்லை. பெருமைக்காகச் சொல்லவில்லை சரோ..... படிக்கிற நாளிலே படிப்பை அலட்சியம் செய்தார். வேலைக்காக அலைந்த நாளிலே படிப்பு இவரை அலட்சியப்படுத்தியது... சலித்தாரா மன்னன்? இல்லை, தன்னைப் பற்றித் தாழ்வாகத்தான் நினைத்தாரா? சரோ! அவருக்குத் தன்னுடைய அழகிலே எத்தனை பெருமை, தெரியுமா? 'நான் தெருவிலே நடந்தால் என்னை எத்தனை பெண்கள் திரும்பித் திரும்பிப் பார்க்கிறார்கள், தெரியுமா?' என்று என்னிடமே வந்து சொல்லுவார் என்றால் எத்தனை வெகுளி பாரேன்!'' நெஞ்சிலே இன்பம் பொங்கப் பொங்கச் சாவித்திரி பெருமைகளைப் பேசிக் கொண்டேயிருக்கிறாள்.

''பெண்கள் பேச ஆரம்பித்தால் சூழ்நிலையைக்கூட மறந்துவிடுவார்கள் போலும்'' என்று இரண்டொரு பிரயாணிகள் தனக்குள் முணுமுணுத்துக் கொள்கின்றனர்.

உலகம் புரண்டாலும் நமக்கென்ன வந்தது என்பது போல, வண்டி இருளைக் கிழித்துக் கொண்டு வேகமாகத் தன் காரியமே கருத்தாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

திருச்சியைவிட்டுப் புறப்படும் போதிருந்த ஆரவாரங்கள் அடங்கி, வண்டிக்குள் அமைதி நிலவுகிறது.

அவர்கள் இருந்த பெட்டி 'ஸ்லீப்பர் கோச்' ஆனதினால் பிரயாணிகள் எவ்வித சிரமமுமின்றி, அவரவர்களுக்கென நியமித்த பெஞ்சியிலே படுக்கை போட ஆரம்பித்து விடுகிறார்கள்.

''சாவித்திரி! உனக்கு அலுப்பாக இருந்தால் நீ படுத்துக் கொள்.''

''ஏன், உனக்கு உறக்கம் வந்துவிட்டதா? அல்லது அவரது நினைவு...'' என்று கேட்டுவிட்டுக் குறும்பாகக் கன்னத்தில் தட்டுகிறாள்.

''குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறதாக்கும்...'' என்று கேட்டுவிட்டுத் தன் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறாள் சரோ. அங்கே குற்றமுமில்லை, குறும்புமில்லை.

பிளாஸ்கிலிருந்து வெந்நீரில் ஹார்லிக்ஸைக் கரைத்து பிளாஸ்டிக் கோப்பைகள் இரண்டில் நிறைத்து ஒன்றைச் சரோவிடம் நீட்டுகிறாள்.

''தயவுசெய்து எனக்கு இத்தனை வேண்டாம். நீ சொல்வதற்காகச் சிறிது எடுத்துக் கொள்ளுகிறேன்.''

''வெகு நாகரிகமாகப் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறாயே... நான் குழந்தையாக இருந்தபோது, உன்னைப் போலப் பேசத் தெரியாத காரணத்தால் எத்தனை நாட்கள் உன் வீட்டில் சாப்பிட்டிருக்கிறேன். நாம் இருவரும் ஒரே தட்டில்... அதையெல்லாம் நினைத்துப் பார்த்தால் ஒரு நிறைவான இன்பம் பொங்குகிறதில்லையா?''

பேசிக்கொண்டே சரோவை முழுவதையும் குடிக்க வைத்து விடுகிறாள்.

''ஆமாம், நீ சாப்பிட்டுவிட்டாயோ?... இத்தனை நேரம் அதைக் கேட்க மறந்து விட்டேனே...பையில் பிஸ்கட்டு இருக்கிறது. எடுத்துத் தரட்டுமா?'' என்று சாவித்திரி பையைத் தடவுகிறாள்.

பிஸ்கட்டைப் பற்றிப் பேச்சு வந்ததும் அதைத் தொடர்ந்து கேட்கிறாள் சரோ: ''உனக்குக் குழந்தைகள் இருக்கிறார்களா, சாவித்திரி?''

''ஓ...இருக்கிறார்களே!'' என்றதும், ''எத்தனை?'' என்று கேட்கிறாள் சரோ.

''நானும் என் கணவரும் இரு குழந்தைகள். வேறு குழந்தை எதற்கு?'' என்று கேட்டுவிட்டு, ஏதோ உயரிய ஹாஸ்யத்தை உதிர்த்துக் கொட்டியதுபோல் சாவித்திரி சிரித்துக் கொள்ளுகிறாள்.

''ஆமாம், உனக்கு?''

''எனக்கு அந்தப் பாக்கியம் இல்லை.''

தனக்குக் குழந்தையில்லை என்பதைச் சொல்வதோடு தன் கணவர் குழந்தை உள்ளம் படைத்தவர் அல்லர் என்பதையும் சேர்த்துத்தான் சரோ அப்படிக் கூறுகிறாள் என்பது சாவித்திரிக்கு எங்கே புரியப் போகிறது ?

ஹார்லிக்ஸ், பிளாஸ்க்கு அடங்கிய கூடையை அடுக்கி வைத்து விட்டு, கையிலே ஆரஞ்சு ஒன்றை எடுத்துத் தோல் உரித்தவாறே மேலும் பேசத் தொடங்குகிறாள், சாவித்திரி.

''சரோ! என் கணவர் குழந்தையடி.... ஆமாம்.... அவர் பச்சைக் குழந்தைதான். அவர் என்னென்னவோ வேலைகள் பார்த்து எங்கெங்கோ அலைந்தார் என்று சொன்னேனல்லவா ? அவர் எங்கே அலைந்தாலும் சரி, நான் அவரோடு இருக்க வேண்டும். 'நீ எனக்கு ஓர் ஆதார சக்தி, என்னை விட்டுப் பிரிந்து போகாதே' என்பார். நான் திருச்சிக்கு வந்து இரண்டு வாரங்கள்தான் ஆகிறது. அதற்குள் தினம் ஒரு கடிதம். நான் என்னென்னவோ சால்ஜாப்புகள் சொல்லிப் பார்த்தேன். என் பிறந்த வீட்டில் நான் இன்னும் சில தினங்கள் தங்க வேண்டுமென்ற ஆசை. ஆனால் அவருடைய கடிதம்....'' தனது கைப் பைக்குள் வைத்



ஒவ்வொரு வீட்டிற்கும்
ஒரு 'எவரெடி'
டார்ச் அவசியம்!
EVEREADY
EVEREADY
எவரெடி
UNION CARBIDE

இருந்த கடிதம் ஒன்றைக் கொடுத்துப் 'படித்துப் பார்க்கச் சொல்கிறாள்.

''என்னடிது. உன் கணவர் கடிதத்தை...''

''நமக்குள் என்னடி வித்தியாசம்...? உன்னவரும் உனக்கும் இது மாதிரி எத்தனையோ முறை எழுதியிருக்கப் போகிறார்.. போகட்டும்.... உனக்கு என்னவோ போல் இருந்தால் நான் குறிப்பிடும் இந்தப் பக்கத்தை மட்டும் படியேன்.... மனத்துக்குள் தான்.... ஆரம்பப் பள்ளியில் அரிச்சுவடி படிப்பது போல் உரக்கப் படித்து விடாதே.''

சாவித்திரியின் சொல்லை மறுக்க முடியாது அவள் குறிப்பிட்ட வரிக் கோடுகளில் பார்வையை ஓட விடுகிறாள்.

'...நாது கம்பெனி நல்லமுறையில் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் பதினைந்தே நாட்களில் அரங்கேற்றி விடத் தீர்மானித்திருக்கிறேன். புது நாடகம் எழுதி முடித்து விட்டேன். நமது வீட்டிலேயே 'ரிகர்சல்' வைத்துக் கொள்ளப் போகிறேன். ஒத்திகைக்காகப் பலரும் — குறிப்பாகப் பெண்களும் — வர வேண்டியிருக்கும். என்னைப் பற்றி உனக்கு நம்பிக்கை இருக்கலாம். ஆனால் ஊரார், பெண்பிள்ளை இல்லாத வீட்டிலே கூத்தடிக்கிறான் என்று சொல்வார்கள். நாலு பேர்கள் வாயிலே விழாதவாறு, உன் கணவன் பெயரைக் காப்பாற்றுவதற்காகவாவது, என் இல்லத்தரசியே, உடனே புறப்பட்டு வா.... என் வாழ்வின் ஆதார கருவியே, என்னைச் சமயத்தில் கைவிட்டு விடாதே....'

கடிதத்தை மடித்துச் சாவித்திரியிடம் கொடுக்கிறாள் சரோ. தான் பெற முடியாத பேறு ஒன்றைத் தன் தோழி பெற்றிருக்கும் இன்பத்தை, ''நீ அதிர்ஷ்டசாலி'' என்று ஒரே வார்த்தையில் வெளிப்படுத்துகிறாள்.

''திருமணமான எல்லாப் பெண்களுமே அதிர்ஷ்டசாலிகள்தான். ஏனென்றால், அவரவர் கணவரின் அன்பு அரிய பொக்கிஷமல்லவா மனைவிக்கு.......''

இல்லை என்ற உண்மையைச் சொல்வது உசிதமாகப் படாத காரணத்தால் சொல்லாமல் நிறுத்திக் கொள்கிறாள் சரோ. அதோடு, ''படுக்கலாமல்லவா ?'' என்று கேட்டுப் பேச்சுக்கும் முற்றுப்புள்ளி வைக்கிறாள்.

நித்திரைக்குப் போகிறவளை உபத்திரவம் செய்யக் கூடாதென்ற எண்ணத்தில் சாவித்திரியும் படுக்கப் போகிறாள்.

கம்பார்ட்மெண்டில் இலேசான நீலத் திரை விரித்தாற் போன்று இரவு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. மின்சார விசிறி சுழலும் சத்தத்தோடு ஒரு சிலரின் குறட்டை ஒலி ஆங்காங்கே.... எப்பொழுதாவது குழந்தைகளின் முனகல் குரல்கள்.

அன்பும் அமைதியும் அரவணைத்த வாழ்க்கையின் கனவு மயக்கத்தில் சாவித்திரியும் தூங்கிப் போயிருப்பாள்.

சரோவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. என்னென்னவோ எண்ணங்கள்..... எத்தனையோ சிந்தனைகள்.... அவை எழுப்பிய கூக்குரலிலே இமைகள் இரண்டும் இறுக மறுக்கின்றன.

சாவித்திரியைச் சந்தித்ததிலிருந்து, குழந்தைப் பருவ முக்குளிப்பிலே நினைத்திருந்தவளின் நினைவுகள் அதையடுத்து இளமைப் பருவ கனவுகளுக்குள் பாய்கின்றன.



''ஏது நம்ம கல்யாணிக்குத் திடீர்னு கல்யாணம் நடக்கப் போகிறதே ?''

''ஐம்பது பேருக்கு மேல் கல்யாண விருந்து நடைபெறக்கூடாதுன்னு தடை விதிக்கப்பட்டிருக்கிறதே. இதைவிடக் கல்யாணம் நடத்த நல்ல சந்தர்ப்பம் என்ன இருக்கிறது ?''

சரோ பள்ளிப் படிப்பை முடித்ததும் அதையடுத்து, ஆசிரியப் பயிற்சி வந்ததும் அதை முடித்து உத்தியோகப் படலம் தொடங்கியதும் சடசட வென நினைவுத் திரையில் தோன்றுகின்றன. சர்க்கார் பள்ளியை விடத் தனியார் பள்ளியில் சம்பளம் அதிகம் கிடைக்கும் என்ற ஆசையில்தான் அவள் 'தெய்வ நாயகம்' பள்ளிக்கு வேலை மாற்றிக் கொண்டாள். அங்கே அவள் அது வரை வாழ்ந்த அமைதிக்குத் திருப்பம் ஏற்படப் போகிறதென்பதைக் கண்டிருந்தால்...... ஒரு வேளை அந்த வேலையை ஒப்புக் கொண்டிருக்கவே மாட்டாள். விதி அவளை அங்கே ஒதுக்கியது. அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த பாஸ்கரனின் அன்பு அவளைத் துணை சேர்த்தபோது தெய்வீக உணர்வோடு ஏற்றுக் கொண்டாள். அவளாக விரும்பி ஏற்றுக் கொண்ட அந்தத் தெய்வீகம் பொய்யானது. போலியானது என்பது தெரிந்தபோது அவள் இதயம் துடித்த துடிப்பு அத்தனையும் கண்ணீராய்க் கரைந்தது.

தெய்வத்தைத் தெய்வீகமாய்க் காண முடியாத போது, பக்த மனம் பதறியது. இறைவனில்லா ஆலயத்தை வழிபடத் தெரியாத பக்தை ஆலயத்தை விட்டே வெளியேறி விட்டாள்.

தானாகத் தேடிக் கொண்ட வாழ்வுக்குத் தானாகவே முற்றுப்புள்ளி வைத்துக் கொள்ள நினைத்தவள் சரோஜா. ஆனால் முடியாமல் தவிப்பவளும் அவளே.

கணவன் மனைவி இருவரும் ஆசிரியர்களாக உத்தியோகம் பார்த்துப் போதுமான வரு



"ஏதோ இன்ன மகான் தயவிலே ரொம்ப நாட்களாகப் பிரிந்திருந்த குடும்பம் இன்னிக்கு ஒன்னு சேர்ந்திருக்கு"

வாய் வந்த போதும், பாஸ்கரன் வலியச் சென்று சில டியூஷன்களைத் தயார் செய்து கொண்டதன் உள் நோக்கம் சரோவுக்குப் புரியவில்லை. கணவனின் பணத்தாசையை வெறுத்தாள். பின்னர்தான் புரிய வந்தது, பாஸ்கரனின் ஆசை பணத்தின் மேல் அல்ல என்பது. அவர்களிடம் டியூஷனுக்காக வந்து கொண்டிருந்த பெண்கள் எல்லாருமே நல்லவர்கள் என்று சொல்வதற்கில்லை. பாஸ்கரன் விரித்த வலையில் சிக்கிய பெண்கள் — சிக்க விரும்பிய பெண்கள் இவர்கள்தான் அங்கே அதிகம் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வருகை ஊரார் கண்களுக்குத் தவறாகத் தோன்றாத வகையிலே தன் மனைவியின் உத்தியோகத்தைப் பயன்படுத்திக் கொண்டான். பெண் வாத்தியாரம்மாவிடம் டியூஷன் சொல்லிக் கொள்ளப் பெண்கள் வருவதை யாருமே தவறாகக் கருத முடியாதல்லவா? இப்படி ஓர் எண்ணம் அவனுக்கு.

இந்த நாடகத்துக்குத் திரை இழுத்து முடிவு கட்டி விட்டுப் பிறந்தகம் வந்திருப்பவளை மீண்டும் தன்னிடம் இழுத்துக் கொள்ளும் சக்தி — சாமர்த்தியம் பாஸ்கரனுக்கு இருக்கிறதே: மனைவியைப் பிரிந்து தன்னால் வாழ முடியாத நிலையை நெஞ்சுருக மாமனுக்கு எழுதிய கடிதத்தை மெய்யென நம்பிய தந்தையின் பிடிவாதத்துக்காகவே புறப்பட்டுப் போகிறாள். உண்மையைச் சொல்ல முடியாத நிலையில் — கொண்டவன் எத்தனை தான் கொடியவனாக இருந்தாலும் அந்த நினைவு தன் நெஞ்சோடு மடிய வேண்டுமென்ற பாரதப் பண்பிலே விளைந்த மூத்து மனம் தந்த தீர்ப்பிலே புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறாள். அப்பாவின் நிறைவுக்காகப் புறப்பட்டு வந்தவளுக்குத் தன்னுடைய தீர்வுக்காகத் திரும்பிவிடத் தெரியாமலா போய் விடும்? அந்த நோக்கத்தில் தானே பெட்டியை வீட்டிலே விட்டு வந்தாள். அந்த உண்மை அப்பாவுக்கு எங்கே புரியப் போகிறது?

நிசப்தமான இரவின் அமைதியைக் குலைத்துக்கொண்டு, பேரிரைச்சலுடன் மூர்க்கமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது வண்டி. வழி நடுவிலே நிச்சுடரைக் காட்டித் தனக்கு வரவேற்பளிக்கும் சின்னஞ் சிறிய நிலையங்களை, தூவென உதறித் தள்ளுவது போன்ற அலட்சிய பாவத்துடன் விரைந்து கொண்டிருக்கிறது. 'இரும்புதானே? அதற்கு ஏது இதயம்?' என்பதற்காக இடைப்பட்ட ஸ்டேஷன்கள் அலட்சியமாக இருந்து விடவில்லை. தூக்கம் விழிகளை இழுக்கின்றபோதும் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டாவது தங்களது கடமைகளைச் சரிவர நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர், சின்னச் சின்ன ஸ்டேஷன்களின் ஊழியர்கள். தன்னை நம்பியுள்ள குடும்பங்களின் வயிற்றில் அமுதளிக்கும் உத்தியோகமல்லவா?

வண்டி செங்கல்பட்டில் வந்து நின்றபோது சரோவைத் தட்டி எழுப்புகிறாள் சாவித்திரி.

இரவு வெகு நேரம் எண்ண அலைக்கழிப்பில் சிக்குண்ட சரோ சற்று முன்னர்தான் அசந்து போயிருக்கிறாள்.

"சரோ! சீக்கிரம் எழுந்து முகம் கழுவிக் கொள்...... காப்பி வாங்கி வைத்திருக்கிறேன்..... ஆமாம், இரவு முழுதும் விழித்துக் கொண்டிருந்தவளைப் போன்று என்ன தள்ளாட்டம்....? உன் நித்திரைக்குப் பங்கம் விளைவித்த கனவு யாரைப்பற்றிச் சொல்லடி?" என்று காதுக்குள் கிசுகிசுக்கிறாள் சாவித்திரி.

தளதளவெனத் தலை வாரி நெற்றியில் பளிச்சிடக் குங்குமமிட்டு மங்களகரமாய்க் காட்சி தந்த அவள் முன் முகம் அலம்பாது நின்ற தன் நிலை நாணத்தைத் தந்தது. பேஸ்டும் பிரஷ்ஷும் டவலுமாகக் குழாயடிக்கு விரைகிறாள் சரோ.

வண்டி எழும்பூர் நிலையத்தில் வந்து நிற்கிறது.

இருவரது கணவன்மாரும் நிலையத்துக்கு வந்திருக்கின்றனர்.

"வந்து விட்டாயா சரோ?" பாஸ்கரனின் கேள்வி.

"வந்து விட்டாயா சாவித்திரி?" ராமநாதனின் கனிவு நிறைந்த அழைப்பு.

தத்தம் கணவன்மாரின் ஆவல் பெண்கள் இருவருக்கும் தனித்தனியே புரிகிறது.

மனைவியைத் தனது துரோகத்துக்குக் கருவியாய்ப் பயன்படுத்தும் நோக்கத்துடன் அழைத்துப் போக வந்திருக்கிறான் பாஸ்கரன்.

மனைவியைத் தனக்கு வேலியாக்கிக் கொண்டு பணியைத் தொடரும் நோக்கத்துடன் அழைத்துப் போக வந்திருக்கிறான் ராமநாதன்.

இருவருக்கும் முறையே அறிமுகம் முடிந்த பின் இருவரும் தத்தம் மனைவியோடு வீட்டுக்குப் புறப்படுகின்றனர்.

இருவருக்கும் பாதை ஒன்றுதான். ஆனால் கொள்கைதான் வேறு!

பிரச்னை : பெயின்ட் வாங்குவதில் ஏமாற்றத்தைத் தவிர்க்க மார்க்கம் என்ன ?

விடை : எப்பொழுதும் ஜென்ஸன் & நிகல்ஸன் என்று குறிப்பிட்டுக் கேட்டு வாங்குங்கள்.

ஜென்ஸன் & நிகல்ஸன்

பெயின்டுகளுள் மிக நம்பகமானது !

மார்க்கெட்டில் நீங்கள் பெயின்ட் வாங்க விரும்பினால் சகல அம்சங்களிலும் உயர்தரமாக இருப்பதே முக்கியம் என்பதை மறவாதீர்கள். இக்காரணத்தினால்தான் ஜென்ஸன் & நிகல்ஸன் பெயின்டுகள் தரத்தில் நல்ல சிறந்து விளங்கும் வகையில் தயாரிக்கப்படுகின்றன. தரங்குன்றாமலிருக்கிறதா என்று பரிசோதிக்கப்பட்ட பிறகே விற்பனை செய்யப்படுகின்றன. எனவே வெறும் ஜாலங்களைத் தவிர்த்து பெயின்டுகளுள் மிக நம்பகமான புகழ் உடைய ஜென்ஸன் & நிகல்ஸன் பெயின்டுகளையே கேட்டு வாங்குங்கள்.

இதுதான்
ஜென்ஸன்&நிகல்ஸனின்


ரோபியாஸெம்

வாட்டர்புரூப் சூபர் சிமெண்டு பெயிண்டு

வெளிப்புறப் பாதுகாப்புக்கு மிக சேர்த்தியான பெயின்டு. உஷ்ணப் பிரதேசத்திற்காக விசேஷமாகத் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டது. காங்கிரீட், ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு தகடுகளின் மேலிலும் கரைப் பொருள் தகடுகளின் மேலிலும் பூச உகந்தது.



ஜென்ஸன் & நிகல்ஸன் (இந்தியா) லிமிடெட்
7, அரண்மனைக்காரத் தெரு, சென்னை
7/219, அவனாசி ரோடு, கோயமுத்தூர்



அமிர்தாஞ்சனம்

தடவி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

உடலின் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் தலைவலி, தசைவலி, சுளுக்கு மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரணமளிக்கும். மற்றும் மார்ப்புச்சளி, ஜலதோஷம் போன்றவைக்கும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம் ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக் கணக்கில் வரும்.

அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டுவரும் கைகண்ட நிவாரணி.

பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி



அமிர்தாஞ்சன் லிமிடெட், மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி

WT/AM/2616

புகழ் பெற்ற போலிகள்



அவதார புருஷன்

1648ம் ஆண்டில் ஒரு நாள் ரோஷ்ஹஷானா என்று குறிப்பிடப்படும் யூதர்களின் புத்தாண்டு தினம். துருக்கி நாட்டிலுள்ள இஸ்மீர் என்னும் இடத்திலுள்ள பெரிய யூதர்கள் கோவிலில் ஜபம் செய்ய அநேகர் கூடியிருந்தார்கள். அவர்கள் மத்தியிலிருந்து ஓர் இருபத்திரண்டு வயது இளைஞன் தலை நிமிர்ந்து எழுந்தான். நேராக நடந்து போய்க் குருமார்கள் நின்று பேசுமிடத்துக்கு வந்து நின்று கம்பீரமாகச் சுற்றிப் பார்த்தான்.

ஜபத்துக்காகக் கூடியிருந்த அனைவரும் திடுக்கிட்டுச் சிலையானார்கள். ஒரே நிசப்தம்; அமைதி. அந்த அமைதியைப் பயன்படுத்திக் கொண்டு அந்த இளைஞன் ஆண்டவனின் முழு நாமத்தையும் உரக்க உச்சரித்தான். அப்படி உச்சரிக்கும் உரிமை ஜெருசேலத்திலுள்ள உயர்குருமார்களுக்குத்தான் உண்டு. மேசையா தான் தம் அந்திம காலத்தில் அப்படி உச்சரித்தார் !

அந்த இளைஞன் அதோடு நிற்கவில்லை. தான் மேசையாவின் மறு அவதாரம் என்றும் அறிவித்தான்.

சபட்டாய் ஸேவி என்ற அந்த இளைஞனின் கூற்றை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியாமல் பொது மக்கள் விழித்தார்கள். அவன் நிஜமாகவே மேசையாவின் மறு அவதாரம்தானா ? அல்லது சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி ஊரை ஏமாற்றுகிறானா என்று ஜனங்களால் நிர்ணயிக்க முடியவில்லை.

உயர்குருமார்கள் கூடி ஆலோசித்தார்கள். அவர்கள் சபட்டாய் ஸேவியின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் சும்மாயிருக்கா விட்டால் அவனைச் சமூகத்திலிருந்து பகிஷ்கரித்துவிட நேரிடும் என்று பயமுறுத்தினார்கள். அவன் அஞ்சவில்லை. தன்னுடன் துணை சேர்ந்த சில அடியார்களுடன் சொந்த ஊரை விட்டுக் கிளம்பினான்.

ஒரு சாதாரண கோழி வியாபாரியின் மூத்த மகனாக 1626ம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்த சபட்டாய் ஸேவியின் பிறந்த தினத்தை மேசையாவின் பிறந்த நாளோடு சிலர் இணைத்து விட்டார்கள். ஸேவி சிறு வயதிலிருந்தே கூர்மையான புத்திசாலியாக இருந்தான். மத சம்பந்தமான அத்தனை நூல்களையும் பதினைந்து வயதுக்குள்ளாகவே நன்கு கற்று உணர்ந்தான். உலகத்தை உய்விக்க மேசையா மீண்டும் ஒரு நாள் தோன்றுவார் என்ற 'கபாலா' வேத தத்துவத்துக்கு அவன் உயிர் கொடுக்க முனைந்தான். அவன் தன் நேரத்தை யெல்லாம் தனிமையில் தியானம் செய்வதிலும், உடலை வருத்தி நோன்பு இருப்பதிலும் கழித்தான். இருபது வயதுக்குள்ளாக அவனுக்கு இரண்டு தடவைகள் திருமணம் நடந்தும் அந்த இருவரும் இந்த ஜட சந்நியாசியுடன் வாழ முடியாது என்று விவாகரத்துக் கோரி விடுதலை பெற்றுக் கொண்டார்கள்.

அன்றைய ஐரோப்பிய நாடுகளில் நிலவியுள்ள கொந்தளிப்பான நிலை பொதுஜனங்களிடையே மதப் பற்றில் ஒரு தீவிரத்தைத் தோற்றுவித்திருந்தது. உலகை ரட்சிக்க மேசையா தோன்றியாக வேண்டும் என்று அவர்கள் நம்ப ஆரம்பித்தார்கள். அந்தச் சூழ்நிலையைச் சபட்டாய் ஸேவி நன்கு பயன்படுத்திக் கொண்டான்.

ஸேவி தன் தொண்டர்களுடன் யாத்திரை கிளம்பினான். அடிக்கடி அவன் கையாண்ட சில மாயாஜால வித்தைகள் மக்களுக்கு அவனிடம் தீவிர நம்பிக்கையைத் தோற்றுவித்தன. கான்ஸ்டாண்டிநோபிள் நகரில் அவன் தன் கையில் ஒரு பெரிய மீனைக் துணியில் குழந்தை போல் சுற்றி எடுத்துக் கொண்டு வீதிகள் சூழப் பவனி வந்தான். அந்தச் சுற்றப்பட்ட மீன், கர்தான் [illegible] இழந்த புண்ணிய [illegible] ஜெருசேலத்தைக் குறிக்கிறதென்றும் அதை விடுவிப்பதே தன் முதல் [illegible] என்றும் சொன்னான். அந்த நகரில் உள்ள ஸேவி பக்தன் ஒருவன் சொந்தத்தில் சில போலி தஸ்தாவேஜுகளை, ஸேவியின் புகழ் பாடும் வகையில் தயாரித்துக் குகைகளில் அகப்பட்டதாக எடுத்து வந்தான். அந்தத் தஸ்தாவேஜுகளில் ஸேவியே மேசையாவின் மறு அவதாரம் என்று கண்டிருந்தது. ஸேவிக்கு இது தன் அபிமானியின் கற்பனைத் திறன் என்று

தெரியும். தனக்குச் சாதகமாக இது அமைந்து விட்டதால் அவன் இந்தப் பொய்யை அனுமதிக்கும் வகையில் வாளாயிருந்து விட்டான். ரபேல் ஜோசப் என்னும் செல்வந்தன் ஒருவன் ஸேவியின் சீடனாக வந்து சேர்ந்து தன் சொத்துக்கள் அனைத்தையும் தன் குருவின் கையில் ஒப்படைத்தான். நதான் கஸாட்டி என்னும் ஓர் அறிஞனும் ஸேவியிடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான். கஸாட்டி ஒரு சிறந்த எழுத்தாளன். வீராவேசப் பேச்சாளன். ஸேவிதான் மேசையா என்ற விதத்தில் கஸாட்டி ஆயிரக்கணக்கான அறிக்கைகளைத் தயாரித்து நாடு முழுவதும் பரப்பினான். ஸேவியின் பக்தர் படை ஒவ்வொரு நாளும் பெருகத் தொடங்கியது.

1665ம் ஆண்டு வேனிற் காலத்தில் கஸாட்டி 'மேசையாவின் மறு அவதாரமான சபட்டாய் ஸேவி விரைவிலேயே இஸ்மீர் நகரத்துக்கு வருவார். கல்தான் தலையிலுள்ள கிரீடம் அவர் தலைக்கு மாறும். இந்த ராஜ்யமும் மேசையாவின் ராஜ்யமாகும்' என்ற அறிக்கையை ஆயிரக்கணக்கில் எழுதித் தயாரித்துப் பல நாடுகளுக்கும் அனுப்பி வைத்தான்.

எந்த நகரம் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு அவனை நம்பாமல் வெளியேற்றியதோ, அதே நகரமான இஸ்மீருக்குள் 1665ம் ஆண்டு டிசம்பர் பதினான்காம் தேதியன்று வெகு ஆடம்பரமாகப் பல ஆயிரக்கணக்கான சீடர்கள் புடைசூழ மீண்டும் ஸேவி நுழைந்தான். 'மேசையா வந்து விட்டார்' என்ற கோஷம் வானைப் பிளந்தது.

ஸேவி பெரிய யூதர்களின் கோவிலில் குருமார்கள் நின்று பேசும் மேடையை நோக்கிக் கம்பீரமாக நடந்து, ''நான்தான் மேசையா! உங்களை ரட்சிக்க நான் மீண்டும் வந்து விட்டேன்'' என்று அறிவித்தான். உடனே மக்கள் நின்ற பகுதியிலிருந்து ''இஸ்மீர் மன்னன் வாழ்க!'' என்ற கோஷம் எழுந்தது.

தொடர்ந்து இரண்டு வார காலம் ஸேவி அங்கு ராஜ்ய பாரமே நடத்தினான். கோவில்களில் உபவாச தினங்களெல்லாம் விருந்து தினங்களாக மாறின. ஸேவியைப் பின்பற்றுவோர்களின் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது.

மேசையாவின் ஆண்டாகிய 1666 ஐக் கொண்டாடும் வகையில் அப்போது கல்தானைப் போரில் முறியடித்துப் புனித பூமியாகிய ஜெருசெலத்துக்கு விடுதலையளிக்கப் போவதாக வாக்களித்தான். அதற்கு முன்பே புனித பூமியை இருபத்தியாறு பங்குகளாகக் கூறு போட்டுத் தன் சிஷ்யர்களில் முக்கியமானவர்களுக்கு விநியோகித்தான்.

போர் முழக்கத்துடன் சபட்டாய் ஸேவி தன்னுடைய சிறு மரக்கலத்தில் கான்ஸ்டான்டி நோபிள் துறைமுகத்தை அடைந்த போது எந்தவித சிரமமுமில்லாமல் கல்தானின் படைவீரர்கள் ஸேவியைக் கைது செய்தனர். ஆனால் அதைக்கூட அவன் தனக்குச் சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டான்.

புதிய மேசையாவின் சிஷ்யர்களின் மனம் இன்னும் பக்குவம் அடையாத நிலையில் இருப்பதால்தான் அவர் தம்மை ஒரு கைதியாக்கிக் காட்டிக் கொண்டார் என்ற புரளியைக் கஸாட்டி கிளப்பி வைத்தான். மக்கள் அதை நம்பினார்கள். அவ்வளவுதான்! அவர்கள் மேலும் தியாகங்கள் செய்ய முனைந்தார்கள். அவர்கள் வழங்கிய தாராளக் காணிக்கையைக் கொண்டு கல்தான் சிறைக்குள்ளும் ஸேவி பெரிய பிரபு போல் வாழ்ந்தான்! ஓர் அரச சபையையே அங்கு அவன் நடத்தினான். வெளிநாட்டுச் சீடர்கள் கல்தானின் அனுமதி பெற்றுச் சிறைக்குள் ஸேவியைக் கண்டு வணங்கினார்.

அப்படி வந்தவர்களில் கோஹன் என்பவன் ஒருவன். அவன் தன்னையே ஒரு தீர்க்கதரிசி என்று நினைத்துக் கொண்டிருப்பவன். அவனுடைய சொந்த தீர்க்கதரிசனத்தின்படி மேசையா மீண்டும் அவதரிக்க இன்னும் சில காலம் ஆகும் என்று நம்பினான். ஸேவியைப் பார்த்த பிறகு இந்த நம்பிக்கை அவனிடம் பலப்பட்டது. ஸேவி ஒரு போலி என்று அவன் உள் மனம் சொல்லியது. மூன்று நாட்கள் ஸேவியுடன் பல தத்துவங்களை விவாதித்த பிறகு அவன் 'நிச்சயமாக இந்த ஆசாமி ஒரு போலி' என்ற முடிவுக்கு வந்தான். அந்த ஆத்திரத்தில் தானே மதம் மாறி ஒரு முஸ்லீமாகத் திட்டமிட்டான். அதைச் சாக்காகக் கொண்டு கல்தானை நேரில் சந்தித்துச் சிறையில் இருக்கும் ஸேவி வேடதாரி என்று அறிவித்தான்.


இதுவரை, 'ஸேவி உண்மையிலேயே ஓர் அவதார புருஷனாக இருந்து அவனுக்குத் தீங்கு விளைவிப்பதன் மூலம் மக்கள் கிளர்ச்சிக்கு இடம் கொடுத்து விடக் கூடாதே' என்று நிதானத்தைக் கையாண்டிருந்த கல்தான், கோஹனின் ஆதாரபூர்வமான வாதங்களைக் கேட்டு ஆத்திரமடைந்தான். ஸேவியை உடனே மரண தண்டனைக்குள்ளாக்க வேண்டும் என்ற உத்தரவையும் பிறப்பித்து விட்டான்.

ஆனால் கல்தானின் வைத்தியராக இருந்த முஸ்லிம் முன்பு ஒரு காலம் யூதராக இருந்தவர். அவர் இந்தத் தண்டனையை நிறைவேற்றக் கொஞ்சம் தாமதப்படுத்தினார். அதற்குள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தானே ஒரு முஸ்லிமாக மாறத் தயார் என்று சரணாகதி அடைந்து விட்டான் ஸேவி. மேஹ்மத் எபின்டி என்ற பெயரை அவனுக்குச் சூட்டி அவனைத் தன் அரண்மனை வேலைக்காரனாகவே கல்தான் நியமித்துவிட்டான்.

சபட்டாய் ஸேவியின் போலித்தனம் வெளியான போது அவனைப் பின்பற்றி வந்த அநேக சீடர்கள் வெட்கத்துக்கும் துக்கத்துக்கும் ஆளானார்கள். ஆனால் கஸாட்டி மாத்திரம், அசல் அவதாரமான ஸேவி கல்தானால் கைது செய்யப்பட்டவுடன் மாயமாய் மறைந்து விட்டார் என்றும் அந்த இடத்தில் வேறு ஒரு சாதாரண நபரைத் தமக்குப் பதிலாகத் தாற்காலிகமாக அமர்த்தினார் என்றும் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தான்.

முஸ்லிம் ஆன பிறகும் ஸேவி, தன் பழைய மதக் கோட்பாடுகளையே அனுஷ்டிக்கிறான் என்று அறிந்த கல்தான் சீற்றமடைந்து, அல்பானியாவில் உள்ள ஒரு சிற்றூருக்குச் சிறைக் கைதியாக அவனை வெளியேற்றினான். அங்கேயே 1676ல் அவன் காலமானான்.

ஸேவி மீண்டும் மேசையாவாக வருவார் என்று அவன் சீடர்கள் வெகு காலம் நம்பிக் கொண்டிருந்தார்கள்! (ஆதாரம்: 'காரனெட்')





தப்ப வழியின்றி, இதோ இன்னுமொரு ஈ பலி!

இரட்டை வாழ்க்கை நடத்திவந்தது இந்த ஈ... அசுத்த மயமான இடங்களில் ஒருபுறம், அதே சுவட்டில், சுத்தம் மிகுந்த வீடுகளிலே மறுபுறம். சென்ற இடம் எங்கும், பேராபத்தான கிருமிகளைச் சுமந்து சென்றது. இவ்விதமே பறந்த வண்ணமாக ஒரு நாள் ஃப்ளிட் தெளித்திருந்த இடத்திற்குப் போய் விட்டது... அவ்வளவுதான், ஒரு சில விநாடிகளுக்குள் செயலற்று விழுந்தது. செத்துமடிந்தது.



சிவப்பு டப்பாவில் வரும் ஃப்ளிட் ஈக்கள், கொசுக்களையும், பறக்கும் பூச்சிகளையும் கொல்கிறது. சக்தி மிகுந்த ஐந்து மருந்துகளிணைந்த ரசாயனச் சேர்க்கையான ஃப்ளிட் இரு வகைகளில் தாக்குகிறது: பூச்சிகளை, உடனடியாக வீழ்த்துகிறது; பிறகு, அதிவிரைவுடன் கொன்றுவிடுகிறது. சிவப்பு டப்பாவில் வரும் ஃப்ளிட், பறக்கும் பூச்சியினங்களுக்காகவென்றே தனிப்படத் தயாரிக்கப்பட்ட மிகக் கொடிய கொல்லி மருந்து.

ஃப்ளிட் தெளித்து உங்கள் வீட்டைப் பாதுகாப்பீர்

சிவப்பு டப்பாவில் வரும் ஃப்ளிட் ஈக்கள், கொசுக்கள் பிறவகைப் பறக்கும் பூச்சிகள் யாவினையும் கொல்கிறது. அடக்கமான அமுக்குத் தூவல் பெட்டியில் வரும் ஃப்ளிட் பவுடர், மூட்டைப்பூச்சி, கரப்பான், இதர ஊரும்

பூச்சிகள் அனைத்தையும் கொல்கிறது.

Esso எஸ்ஸோ ஸ்டாண்டர்ட் ஈஸ்டர்ன், இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமையுடன் யு.எஸ்.ஏ. வில் இணைப்புப் பெற்றது)

CMBF-7 TM

வட்ட மேஜை

* சர்ச்சை தேவையா?
* உணர்ச்சிச் சித்திரம்
* பாரபட்சம் ஏனோ?

இந்த இதழ் 'கல்கி'யில் (26-9-65) தமிழ் எழுத்துலகத்தைப் பற்றி இரு வேறு பெரும் எழுத்தாளர்கள் எழுதியிருப்பதைப் படித்தேன்.

'ஜனரஞ்சகமான' சிறுகதைகளை வெளியிடுகின்றனவாம் இன்றைய பத்திரிகைகள். அவை வெளியிடும் சிறுகதைகளைப் படித்தால் 'ஜனரஞ்சகம்' என்றால் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டி விடுதல் என்றுதான் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. இன்று, புகழ்பெற்ற பத்திரிகைகள் ஏதேனும் உண்மைக்கு ஒன்றிய — சிறிதேனும் வாழ்க்கையோடு ஒட்டிய — சிந்தனையைத் தூண்டக் கூடிய கதைகளை வெளியிடுகின்றனவா? மொத்தத்தில் சில விழுக்காடுகள் இருக்கலாம்; இவை தமிழ் இலக்கியத்தை வளர்த்து விடுமா என்ன? ஆட்களுக்கு மதிப்புத் தராமல், என்று சிறந்த படைப்புக்களுக்கு இந்தப் பத்திரிகைகள் மதிப்புத் தருகின்றனவோ அன்றுதான் தமிழ் எழுத்தில் 'சிருஷ்டிகள்' உருவாகும். ஏன், தமிழிலக்கியமே உண்டாகும்......

சமுதாயத்தோடு, வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு ஒன்றி — ஒன்றி எழுதப்பட்ட கதைகள் தமிழகத்தில் எத்தனை இருக்கும்? அவற்றினையும் விரல் விட்டு எண்ணிவிடலாமல்லவா? இன்று 'அதீத கற்பனைகள்' தாமே கதைகளாக வெளி வருகின்றன. அப்படியாயின், எழுத்தாளர்களும் — சிறந்த எழுத்துக்களும் தமிழகத்தில் இல்லையா என்ற கேள்வி எழலாம். இல்லாமலில்லை — இருக்கிறார்கள்! 'நல்ல எழுத்துக்களை' அவர்கள் எழுத முடியாதபடி, வாய்ப்புப் பெற்றுள்ள பத்திரிகைகள் அவர்களை விளையடிக்கின்றன.

விமர்சனங்கள் தேவைதான்! அது நல்ல சிறந்த படைப்புக்களுக்குத் தரப்படுவதாக இருக்க வேண்டும். அதுவும் புதுமைப்பித்தன் கூறுவது போல் ஓர் அளவுகோலாக மட்டும் இருந்து பயனில்லை. அங்கு தெளிந்த அறிவும், அகன்ற உள்ளமும், விரிந்த ஆராய்ச்சியும் தேவை. இப்படிப்பட்ட அறிவு ஞானமுள்ளவர்களும் தமிழகத்துக்குத் தேவையே. குறுகிய சர்ச்சைகளுக்கு விமர்சனத்தில் இடமில்லை. ஏனெனில், அப்படிப்பட்ட எழுத்துக்கள் விமர்சனம் என்றும் துலாக்கோலில் இட்டு நிறுப்பதற்கே வராதே!

தஞ்சாவூர்
29-9-65 — தஞ்சை அன்பரசன்

சகோதரி சுப்புலக்ஷ்மியைப் பற்றி வரும் கட்டுரைகளில் ஒன்றிப் போய்ப் படிக்கும் நேயர்களில் நானும் ஒருத்தி. சகோதரியின் சோகம், எதிர்காலப் போராட்டம் இவைகளைப் படிக்கும்பொழுது நெஞ்சம் உருகுகிறது. கண்ணீர் திரையிட்டு மறைக்கிறது. சுப்பிரமணிய அய்யர் எல்லாக் கஷ்டங்களையும் எதிர்ப்புக்களையும் சமாளித்துக்கொண்டு போனதை எழுதியிருக்கும் அழகு உள்ளத்தைத் தொடுகிறது. அநுத்தமாவின் நடை அழகாக உணர்ச்சிகளை அள்ளிச் சொரிகிறது.

சென்னை-28
18-9-65 — எஸ். ராஜி

மத்திய சர்க்காரில் பதவி வகித்து ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறும் அதிகாரிகளின் 'நிவாரண' நடவடிக்கை பற்றிய செய்தி வெளியாகியுள்ளது.

"இந்தியக் குடியரசின் சோஷலிச பாணி சமதர்ம க்ஷேமநல சர்க்கார்" 3000 ரூபாய் சம்பளம் வாங்கும் மத்திய அரசாங்க அதிகாரிகளுக்கு 500 ரூபாய் ஊதிய உயர்வு 1-9-65 முதல் அளித்துள்ளது. இத்துடன் 1000 ரூபாய்க்கு மேலும் 3000 ரூபாய் வரையும் சம்பளம் உள்ளவர்களுக்கு ரூபாய் 125லிருந்து படிப்படியாக ரூ. 500 வரை வழங்கியிருக்கிறது.

ரூபாய் 3000 வாங்குகிற ஓர் அதிகாரிக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படும்போது அது அவருடைய மாத வருமானத்தில் சுமார் 17 சத விகிதமாக இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் சுமார் 150 ரூபாய் வருமானம் உள்ள ஒரு மாதிரி ஊழியருக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படும்பொழுது அது அவருடைய சம்பளத்தில் 3.33 சதவிகிதம்தான் அளிக்கப்படுகிறது. இந்நிலை ஏன்? விலைவாசி ஏற்ற விகிதம் அனைவருக்கும் சமம்தானே? இன்னும் பச்சையாகச் சொல்லப் போனால் பெரிய அதிகாரிகளுக்குப் பல தேவைகள் இலவசமாகவும் சகாயமாகவும் நிறைவேற்றப்பட்டு விடுகின்றன. இந்த நிலையில் பெரிய அதிகாரிகளின் குடும்பத்துக்கு விலைவாசி ஏற்றத்தினால் ஒரு நாளைக்குச் சுமார் 17 ரூபாய் அதிகம் செலவாகிறது எனக் கணக்கெடுத்த பொருளாதார 'மேதைகள்' ஒரு மத்தியதர ஊழியருக்கு மாதம் 17 ரூபாய் சேர்த்துக் கொடுக்கத் தயங்குவானேன்?

பெரியோர்களால் தலைமுறை தலைமுறையாக ஈட்டித் தொகுக்கப் பெற்ற செல்வங்களுக்கும், தன் துணிகரமான முதலீட்டினாலும் தொழில் நுட்பத் திறமையினாலும் நியாயமான வியாபாரத் தந்திர அடிப்படையிலும் பொருளீட்டும் தொழில் அதிபர்களுக்கும் "உச்ச வரம்பு" நிர்ணயித்து, 'சமூக ஏற்றத் தாழ்வை நீக்க அனவரதம் பாடுபடும் ஏழை பங்காள சர்க்கார்' இப்படி அதிகார வர்க்கத்தினருக்கு மட்டும் 'உச்ச வரம்பு' இன்றி ஊதாரித்தனமாக அள்ளி வழங்கும் மர்மம் என்ன? அதிலும் ஆகஸ்ட் மாதம் 30ந் தேதி அரசாங்கச் செலவில் சிக்கனத்தைப் பற்றி அலறிய சர்க்கார் செப்டம்பர் முதல் தேதியன்று இப்படி முரணாகச் செயல்படுவானேன்?

கோவை-1
2-9-65 — பீவிபென்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon